**அலெப்போ நகர் மீதான தாக்குதல்கள் நிறுத்தம்**

*48 மணி நேரப் போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது*

பக்கம் 14 -15

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c

தெளிவான காலநிலை

சுடர் 31 கதிர் 204 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 03, வெள்ளிக்கிழமை 17.06.2016

## வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் தென்பகுதி மீனவர்கள் அட்டகாசம்

### கட்டைக்காட்டு மீனவர்களின் வலைகள் அறுப்பு அதனால் ஏற்பட்ட கைகலப்பில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
கட்டைக்காடு கடற்கரையில் கடலட்டை பிடிக்கச் சென்ற பிற மாகாண மீனவர்கள் கட்டைக்காடு மீனவர்களின் வலைகளை நேற்றும் அறுத்து நாசம் செய்துள்ளனர். அதனால் வெகுண்டெழுந்த கட்டைக்காடு மீனவர்கள், பிற மாகாண மீனவர்களைக் கடலில் பக்.23

## பொருத்து வீட்டுக்குப் பதிலாக கல் வீடு அமைக்கும் சாத்தியம்

### மைத்திரி தலைமையிலான கூட்டத்தில் கருத்து விரைவில் அமைச்சரவைக்கு இறுதி முடிவு

கொழும்பு, ஜூன் 17
பொருத்து வீட்டுக்குப் பதிலாக கல் வீடு அமைப்பதற்குச் சாத்தியம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், பொருத்து வீடு பொருத்தமில்லாதது என்ற கருத்து பக்.23

## யோசிதவுக்கு பிணை

கொழும்பு, ஜூன் 17
கறுப்புப் பணக் குற்றச்சாட்டின் கீழ் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் யோசித ராஜபக்சவைப் பிணையில் விடுவிக்க கல்கிசை நீதிவான் மன்றம் உத்தரவிட்டுள்ளது. சந்தேகநபரான யோசித ராஜபக்ச நேற்று நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.
கறுப்புப் பணத்தைப் பயன்படுத்திக் கொழும்பு தெகிவளைப் பகுதியில் வீடொன்றைக் கட்டினார் என அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப் பக்.25

# தமிழ் மக்கள் இனியும் ஏமாறத் தயாரில்லை

### நீதியைப் பெற்றுத்தருவது ஐ.நாவின் கடமை ஆணையாளரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 17
தமிழ் மக்கள் இனியும் ஏமாறத் தயாரில்லை. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தருவது ஐ.நா.வின் கடமை.
இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனிடம் நேரில் வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.
அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை வொசிங்டனில் நேற்று மாலை சந்தித்தார். இதன் போதே மேற்படி விடயங்களை பக்.25

## நம்பிக்கையுடன் உள்ளோம் எம்மை ஏமாற்றிவிடாதீர்கள்

### வலி. வடக்கில் மீள்குடியமர்த்தப்படாத மக்கள் ஜனாதிபதி மைத்திரிக்கு உருக்கமான கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
கடந்த டிசெம்பரில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 6 மாதங்களுக்குள் சகல மக்களையும் மீள்குடியேற்றுவேன் என்று கூறியிருந்தார். எனினும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையுடன் அவர் கூறிய 6 மாதங்கள் நிறைவடையவுள்ள நிலையில், எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று ஜனாதிபதிக்கு ஞாபகப்படுத்தியுள்ளனர் வலி. வடக்கு மக்கள். பக்.23

## வெளிநாட்டு நீதிபதிகள் வேண்டுமா இல்லையா?

### நல்லிணக்கப் பொறிமுறை பற்றிய கருத்துக்களை முன்வைக்க மன்னார் பிரஜைகள் குழு அழைப்பு

மன்னார், ஜூன் 17
நல்லிணக்கப் பொறிமுறைகள் உருவாக்குவது தொடர்பில் மக்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற் காக, செயலணி ஒன்று மன்னார் மாவட்டத்தில் நியமிக்கப் பட்டுள்ளது. இந்தச் பக்.23

## 1, 200 கிலோ மீற்றர் வீதிகளை வடக்கில் சீரமைக்க ஒப்பந்தம்

### கொழும்பில் நேற்றுக் கைச்சாத்து

யாழ்ப்பாணம், ஜூன் 17
வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகள் மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ள ஆயிரத்து 200 கிலோ மீற்றர் நீள வீதிகளைப் புனரமைப்பதற்கு, பக்.23

## ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு இதுவே இந்தியாவின் விருப்பம்

### என்கிறார் தூதுவர் சின்ஹா



கொழும்பு, ஜூன் 17
சகல சமூகங்களும் ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வின் மூலம், இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டும். ஒன்றுபட்ட இலங்கைக்குள் இந்த அரசியல் தீர்வு அமையவேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா. அவர் மேலும் தெரிவித்ததாவது:
மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பக்.23

## மங்களவின் ஆலோசகராக ஹரீம் பீரிஸ்

கொழும்பு, ஜூன் 17
வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கான ஆலோசகராக ஹரீம் பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.
வெளிவிவகார அமைச்சரிடமிருந்து இதற்கான நியமனக் கடிதத்தை நேற்று அவர் பெற்றுக்கொண்டார்.
சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில், ஜனாதிபதி பக்.23

## நல்லாட்சியை உறுதிப்படுத்த அதிகளவு மாற்றங்கள் தேவை

### ஐ.நா. விசேட நிபுணர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 17
இலங்கையில் நிலைத்து நிற்கக் கூடிய ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி நிலவுகின்றது என்பதை அடையாளப்படுத்த அதிகளவு மாற்றங்களைச் செய்யவேண்டிய தேவையுள்ளது.
இவ்வாறு பக்.25

போன் ஒன்று பேர்சாக மாறியது

Digitized by Noolaham Foundation.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## யாழ்ப்பாண பிரதம தபாலகத்தில் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்.பிரதம தபாலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் நேற்று நண்பகல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தபாலக உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தபாலகத்துக்கு முன்பாக கே.கே.எஸ்.விதியோரமாக நின்று பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

"நாடு தழுவிய ரீதியில் தபால் பணியாளர்கள் மேற்கொண்டு வரும் தொழிற் சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பிரதம தபாலக பணியாளர்களான நாங்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளோம்"- என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தால் தபாலக பணிகள் யாவும் முடங்கின. "நேற்று முன்தினமும் தபாலக உத்தியோகத்தர்களான நாங்கள் அனைவரும் மேலதிக வேலையைத் தவிர்த்து சட்டப்படி வேலைப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தோம்"- என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தால் குடாநாட்டுக்கான உள்ளூர் தபால்விநியோகம் நேற்றுப் பாதிக்கப்பட்டது. நேற்று முன்தினத் தாம் மேற்கொண்ட சட்டப்படி வேலையால் தபால்களை தரம்பிரிக்கும் பணிகள் பாதிக்கப்பட்டன.

இந்த தபால் தரப் பிரிப்பு பாதிப்பால் நேற்றைய தபால் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டது- என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(4,17,101)

# சிறார்களின் போசாக்கில் அதிக கவனம் தேவை

### யுனிசெப் நிறுவனம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 17

இலங்கையில் உள்ள சிறார்களின் போசாக்குக் குறித்து அதிக கவனமெடுக்க வேண்டியுள்ளது என்று யுனிசெப் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இரண்டு லட்சம் பேர் வரையானோர் குட்டையான பிள்ளைகளாக இருக்கின்றனர். மூன்று லட்சம் பேர் மெலிந்து நலிவடைந்து போகும் நிலைக்கு உள்ளாகியிருக்கின்றனர். நான்கு மில்லியன் வரையிலான பிள்ளைகள் இரத்தச் சோகையால் அவதிப்படுகின்றனர். போசாக்கு தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று அந்த நிறுவனத்தைச் சேர்ந்த வைத்தியர் காமினி ஜயகொடி தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டச் செயலகத்தில் கடந்த 13 ஆம் திகதி இடம் பெற்ற போசாக்கு தொடர்பில் காத்திரமான செயற்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலான விழிப்புணர்வை அதிகாரிகளுக்கு வழங்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது: இன்றுள்ள பிள்ளைகளிடையே உடற்பருமன் அதிகரித்துக் காணப்படுகிறது. பிள்ளைகள் சுறுசுறுப்பாக செயற்படாதிருப்பதே அதற்கான காரணம். பாடசாலைப் பிள்ளைகளில் நூற்றுக்குப் பதினைந்து வீதமானோர் உடல் பருமன் கொள்ளும் ஆபத்துக்கு முகம் கொடுக்கின்றனர்.

காலையில் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளை மாலையில் மேலதிக வகுப்புக்குச் செல்கிறது. மாலையில் வீடு திரும்பும் பிள்ளை பிஸ்கற் பைக்கற்றொன்றுடன் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் அமர்ந்து கொள்கிறது. இந்த செயல்நிலைகள் காரணமாக பிள்ளைகள் சுறுசுறுப்பாக தமது நேரத்தைக் கழித்திருப்பதற்கான வாய்ப்புக் கிட்டுவதில்லை.

அதேபோன்று நாட்டிலுள்ள பெண்களில் மூன்றில் ஒரு பங்கினர் உடற்பருமன் காரணமாக அவதிப்படுகின்றனர். இந்த நிலைப்பாட்டை நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. இன்று நடைபாதைகளில் உடற்பருமன் அதிகம் கொண்டவர்களே பெருமளவில் நடை பயில்வதைக் காணமுடிகிறது.

முன்னைய காலங்களில் இந்த நாட்டு மக்களில் பெருமளவிலானோர் வைசூரி, வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்களாலேயே சாவடைந்தனர். தற்போது தொற்று நோய் காரணமாக சாவடைவோரின் தொகை வெகுவாகக் குறைந்து போயுள்ளது.

ஆனாலும் இதற்குப் பதிலீடாக உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, புற்று நோய்கள் அதிகரித்துக் காணப்படுகிறன. இந்த விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது என்றார்.

(ற-ரி2, 22)

## பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் குறித்து விழிப்புணர்வு செயற்பாடுகள்

### கிளிநொச்சி, பளை பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றது

கிளிநொச்சி, ஜூன் 17

கிளிநொச்சி, பளை பொலிஸாரால் பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பளை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப் பதிகாரி சனத் அமரசிறி தெரிவித்தார்:

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெறும் குற்றங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது சிறு மற்றும் பெருங்குற்றங்கள் குறைவடைந்து காணப்படுகின்றன.

இந்த வருடத்தின் கடந்த 5 மாத காலப்பகுதியில் எமது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 10 குற்றங்களே பதிவாகியுள்ளன.

கடந்த 5 மாதகாலங்களில் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 3 வழக்குகளும் குடும்ப தகராறு மற்றும் அடித்து காயம் ஏற்படுத்தியமை தொடர்பாக 3 வழக்குகளும் களவு மற்றும் கொள்ளை தொடர்பாக 4 வழக்குகளும் பதிவாகியுள்ளன.

பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஏனைய துறையினருக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் எமது பொலிஸ் பிரிவினரால் மாதாந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த குற்றச்செயல்களில் இருந்து மாணவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்து கொள்ளும் சூழலும் காணப்படுகின்றது - என்றார்.

(ற-21,ரி3)

## இலங்கைக் கடலில் மீன் பிடித்த தமிழக மீனவர்கள் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 17

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து படகொன்று கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினர் காங்கேசன் துறையில் வைத்துப் பதிவுகளை மேற்கொண்ட பின்னர் யாழ். மாவட்ட நீரியல்வளத்துறை திணைக்களத்தினரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த மூவரையும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

(ற-4,101,107)

## வழித்தட அனுமதி இன்றி பயணிகள் ஏற்றிய சாரதிக்கு நீதிமன்றம் தண்டம்

சாவகச்சேரி, ஜூன் 17

வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றிய வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 35 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களில் விறகு ஏற்றிச் சென்ற இரு வாகனங்களின் சாரதிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் மது போதையில் வாகனம் செலுத்திய இரு சாரதிகளுக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபாவும் காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகன வரிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 8 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

(ற-9)

## கருங்குளவிகள் கொட்டியதில் மாணவர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

தனியார் கல்வி நிலையம் சென்ற மாணவர்கள் 4 பேரைக் கருங்குளவிகள் கொட்டியுள்ளன. அதனால் பாதிப்புக்குள்ளான மாணவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் மீசாலையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. 12 வயதுடைய 2 மாணவர்களும் 14 வயதுடைய 2 மாணவிகளுமே பாதிப்படைந்துள்ளனர்.

ஒழுங்கை ஒன்றினூடாகச் சென்றுகொண்டிருக்கும் போது குறித்த மாணவர்களைக் குளவிகள் கொட்டியுள்ளன.

(ற-4,9)

## பாடசாலை அதிபர் ஒருவரின் கனடா பயணத்தில் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர் ஒருவர் பெறா மகளின் பூப்புனித நீராட்டு விழாவுக்குச் செல்வதாகக் கூறி கனடா சென்றுள்ளார். ஆயினும் அவர் வங்கி ஒன்றின் பணியாளருக்கான வாய்ப்பில் சென்றுள்ளார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. அந்த விவகாரம் அதிகாரிகளின் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிபர் பாடசாலையில் அதிபராக இருந்தபோதும் ஓர் காப்புறுதி நிறுவனத்தின் முக்கிய பதவியிலிருந்து வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிபர் பெறாமகளின் புப்புனித நீராட்டு விழாவுக்கு என்றுகூறி கல்வி அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெற்று கனடா பயணமாகியுள்ளார். ஆனால் அவர் வங்கியின் பணியாளருக்கான வாய்ப்பில் சென்றுள்ளார் என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அதிபர் உண்மையை மறைத்து அனுமதி கோரியுள்ளார் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த அதிபர் காப்புறுதி நிறுவனத்தின் ஓர் புலமைப் பரிசிலில் பயணமாவது குறித்த நிறுவனத்தால் விளம்பரப்படுத்தப்பட்ட பதாகை மூலம் உறுதியாகியுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் மாகாணத் திணைக்களம் முதல்கட்ட விசாரணையை நடத்தும் என்றும் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, பாடசாலையின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு குறித்த அதிபரை பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யுமாறு பாடசாலையின் ஒரு தரப்பினரால் பல மாதங்களுக்கு முன்னரே கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது என்றும், எனினும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-4,10)

தேசிய போசனை மாதம் ஜூன் - 2016
நார்ச்சத்து அதிகமாக உள்ள மரக்கறி வகைகளை உணவில் சேர்க்கும் போது மலச்சிக்கல், புற்றுநோய், கொலஸ்ரோல் அகத்துறிஞ்சல் குறைந்து ஆரோக்கியம் மேம்படும் உற்சாகம் பொங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலையம் அமையப்போவது எந்த இடத்தில்?

## ஒரு வாரத்துக்குள் பிரதமரின் பதில் கிடைத்துவிடும் என்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஜுன் 17

ஓமந்தையிலா அல்லது தாண்டிக்குளத்திலா பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பது என்பது தொடர்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு வாரத்தினுள் பதில் வழங்குவார் என்று நம்புவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. பொருளாதார மத்திய நிலையம் அமைப்பது தொடர்பிலான விவகாரம் சர்சையாகியிருந்தது. அதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட நிகழ்சி நிரல் ஒழுங்கில், பொருளாதார மத்திய நிலையக் காணி ஒதுக்கீடு தொடர்பிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களுள் ஒருவரான அமைச்சர் ரிசாத் பதியுதீன், இந்த விடயம் தொடர்பில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பதில் வழங்குவார் என்று குறிப்பிட்டார். இதற்கு முதலமைச்சர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பதில் ஒரு வாரத்தினுள் கிடைக்கப் பெறும் என்று குறிப்பிட்டு அடுத்த விடயத்துக்குச் செல்ல முற்பட்டார்.

இதன் போது வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக, இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண சபையில், தாண்டிக்குளம் காணியை பொருளாதார மத்திய நிலையம் அமைக்க வழங்குவதாகக் குறிப்பிட்டு பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தது. பிரேரணையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பில் இருக்கின்ற நீங்கள் (முதலமைச்சர்) அதன் பின்னர் எவ்வாறு பிரதமருக்குக் கடிதம் எழுத முடியும் என்று கேள்வி எழுப்பினார்.

இதன் போது முதலமைச்சர், வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, நாம் இதை அமைப்பதற்கான இடத்தெரிவு தொடர்பில் அரசுடன் பேசிக் கொண்டிருந்தோம். அங்கு தீர்மானம் தான் நிறைவேற்றப்பட்டது. ஆனால் நாம் பொருத்தமானதைப் பேசித்தான் செய்ய வேண்டும். வடக்கு அமைச்சர்களுக்கு எதிராக மோசடி குற்றச்சாட்டுக்கள் வடக்கு மாகாண சபையில் முன்வைக்கப்படுகின்றன. அதற்காக அவர்கள் மோசடி செய்தார்கள் என்று கூற முடியாது. பேசி, விசாரித்துத்தான் அதனைக் கூற முடியும். அதுபோல் இந்த விடயத்தையும் பேசித்தான் பொருத்தமான இடத்தை வழங்க முடியும். அதற்காக ஒரு வாரம் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று குறிப்பிட்டார்.

அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஒரு வாரத்திற்குள் முடிவெடுக்கப்படாவிட்டால் பின்னர் இந்தத் திட்டத்தை வடக்கு மாகாணத்திற்கு வெளியில் செல்ல விட முடியாது. அதை மன்னாரில் அமைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் லிங்கநாதன், நீங்கள் மன்னாருக்கும், அநுராதபுரத்துக்கும் இந்தத் திட்டத்தை மாற்றி விட்டதை வெளிப்படையாகச் சொல்லுங்கள். வவுனியா மாவட்டத்திற்கு இந்தத்திட்டம் இல்லைஎன்பதைப் பகிரங்கமாகச் சொல்லி விட்டால், நாங்கள் இதில் கரைச்சல் கொடுத்துக் கொண்டிருக்க மாட்டோம் என்று குறிப்பிட்டார்.

இதற்கு முதலமைச்சர், இந்தத் திட்டம் வவுனியாவிற்குரியது தான். வேறு மாவட்டத்திற்கு மாற்றப்படாது. ஒரு வாரத்தில் பிரதமரின் பதில் கிடைக்கப் பெறும் – என்றார்.

(த-வ-5-21-101)

# கள்ள மணல் ஏற்றிய டிராக்டர் பெட்டி பறிமுதல்

## யாழ். நீதிவான் அதிரடி உத்தரவு

யாழ்ப்பாணம், ஜுன் 17

களவாக மணல் ஏற்றிய இளைஞனுக்கு 2 லட்சம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்த யாழ். நீதிவான் மன்றம், டிராக்டரின் பெட்டியை அரசுடமையாக்குமாறும் கட்டளையிட்டது.

கள்ள மணல் அகழ்வு இன்னும்தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில், யாழ்ப்பாண நீதிவான் மன்றம் நேற்று இந்த அதிரடித் தீர்ப்பை வழங்கியுள்ளது.

அரியாலை நாவலடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் களவாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டுக்காக அரியாலைப் பகுதியில் வைத்துப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அவரையும் டிராக்டரையும் யாழ்ப்பாணப் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். டிராக்டரின் பெட்டிக்குப் பதிவு இலக்கம் எதுவும் காணப்படவில்லை. சாரதிக்கு எதிரான குற்றப் பத்திரத்தைப் பொலிஸார் மன்றில் தாக்கல் செய்தனர். அத்துடன், இந்த வருடத்துக்குள் மட்டும் குறித்த இளைஞன் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் மூன்றாவது தடவையாகக்கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். ஏற்கனவே இவ்வாறான குற்றத்துக்காக இவர் இரண்டு தடவைகள் நீதிமன்றில் ஒரு இலட்சம் ரூபாவைத் தண்டமாகச் செலுத்தியிருந்தார்.

இந்த நிலையில் இளைஞனை இந்தக் குற்றச்சாட்டுக்காக இரண்டு இலட்சம் ரூபாவைத் தண்டமாகச் செலுத்துமாறு உத்தரவிட்ட யாழ்ப்பாண நீதிவான் மன்ற நீதிவான் சி.சதீஸ்தரன், டிராக்டரின் பெட்டியை அரசுடமையாக்குமாறும் நீதிமன்றப் பதிவாளருக்குக் கட்டளையிட்டார்.

(த வ 1 103)

# இந்திய முதலீட்டில் இலங்கை ஆர்வம்

துறைமுகங்கள் மற்றும் விமானத் துறைகளில் இந்தியாவின் முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதில் இலங்கை ஆர்வம் காட்டுவதாக, பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் இந்திய ஊடகத்திற்குத் தெரிவித்ததாவது:

இலங்கையில் சீனா காலடி வைப்பது குறித்து இந்தியா அச்சம் கொண்டிருந்தது. இலங்கையில் பீஜிங்கின் தலையீடு குறித்த புதுடில்லியின் கரிசனைகள் தீர்க்கப்பட்டுள்ளன. சீன முதலீட்டாளர்களுக்குக் காணியை விற்பதற்குத் தற்போதைய அரசு அனுமதிக்கப் போவதில்லை. ராஜபக்ச அரசு புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையில் சவால்களை உருவாக்கியது. மைத்திரிபால சிறிசேன அரசு அதனைத் தீர்த்து வைத்துள்ளது – என்றார். (த-வ-5)

# ஐ.ம.சு.முன்னணியில் டக்ளஸ், தொண்டமான்

கொழும்பு, ஜுன் 17

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இலங்கைத் தொழிலாளார் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து அரசுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளார்கள்.

இந்தத் தகவலை நேற்று வெளியிட்டார் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு நடந்தது. அதில் அமைச்சர் அமுனுகம தெரிவித்ததாவது:

ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்துள்ளன.

நல்லெண்ண ஒப்பந்த அடிப்படையில் அவர்கள் இனி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து, கட்சியின் அமைப்பாளர்களாகப் பணிபுரியவுள்ளனர் -என்றார். (த வ 5)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 511
சீட்டிழுப்பு திகதி 2016.06.16
வெற்றி இலக்கங்கள்
03 29 30 60 O
ரூ. 59,571,900/=
Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1271
சீட்டிழுப்பு திகதி 2016.06.16
வெற்றி இலக்கங்கள்
06 20 23 61 B
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 17,436,640/=
தொ.பே. 011 4062002 / 0114062962 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space JY என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு 1919

# மகிந்தவை விட்டுப் பலர் மைத்திரி பக்கம் பாய்வர்

## அமைச்சர் சமரசிங்க ஆருடம்

கொழும்பு, ஜுன் 17

மகிந்த ஆதரவு ஒன்றிணைந்த எதிர்க்கட்சியிலுள்ள பலர் வெகு விரைவில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கொள்ளவுள்ளனர் என திறன் அபிவிருத்தி மற்றும் முறைசாராக் கல்வி அமைச்சர் மகிந்த சமரசிங்க ஆரூடம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி சார்பாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு 51 ஆதரவு வாக்குகளே கிடைத்தன. அதில் மக்கள் விடுதலை முன்னணியினர் ஐவரும் அடங்குகின்றனர். அவர்களது எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

தீர்மானம் தோற்றதால் சில நன்மைகளும் உள்ளன. இன்னும் சில நாள்களில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியிலிருந்து சிலர் எம்முடன் இணைவதற்குத் தீர்மானித்துள்ளனர். அவர்களது பெயர் விவரங்களை இந்த இடத்தில் வெளியிடுவது அவ்வளவு பொருத்தமல்ல. எனினும் இந்தத் தகவல்கள் இன்னும் சில தினங்களில் வெளியாகலாம்.

நிதி அமைச்சருக்கு எதிரான பிரேரணையின் வாக்கெடுப்பின்போது ஒன்றிணைந்த எதிர்க்கட்சி சார்பில் பலர் சமுகமளித்திருக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, கம்யூனிசக் கட்சியின் பிரதிநிதி ஆகியோரும்கூட வாக்கெடுப்புக்குச் சமுகமளிக்கவில்லை -என்றார்.

(த-வ-5

# கொக்கெயின் மீட்பு; இன்ரப்போலின் உதவியுடன் விசாரணை

சீனி மூடைகளுக்குள் மறைத்து வைத்து இலங்கைக்குள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 91 கிலோகிராம் எடை கொண்ட கொக்கெயின் போதைப்பொருள் கடந்த 14 ஆம் திகதி ஒறுகொடவத்தையில் உள்ள சுங்கத்திணைக்கள கொள்கலன் பரிசோதனைப் பிரிவில் வைத்துக் கைப்பற்றப்பட்டது.

குறித்த போதைப்பொருள் நாட்டுக்குள் கடத்தப்பட்டதன் பின்னணி குறித்து விரிவான விசாரணைகளை மேற்கொள்வதற்காக சர்வதேசப் பொலிஸாரின் (இன்ரபோல் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அஜித்ரோகணதெரிவித்துள்ளார். இலங்கைக்கு வந்துள்ள வெளிநாட்டவர்களின் பாவனைக்காகவா அல்லது இங்கு வைத்து வேறொரு நாட்டுக்கு அனுப்பி வைப்பதற்காகவா குறித்த போதைப்பொருள் இங்கு கடத்தி வரப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ளும் கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். (வ-5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.மயில்வாகனம் லினாஷ்குமார்
B.A, PGDE, MEd.(Reading)
SLPS 111



எமது பாடசாலையில் கடந்த 2009.06.29 தொடக்கம் ஆசிரியராகக் கடமையாற்றிவரும் திரு.ம.லினாஷ்குமார் அவர்கள் இன்றைய நாளில் (17.06.2016) கொழும்பு D.S. சேனநாயக்கா கல்லூரியில் இலங்கை அதிபர் சேவை தரம் 111 நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொள்வதையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மென்மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ள இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜுன் 17

தேசிய கலை இலக்கியப் பேரவையும், யாழ். இலக்கிய குவியமும் இணைந்து நடத்தும் கலை இலக்கியக் கருத்தரங்கு 'ஈழத்து இலக்கியத்தின் செல்திசை' நாளை சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொக்குவில் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ் வில் ச.சிவசேகரம் கருத்துரை வழங்கவுள்ளார். (ந-ரி)

# யாவில் குளத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்க

## உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

வலி.தென்மேற்குப் பிரதேசத் தில் சலவைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவி வந்த யாவில்குளம் பராமரிப்பின்றி மணல் மேடாக மாறி அற்றுப் போகும் நிலையில் உள்ளது. இந் தக் குளத்தை நம்பி வாழ்ந்து வரும் இந்தப் பிரதேசத்தில் வசிக் கும் சலவைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு , மேற்படி குளத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவ டிக்கை எடுக்க வேண்டும். - இவ் வாறு உயரப் புலம் கிராம அபிவிருத் திச்சங்கம் சண்டி லிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரைக் கோரியுள்ளது. இதுகுறித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது கிராமத்திலிருக்கும் யாவில் குளம் நீண்ட காலமாக ஆழ மாக்கப்படாமல் மணல் மேடாகி வருகின்றது. இந்தக் குளத்தில் பல சலவைத்தொழில் செய்யும் தொழிலாளிகள் பரம்பரை பரம் பரையாக நூற்றாண்டு காலமாக தொழில் செய்து தமது வாழ்க் கையை ஓட்டிவருகிறார்கள். இந்தக் குளம் தூர்ந்து போனால் அந்தக் குடும்பங்களின் நிலை நிர்க்கதியாகிவிடும்.

குளம் தூர்ந்து போவது என்பது அந்தக் கிராமத்தின் நீர்வளம். சூழல் என்பன பாதிப்புக்குள்ளாகும் என்பது நிதர்சனம்.

சலவைத்தொழிலாளர்களின். நன்மை கருதியும் கிராமத்தின் நன்மை கருதியும் யாவில் குளத்தை ஆழமாக்கிப் புனரமைத் துத் தரவேண்டும்- என்றுள்ளது. (ந 115)

**புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்**
**புலோலி கிழக்கு பருத்தித்துறை சேவிஸ் நிலையம் குத்தகைக்கு வழங்கல்**

எமது சங்க சேவிஸ் நிலையம் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விருப்பமுடையோர் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 1000 வைப்புச் செய்து இதற்கான விண்ணப்பத்தினை தலைமை அலுவலகத்தில் பெற்று அதனைப் பூர்த்தி செய்து ஒரு கடித உறையினுள் வைத்து ஒட்டி 30.06.2016இற்கு முன்னர் **பொதுமுகாமையாளர், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை** என்னும் முகவரியிட்டு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

**முக்கிய குறிப்பு:-** 01. சங்கத்துக்கு ரூபா 100000/= (ஒரு இலட்சம் ரூபா) முற்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
02. கேள்வித்தொகை ரூபா 20,000/= (இருபதாயிரம் ரூபா) இற்கு மேற்பட்டதாக இருத்தல் அவசியமானது.

15.06.2016 (ச/22021) (11,18) பொதுமுகாமையாளர்.

**காணி விற்பனைக்கு உண்டு**
பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின்றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

**தேவை**
- களஞ்சியக் காப்பாளர்
- சாரதி

தகைமை:- முன்அனுபவம்
சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
55, 57, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

## கொடுத்த கடனை கேட்டவருக்கு கொட்டன் அடி

கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்கச் சென்றவர் கொட்டன் அடிக்கு இலக்காகி காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மீசாலை வடக்கு இராமாவிலில் இடம்பெற்றுள்ளது.

24 வயது இளைஞரால் தாக்கப்பட்டு காயங்களுக்கு இலக்கான மீசாலை மேற்கைச் சேர்ந்த 58 வயது நபர் சாவ கச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளார். இந்த நபர் ஒன்றரை லட்சம் ரூபாவை கடனாகக் கொடுத்திருந்தார் எனவும். நீண்டகாலமாக கடன் தொகை திருப்பித் தராத தால்கேட்கச்சென் ற வேளையில் தாக்குதலுக்கு இலக்கானார் என் றும் தெரிவிக்கப் பட்டது.இது தொடர் பில் பொலிஸார் விசாரணை களை மேற் கொண்டு வரு கின்றனர். (ந 9)

## தபால் திணைக்கள கணக்காளராக கஜேந்திரவேல்

வடமாகாண தபால் திணைக் களத்தின் கணக் காளராக கே. கஜேந்திரவேல் நியமிக்கப்பட் டுள்ளார்.

ஏற்கனவே கணக்காளரா கக் கடமை யாற்றிய திரு மதி.எஸ்.கலைச் செல்வன் கட் டடத் திணைக் களத்துக்கு இட மாற்றப்பட்டுள் ளார்.

தபால் திணைக் களத்துக்கு நிய மிக்கப்பட்ட கணக்காளர் கஜேந்திரவேல் முன்னர் திரு கோணமலை மொறவேவ பிர தேச செயலகத் தில் கணக்காள ராக பணியாற் றினார்.

இவர்களுக்கான இந்த இடமாற் றங்கள் மத்திய கணக்காளர் சேவை பணிப் பாளரால் வழங் கப்பட்டுள்ளது. (ந-17)

K-AIMS BUSINESS SCHOOL
Knowledge with aims
APPROVED LEARNING PARTNER ACCA Gold

**நீங்கள் AAT பூர்த்தி செய்தவரா !!!**

உங்களின் சாதனையை கௌரவிக்கும் முகமாக **(ACCA- Association of Chartered Certified Accountants)** பிரித்தானியாவின் சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டயக்கணக் காளர் சம்மேளனத்தின் பரீட்சையை தொடர்வதற்கு **K-AIMS BUSINESS SCHOOL** ஆனது (LKR 186,000 ) பெறுமதியான சலுகையினை வழங்குகின்றது.




SPECIAL OFFER
இச்சலுகையை பெற்றுக்கொள்வதற்கு June 25 ஆம் திகதிக்கு முன்னர் சமுகமளிக்கவும்.

K-AIMS BUSINESS SCHOOL
No 149 - 2/1 K.K.S Road,
JAFFNA.
0773 722 104

**Register Now!!**
புதிய பிரிவுகள்: 25th June 2016

K-AIMS BUSINESS SCHOOL
- 2009ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- கணக்கீடு மற்றும் முகாமைத்துவ கற்கைநெறிகளை வழங்கும் ஒரே ஒரு அங்கீகாரம் பெற்ற தனித்துவமான நிறுவனமாகும்.
- உங்கள் ஆங்கில புலமையை மேம்படுத்த ஆங்கில வகுப்புகள்.
- வங்கிக் கடன் வசதி.

No initial registration fees / no exemption fees for first 3 paper in ACCA

**திருமறைக் கலாமன்றம்**
நடத்தும்
**கூத்துக்கலைக் கூடல்**
18,19 ஜுன் 2016 (சனி, ஞாயிறு)

**முதலாம் நாள்**
மாலை 6.30 மணி
- அரங்க அளிக்கைகள்

*கோவலன் கூத்து (முல்லைமோடி)
(காட்டா விநாயகர் கலாமன்றம், முள்ளியவளை, முல்லைத்தீவு)
*தர்மபுத்திரன் (வடமோடி நாட்டுக்கூத்து)
(அண்ணா முத்தமிழ் கலைக்கலா நாடக மன்றம், சுழிபுரம்)
*வசந்தன் கூத்து
(சிவப்பிரகாசம் குழுவினர், கட்டுவன்)

**இரண்டாம் நாள்**
காலை 9.00 மணி – நண்பகல் 12.30மணி
- கருத்தமர்வும், கண்காட்சியும்

மாலை 6.00 மணி
- நூல் வெளியீடு

அற்றைத் திங்கள் கூத்துருவ நாடக நூல்
- அரங்க அளிக்கைகள்

*அலங்கார ரூபன் (தென்மோடி நாட்டுக்கூத்து)
(கலைமகள் கலைக்கழகம், பருத்திச்சேனை, கன்னாங்குடா, மட்டக்களப்பு)
*இராமபாணம் (மாதோட்ட பாங்கு)
(விழிகள் கலாமுற்றம், பேசாலை, மன்னார்))
*எஸ்தாக்கியார் (தென்மோடி நாட்டுக்கூத்து)
(திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்.)

கருத்தமர்வும்,கண்காட்சியும் - 286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்திலும், நூல் வெளியீடும் அரங்க அளிக்கைகளும் - 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் அமைக்கப்பட்ட மரபு வழிக் களரியிலும் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
care YOU CREATE European Union -திருமறைக் கலாமன்றம்

CSE COLOMBO STOCK EXCHANGE
**பங்குச்சந்தையின் சமகாலப்போக்கு தொடர்பான கலந்துரையாடல்**
(Seminar on current market conditions)

வளவாளர் :- திரு.P. அசோகன் (தலைவர் - இலங்கை நம்பிக்கை அலகுகள் நிதியம்)
காலம் :- யூன் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 முதல் நண்பகல் 12.30மணி வரை
இடம் :- கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்.கிளையில்.
இலவசக் கருத்தரங்கு

முன்பதிவுகளுக்கு:- 222 1455 / 077 ... 2014 ... 142 ... K.K.S.Road,Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணுவர போன்று முல்லைத்தீவும் துரித அபிவிருத்தி அடையவேண்டும்

## கல்வி இராஜாங்க அமைச்சர் விருப்பு

முல்லைத்தீவு, ஜூன் 17

கண்டி இராச்சியத்தில் உள்ள கண்ணுவர என்ற இடம் எவ்வாறு அபிவிருத்தி அடைந்ததோ அவ்வாறு முல்லைத்தீவும் துரிதகதியில் அபிவிருத்திகள் இடம்பெறவேண்டும். இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மூன்று பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடங்களைத் திறந்து வைப்பதற்காக அமைச்சர் நேற்றுச் சென்றிருந்தார். புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட ஆய்வுகூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மண் பெருமைக்குரிய மண் என்று சொல்லலாம். இந்த மண்ணுக்குரிய மக்கள் சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்த மக்கள். இறுதிப் போர் இடம்பெற்றபோது பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்ட மக்கள் இவர்கள். 1815ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்து இறுதியாக வீழ்த்திய இராச்சியம் கண்டி இராச்சியம். அங்கு கண்ணுவர என்ற இடத்தில்தான் இறுதிப் போர் நடந்தது என்று சொல்கிறார்கள். இலங்கையிலே உள்நாட்டுப் போர் நடைபெற்று, இறுதிப்போர் நடைபெற்ற இடம் நாம் இப்போது இருக்கும் இந்த மண். இந்த இடத்தின் அபிவிருத்திகளைத் துரிதகதியில் செய்ய வேண்டிய கட்டாயம் அரசுக்கு உண்டு என்பதையும் ஞாபகப்படுத்த வேண்டும். இன்று கண்ணுவர பகுதி பல அபிவிருத்திகளை அடைந்துள்ளது.

இன்றைய கால நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இந்த முல்லைத்தீவு மாவட்டமும் வளர்ச்சியடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அந்த முயற்சிகளை இந்தப் புதிய அரசு எடுத்துவருகிறது. அது இன்னும் துரித கதியில் நடைபெறவேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

கடந்த காலத்திலே இந்தப் பகுதியில் நடைபெற்ற ஒவ்வொரு விடயங்களுக்கும் கடந்த அரசு பொறுப்புச் சொல்ல வேண்டும். கிளிநொச்சி வடபகுதியில் பாதை அபிவிருத்தி ஒன்றுதான் நடந்தது. அதைத் தவிர எங்களுக்கு அபிருத்தி என்பது கிடைக்காத ஒன்றாகத்தான் இருந்து வருகிறது. பாதையை மட்டும் அபிவிருத்தி செய்து விட்டால் மக்களுடைய எல்லாக் குறைகளும் தீர்ந்து விடமுடியாது என்பது என்னுடைய கருத்தாகும். பல்வேறு துறைகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதில் விசேடமாக பாடசாலைகள், வேலைவாய்ப்பு, மக்களுடைய கலை, கலாசாரம் பேணப்பட வேண்டும்- என்றார்.



முல்லைத்தீவுக்குச் சென்ற அமைச்சர் முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, துணுக்காய் வலயத்துக்கு உட்பட்ட முத்துஐயன்கட்டு வலதுகரை மகாவித்தியாலயம் என்பவற்றில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடங்களைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வுகளில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மருத்துவர் சி. சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-21,ரி7)

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். கல்வி வலயத்தால் நடத்தப்படும் 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை பி.ப. ஒருமணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என ஆரம்பக்கல்வி விளையாட்டுச் செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி தெரிவித்துள்ளார். ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் செல்வி மைதிலி தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன் கலந்துகொள்வார்.

கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய மூன்று கோட்டங்களில் கோட்டரீதியாக வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களைப் பெற்ற 700 பாடசாலை மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றவுள்ளனர் என அவர்மேலும் தெரிவித்தார். (ந-ரி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை அதிபர் சேவைக்கு (SLPS) பதவி உயர்வு பெற்ற நண்பன்
**திரு.பரமநாதன் கமலதாசன்**
BA(Cey),MEd (Hons),PGDE, PGDM, MA in Eco., SPI Trd Com





ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் (ETF) யாழ்.பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்ற நண்பன்
**திரு.ஜெயதீசன் தமிழ்அழகன்**
B Com (Acct Sp),HNDA

மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று நீடூழி காலம் சிறப்புடன் வாழ மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துபவர்கள்: பரமேஸ், தீபன்,உமா, விஜயன், ஸ்ரீ, நிரோஷ் - (நல்லூர் நண்பர்கள்)


## முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு ஒத்திகை

அனர்த்த முகாமைத்துவ பிரதேச செயலகப் பிரிவில் ஜே/398 கிராம அலுவலர் பிரிவில் இடர் முகாமைத்துவப் பிரிவால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு ஒத்திகைப் பயிற்சி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) தெரிவித்தார்.

இன்று வெள்ளிக்கிழமை அல்வாய் வடமத்தியில் பி.ப. 2 மணிக்கு நடைபெறும் இந்த ஒத்திகைச் செயற்பாட்டால் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ந-ரி)

## பெண்களுக்கு 30 வீத இடம் தர சட்டத்தில் திருத்தம் வரும்

கொழும்பு, ஜூன் 17

வேட்பாளர் பட்டியலில் பெண்களுக்கு 30 சதவீத இடமளிக்கும் வகையில், மாகாண சபைகள் தேர்தல் சட்டம் திருத்தப்படவுள்ளது. அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட இணை அமைச்சரவைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்ததாவது:

வேட்பாளர் பட்டியலில் பெண்களுக்கு 30 சதவீத இடமளிக்கும் வகையில், 1988ஆம் ஆண்டின் 2ஆவது இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பான சட்ட வரைவு மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவை அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது என்றார்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வேட்பாளர் பட்டியலில் 25 சதவீதம் பெண்களை உள்ளடக்க வழி செய்யும் சட்டத் திருத்தம், கடந்த மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (5)


Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை 021 2227712
Ceylon Theatres
www.ceylontheatres.lk



## கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு மற்றும் கற்றல் நடவடிக்கைகள்

2014/2015 கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக அனுமதிபெற்ற மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வுகள் எதிர்வரும் (27.06.2016) திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 01.07.2016 வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

புகுமுக மாணவர்களாகத் தம்மைப் பதிவு செய்தவர்கள் இவற்றுக்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள். இந்த அறிமுக நிகழ்வுகள் நிறைவு பெற்றதும் 04.07.2016 திங்கட்கிழமையில் இருந்து மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும்.

விடுதி வசதி பெறுவதற்கு விண்ணப்பித்து விடுதி வசதி வழங்கப்பட்டவர்கள் 26.06.2016 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் விடுதிகளில் அனுமதிக்கப்படுவார்கள்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுக் கடன் சுமையை தாங்க வாருங்கள் மக்களே!

## ஜனாதிபதி மைத்திரி அழைப்பு

கொழும்பு, ஜூன் 17

வெளிநாட்டுக் கடன் சுமையை நாடு எதிர்நோக்கியுள்ளது. இந்தச் சவால் மிகுந்தவேளையில் அனைத்துக் கருத்து முரண்பாடுகளையும் மறந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அறிவு, நுண்ணறிவு மற்றும் வழிகாட்டலை வழங்க வேண்டும்.

இவ்வாறு சட்டத்தரணிகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் சட்டத்தரணிகள் சிலருக்கும் இடையே நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சிநேகபூர்வ சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனை வலியுறுத்தினார். புதிய அரசு பதவியேற்று ஒன்றரை ஆண்டு காலத்திற்குள், அதுவரை நாடு இழந்திருந்த பல்வேறு வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடிந்துள்ளது என்று ஜனாதிபதி இதன்போது நினைவு கூர்ந்தார்.

நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கண்கூடாகப் பார்க்க முடியாதபோதும் சர்வதேச ரீதியில் பெரு வரவேற்பை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, கருத்துக்களையும் மற்றும் விமர்சனங்களையும் தெரிவிக்கின்ற எந்தவொரு நபருக்கும் செவிசாய்க்கும் நபர் என்ற ரீதியில் அனைவரதும் ஒத்துழைப்பைப் பெற்று நாட்டைக் கட்டியெழுப்புவதே தனது அவாவாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

நாட்டில் நீதிமன்றத்தின் சுதந்திரத்தை உறுதி செய்து ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் பயணத்துக்கு சட்ட வல்லுநர்களான தாம், தம்மாலான உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை வழங்குவோம் என்று இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சட்டத்தரணிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந 5)



# ஒட்டுசுட்டானில் 152 பேருக்கு காணி அனுமதிப் பத்திரங்கள்

முல்லைத்தீவு, ஜூன் 17

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள தச்சடம்பன் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 152 பேருக்கான காணி அனுமதிப் பத்திரங்கள் வழ்ங்கப்பட்டன.

நேற்று முற்பகல் தச்சடம்பன் கிராம அலுவலர் அலுவலகத்தில் கிராம அலுவலர் வே.அருணோதயம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. பிரதேச செயலாளர் ய.அநிருத்தன் காணி அனுமதிப் பத்திரங்களை வழங்கினார்.

அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டாலும் இந்தக் காணிகள் அரசின் பொறுப்பிலேயே உள்ளன என்பதனை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். இந்தக் காணிகளை எவரும் விற்கவோ அல்லது கொள்வனவு செய்யவோ முடியாது. காணிகளை உரிய முறையில் பராமரிப்புச் செய்பவர்கள் மற்றும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு அவர்களின் பராமரிப்பைப் பொறுத்து நன்கொடையாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தால், முன்னெடுக்கப்படும்- என்று பிரதேச செயலாளர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கிராமத்தின் முன்னாள் கிராம அலுவலர் தனபால்ராஜ், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் கு.மௌலீசன் மற்றும் குடியேற்ற உத்தியோகத்தர், காணிக் கிளைப் பணியாளர்கள் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-102)

# கைபேசி பயன்படுத்துவது பற்றி ஜனாதிபதியிடம் கற்கவேண்டும்

## அமைச்சர் மகிந்த அமரசிங்க அறிவுரை

நாட்டில் ஜனாதிபதி மட்டுமே கையடக்கத் தொலைபேசியைச் சரியான முறையில் பயன்படுத்துகின்றார் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து அதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடற்றொழில் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கலந்துரையாடல்களுக்கு வரும் போது சிலருடைய தொலைபேசிகள் ஒலித்துக் கொண்டே இருக்கும். இதன் காரணமாக கலந்துரையாடல்களை மேற்கொள்வது கடினம். ஜனாதிபதி தனது அலுவலகத்துக்கு வந்தவுடன் கையடக்கத் தொலைபேசியை நிறுத்தி வைத்து விடுவார். ஜனாதிபதி வீட்டில் இருக்கும் சந்தர்ப்பத்திலும் இவ்வாறே நடந்துகொள்வார்.

பொலன்னறுவையிலிருந்து கொழும்பு செல்லும்போதும் தனது வீட்டிலிருந்து அலுவல கத்துக்கு வரும்போதும் மாத்திரமே ஜனாதிபதியின் தொலை பேசி பாவனையில் இருக்கும்.

இதேவேளை ஜனாதிபதி பாடல் கேட்பதற்கோ, இணையத்தளம் பார்ப்பதற்கோ, முகநூல் பாவிப்பதற்கோ தனது கைப்பேசியைப் பயன்படுத்தமாட்டார். தொலைபேசிப் பயன்பாட்டுக்கு முன்னுதாரணமாக இருக்கும் ஜனாதிபதியிடம் இருந்து நாமும் கற்றுக் கொள்வது சிறந்தது- என்றார். (ந-5)

# பரீட்சை மண்டபம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை மண்டபம் இடமாற்றப்பட்டுள்ளது என்று யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் வணிகத்துறை மண்டபத்தில் நடைபெற இருந்த பரீட்சையானது தவிர்க்க முடியாத காரணத்தால் அன்று திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ந ரி)

# யோகா தினத்தை முன்னிட்டு விடுமுறைவழங்கக்கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் நாளை சனிக்கிழமை விடுமுறை வழங்க வேண்டும் என்று வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார் என கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி அ.பாலமுரளி தெரிவித்தார்.

இந்திய துணைத்தூதரகமும் வடமாகாண கல்வி அமைச்சும் இணைந்து யோகா தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சியை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நாளை சனிக்கிழமை நடத்தவுள்ளன. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார். வடமாகாண பாடசாலைகளைச் சேர்ந்த 10 ஆயிரம் மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் மாணவர்கள், ஆர்வலர்கள் என அனைவரும் பங்கேற்பதற்கு வசதியாக தனியார் கல்வி நிலையங்கள் விடுமுறை வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ந-ரி)

# தகவலறியும் சட்ட வரைவு ஏகமனதாக நிறைவேற்றப்படும்

## நம்பிக்கை வெளியிடுகின்றது அரசு

கொழும்பு, ஜூன் 17

எதிர்க் கட்சிகளின் ஆதரவுடன் எதிர்வரும் 23ஆம் திகதி தகவலறியும் சட்டவரைவை ஏகமனதாக நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகின்றது என்று அரசு தெரிவித்தது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதி அமைச்சர் கருணாரட்ன பரணவிதாரண இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தகவல் அறியும் சட்டவரைபு 23 ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதத்துக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. எதிர்க்கட்சிகள் சில திருத்தங்களை முன்வைக்கும். இதற்குப் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். அன்றே ஏகமனதாக நிறைவேற்றவும் நாம் எதிர்பார்க்கின்றோம். இல்லாவிட்டால் அதற்கு அடுத்தநாளான 24 ஆம் திகதி அதனை நாம் நிறைவேற்றி நடைமுறைப்படுத்துவோம்.

இந்தச் சட்டவரைவினூடாக தேசிய பாதுகாப்பு விடயங்களையோ நோயாளர்களின் தனிப்பட்ட விவரங்களையோ பெற்றுக் கொள்ள முடியாதவாறும் சில எல்லைகளை வகுத்துள்ளோம்.

எவ்வாறாயினும் மக்களின் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் சுதந்திரத்துக்கு எவ்வித தடையையும் ஏற்படுத்தாது. இந்தக் காரணத்தாலேயே எமது இந்தச் சட்டவரைவு உலகிலேயே 7ஆவது சிறந்த தகவல் அறியும் சட்டவரைவாகத் தரப்படுத்தப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை, இது தொடர்பில் அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்ததாவது:

இந்தச் சட்டவரைவானது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அரசில் கொண்டு வரவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அது முடியாது போனது. 2002 ஆம் ஆண்டு அமைந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசின் போது கொண்டுவருவதற்குத் தீவிர முயற்சிகளை மேற்கொண்டும் இறுதியில் சில காரணங்களால் அது பயனளிக்காது போனது.

அதையடுத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் தற்போதைய சபாநாயகரான கருஜயசூரிய தனி நபர் பிரேரணையாக நாடாளுமன்றுக்குக் கொண்டு வந்தார்.

இதன்போது தகவல்களைப் பெற்றுக் கொள்ள இந்தச் சட்டம் எதற்கு? எம்மிடம் தகவல்களைக் கேட்டால் நாமே கொடுப்போம் தானே என்று கடந்த ஆட்சியாளர்கள் தெரிவித்து இதுதொடர்பில் பின்வாங்கினர். இதனாலேயே இதனை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நாம் தற்போது கொண்டு வந்துள்ளோம் - என்றார். (ந 5)

31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது வித்தியாசாலை ஆசிரியை
திருமதி வி.சேயோன் அவர்களின் அன்புத்தாய்
திருமதி திலகவதி வீரசிங்கம்
அவர்கள் 18.05.2016, புதன்கிழமை மரண-
மடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்.
யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை, வட்டுக்கோட்டை.
(11.18)

கண்ணீர் அஞ்சலி

டென்மார்க்கில் வசிக்கும் எமது நிலையத்தின் ஆயுட்கால
உறுப்பினரான திரு. சி. தவராசா அவர்களின் பாசமிகு
தாயார்
திருமதி மாணிக்கதேவி சிவலிங்கம்
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும்
விளையாட்டுக் கழகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட தொழில் நுட்ப ஆய்வு கூடம் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணனால் நேற்று வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சி.சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, சி.ஸ்ரீகரன் ஆகியோரும், கல்வி அமைச்சின் தமிழ்ப் பாடசாலைகளுக்கான பணிப்பாளர் எஸ். முரளிதரன், வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் , ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-433)

# யாழ். குடாநாட்டின் அமைதியை சீர்குலைக்க இடமளிக்கக் கூடாது

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லாஸுக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்.குடாநாட்டில் நிலவும் அமைதியைச் சீர்குலைக்க இடமளிக்க வேண்டாம் என்று தெரிவித்துள்ள யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி, ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவிலுள்ள பல இடங்களிலும் இடம்பெறும் கால்நடைகளைக் கடத்துதல், இறைச்சியாக்கல் உள்ளிட்ட குற்றச் செயல்களைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுவந்து பொறுப்பேற்றுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லாஸிடம் இங்கு நிலவுகின்ற நிலமை குறித்து அறிவுறுத்திய போதே மேல் நீதிமன்ற நீதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குடாநாட்டில் கால்நடைகள் கடத்தப்படுவதும், அவற்றைத் தேடி அவற்றின் உரிமையாளர்கள் அலைந்து திரிவதும் அதிகரித்துள்ளன. ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவிலுள்ள இடங்களிலிருந்து கால்நடைகள் கடத்தப்படுவதை தடுக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கைவிடுத்து வருகின்றனர். இந்த நிலையில் மேல் நீதி மன்ற நீதிபதி சுட்டிக் காட்டியுள்ளதாவது.

யாழ் குடாநாட்டில் குற்றச் செயல்கள் ஒழிந்து இப்போது அமைதி நிலவுகிறது. அதனைச் சீர்குலைக்க முயற்சிப்போருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு மாதத்துக்கு முன்னர் பல வன்செயல்கள் யாழ்ப்பாணத்தில் அரங்கேறின. நீதிமன்றங்கள் உத்தரவுகளைப் பிறப்பித்தன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், மதப் பெரியார்கள், புத்தி ஜீவிகள், பொதுமக்கள் என பலரும் குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு வலியுறுத்தி வந்தனர். இறுக்கமான நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் பொலிஸாரின் நடவடிக்கைகளையடுத்து, வன்செயல்களும் குற்றச் செயல்களும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. தற்சமயம் போதை வஸ்து, கஞ்சா கடத்தல்கள் மிக நுணுக்கமான முறையில் மேற்கொள்ளப்பட்டாலும், ஒப்பீட்டளவில் அவைகள் ஓரளவு குறைவடைந்துள்ளன.

> மாணவர்களின் குழு மோதல்கள் மற்றும் இளைஞர் மோதல்களைத் தடுப்பதற்கும், இளம் பெண்கள், மாணவிகள் மீதான இளைஞர்களின் சேட்டைகளைத் தவிர்ப்பதற்கும் பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

ஊர்காவற்றுறை பொலிஸ் பகுதிக்கு உட்பட்ட அல்லைப்பிட்டி கிராமத்தில் கடத்தப்பட்ட 6 மாடுகள் இறைச்சியாக்கப்பட்டு மண்டைதீவு ஊடாக படகுகள் மூலமாக குருநகர், பாசையூர் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இத்தகைய கடத்தல் நடவடிக்கைகள் தொடர்வதாகவும், குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ஊர்காவற்றுறைப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு இது தொடர் பில் அறிவுறுத்தல் வழங்கி இந்தச் செயலில் ஈடுபடும் நபர் களைக் கைது செய்து நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும்.

கொள்ளை களவுகள் குறைவடைந்துள்ளன. மாணவர் குழு மோதல்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இளைஞர்கள் வீதிகளில் மோதிக்கொள்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மாணவர்களின் குழு மோதல்கள் மற்றும் இளைஞர் மோதல்களைத் தடுப்பதற்கும், இளம் பெண்கள், மாணவிகள் மீதான இளைஞர்களின் சேட்டைகளைத் தவிர்ப்பதற்கும் பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட வேண்டும். மாலை 6 மணிக்கும் இரவு 9 மணிக்கும் இடையில் சந்திகளில் அநாவசியமாகக் கூடும் மாணவர் குழுக்கள், இளைஞர் குழுக்களை முதற் தடவையாக எச்சரித்து அனுப்ப வேண்டும். இரண்டாவது தடவையாக பொலிஸ் நிலையத்துக்கு அவர்களைக் கொண்டு வந்து, அவர்களின் பெற்றோரையும் அழைத்து, சமூக விரோதக் கூட்டங்கள் கூடியதை விளங்கப்படுத்தி, மீண்டும் அவ்வாறு செயற்படக் கூடாது என்ற எச்சரிக் கையும், அறிவுரையும் வழங்கி, பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும். சட்ட விரோத கூட்டம் கூடியமைக்காக மூன்றாவது தடவையாக பிடிபடுபவர்களை நீதிமன்ற சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும்.

யாழ்.குடாநாட்டில் வன்முறை குழப்பம் ஏற்பட்டால் தொடர் வன்முறையாக நிகழ்வது வழமை. முதலாவது வன்முறையை இறுக்கமாக அடக்கி ஒடுக்கினால், ஆரம்பத்திலேயே வன்முறைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிடும் என்பதும் எங்கள் அனுபவம். சட்டம் ஒழுங்கை நிலைப்படுத்தி, குற்றச் செயல்களைக் குறைத்து, வன்முறையாளர்களைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரு வதற்கு எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் மேல் நீதிமன்றம் பக்கபலமாக இருந்து செயற்படும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி அறிவுறுத்தியுள்ளார். (ற-4)

# பெற்றோர் கண்டிப்புடன் இருந்தால் குற்றச்செயல்களை தடுக்க முடியும்

## உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவிப்பு

கரணவாய், ஜூன் 17

ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளைக் கண்காணித்து வளர்ப்பதன் மூலமே அவர்களைப் பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் குற்றச் செயல்களிலிருந்து பாதுகாக்க முடியும். அவர்களை ஒழுக்கசீலர்களாக உருவாக்கமுடியும். இதன்மூலமே நாட்டில் ஏற்படும் சட்டவிரோதச் செயற்பாடுகளைக் குறைக்கமுடியம். - இவ்வாறு வடமராட்சிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது: எங்கு பார்த்தாலும் கொலை, களவு, பாலியல் துஷ்பிரயோகம் என மலிந்து கிடக்கின்றன. இதற்கு காரணம் யார்?. ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளை சிறுவயது முதல் கண்டிப்புடன் வளர்த்தால் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாது.

இந்தப் பகுதியில் இடம்பெற்று வந்த சட்டவிரோத செயற்பாடுகள் தற்போது குறைவடைந்துள்ளன. அதனை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு பொது மக்களாகிய நீங்கள் பொலிஸாருக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் . எமது கலாசார பாரம்பரியங்களை வெளிநாடுகளிலிருந்து வரும் உறவினர்களே பாதிப்படையச் செய்கின்றார்கள். இளைஞர்கள் பலர் தவறான வழிகளை நாடுவதற்கு வெளிநாடுகளிலிருந்து வருபவர்களும்தான் காரணம். அதனை யாராலும் மறுக்கமுடியாது.

இந்தப்பகுதியில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடு களை காட்டுச் சட்டத்தை நடை முறைப் படுத்திக் கட்டுப்படுத்த முடியும். அவ்வாறு செய்தால் பாதிக்கப்படப்போவது உங்கள் பிள்ளைகள்தான். ஆனால் நாங்கள் அவ்வாறு செய்வதில்லை. சீருடை அணிந்தாலும் ஒவ்வொரு பொலிஸாரிடமும் மனிதாபிமானம் உறைந்துள்ளது. அதனால் தான் சில இடங்களில் விட்டுக்கொடுப்புடன் செயற்படுகின்றார்கள்.

பெண்பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்றோர் அவர்களில் உன்னிப்பாக அவதானம் செலுத்த வேண்டும். அதிக இடங்களில் சிறார்கள் காதல் வயப்பட்டுள்ளனர். உங்களுக்குத் தெரியாமலேயே அவர்கள் அவ்வாறு செயற்படக்கூடும்.

காதலனுடன் கதைக்க விடுவதென்றாலும் கண்டிப்பாக இருங்கள். பல பெண்பிள்ளைகளை காதல் என்ற வலையில் விழுத்தி, ஏமாற்றி, உங்கள் பிள்ளைதொடர்பாகஅசிங்கமான படங்கள், தகவல்களை இணையத்தளங்களில் வெளியிடுகின்றார்கள். இதனால் பாதிக்கப்படுவது பிள்ளையின் எதிர்காலமும் குடும்ப மானமும் தான். எனவே பெற்றோர்கள் கவனமாக இருக்கவேண்டும்.

உங்களுடைய பிரதேசங்களில் ஏதாவது சம்பவங்கள் இடம் பெறும்போது உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்துங்கள். அவர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் எனக்குத் தெரியப்படுத்துங்கள். நான் உடன் அந்த இடத்தில் பிரசன்னமாவேன். ஒவ்வொரு பொது மகனும் சீருடை அணியாத பொலிஸ் என்று எண்ணி செயற்படும் போது எமது பகுதியில் இடம் பெறும் சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும்- என்றார். (ற-4,108)

# கஞ்சா, மாவா வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 17

கஞ்சா கலந்த மாவா மற்றும் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது

யாழ்ப்பாண நகரப் பகுதில் நேற்று நின்றிருந்த ஓட்டோவைப் பொலிஸார் சந்தேகத்தில் சோதனையிடச் சென்றபோது அதிலிருந்த இளைஞன் ஒருவன் பொலிஸாரைக் கண்டவுடன் சிறிய பொதியொன்றைவெளியே வீசியுள்ளார். அதனைப் பரிசோதித்தபோது அதனு மாவா காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் கில்னர் வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த குறித்த இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை பண்ணைச் சந்தியில் நேற்று முன்தினம் உப பொலிஸ் பரிசோதகர் ஜனந்தன் உட்பட்ட பொலிஸ் குழுவினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போது இளைஞர் ஒருவரின் காற்சட்டைப் பையிலிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் யாழ்.நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களை இம்மாதம் 20 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டுள்ளார். (ற-103)

# போதையில் இடையூறு இருவருக்கு அபராதம்

வீதியில் போதையில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு விளை வித்த 2 பேருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மாரிசன்கூடல் பகுதியினைச் சேர்ந்த இருவருக்கும் எதிராக இளவாலைப் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இருவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இருவருக்கும் தலா ஆயிரம் ரூபாவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ற-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தாண்டிக்குளம் இராணுவ முகாம் காணிக்கு உரிமைகோரும் இருவர்

## பொலிஸ் நிலையம் சென்றது பிரச்சினை

வவுனியா, ஜூன் 17
வவுனியா தாண்டிக்குளத்தில் இராணுவ முகாம் அமைந்திருந்த வயல் காணிக்கு இருவர் உரிமை கோரியுள்ளனர். அதனால் இந்த விடயம் வவுனியா பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காணி தனக்குச் சொந்தமானது என்று தெரிவித்து ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். தனது காணியை பிறிதொரு நபர் இன்னொருவருக்கு விற்பனை செய்துள்ளார் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏ-9 கண்டி நெடுஞ்சாலையில் தாண்டிக்குளம் பகுதியில், வயல் காணியில் இராணுவத்தினர் தமது முகாம் அமைத்திருந்தனர். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவ முகாமை விட்டு இராணுவத்தினர் வெளியேறினர். இராணுவத்தினர் முகாம் அமைத்த போது வயல் காணி மண் இடப்பட்டு திட்டியாக்கப்பட்டிருந்தது.

இராணுவத்தினர் வெளியேறிய பின்னர் வயல் மண்ணை சீராக்கி வேலி அடைத்துள்ளார் காணி தனக்குச் சொந்தமானது என்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ள நபர்.

கடந்த வருடம் இந்தக் காணியில் 18 பரப்பை 60 லட்சம் ரூபாவிற்கு காணி தனக்குச் சொந்தம் என்று உரிமை கோரும் மற்றைய நபர் விற்பனை செய்துள்ளார். காணியை வாங்கியவர் அதில் கட்டடம் அமைப்பதற்கான முயற்சிகளை செய்து வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"குறித்த காணியுடன் சேர்த்து பல ஏக்கர் காணி எனது பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் 18 பரப்புக் காணியை நான் விற்பனை செய்துள்ளேன். அதற்கான ஆதாரங்களும் என்னிடம் உள்ளன" - என்று காணியின் உரிமையாளர் என்று கூறி காணியை விற்பனை செய்த நபர் தெரிவித்தார்.



"இது எனது மாமனாரின் காணி. தற்போது மாமனார் இறந்து விட்டார். இதனால் இந்தக் காணியை நானே பராமரித்து வருகின்றேன். இராணுவத்தினர் முகாம் அமைத்தமையாலும், அவர்களிட்ட மண் வயல் காணியில் நிரம்பியிருந்தாலும் எம்மால் விவசாயம் செய்ய முடியாது போனது. இப்போது அந்தக் காணிக்கு பிறிதொரு நபர் உரிமை கோருகின்றார். பொலிஸில் முறையிட்டுள்ளேன்" என்று காணியின் உரிமையாளர் என்று கூறும் மற்றைய நபர் தெரிவித்தார்.

"இந்தக் காணியின் உரிமையாளரிடம் இருந்து காணியைப் பெற்றுள்ளேன். 18 பரப்பு வயல் காணியை 60 லட்சம் ரூபாவுக்கு சட்டபூர்வமாக வாங்கியுள்ளேன். தற்போது தமிழ் தெற்கு பிரதேச சபையிடம் கட்டடம் அமைப்பதற்கான அனுமதி பெற்று கட்டடம் அமைத்து வருகின்றேன்" என்று காணியை வாங்கிய நபர் தெரிவித்தார்.

"காணிக்குரிய ஆவணங்கள் பிரதேச சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஆவணங்கள் சிங்கள மொழியில் இருந்து மொழி பெயர்த்தே எமக்கு வழங்கப்பட்டது. அதில் வயல் காணி என்ற ஒரு விடயம் தெரியப்படுத்தப்படவில்லை. அதனாலேயே கட்டடம் கட்ட அனுமதிகள் வழங்கப்பட்டது" - என்று வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

"இந்தக் காணி வயல் காணியாக எமது திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வயல் காணியில் கட்டடம் கட்டுவதற்கு அனுமதிக்க முடியாது. அந்த கட்டடம் தடை செய்யப்படும். இது தொடர்பான முறைப்பாடுகளும் பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன" - என்று வவுனியா கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் விஜயகுமார் தெரிவித்தார்.

"காணி யாருடையது என்ற விடயம் ஆராயப்பட்டதன் பின்னரே கூறமுடியும். ஆனால் வயல் காணி ஒன்றில் கட்டடம் கட்டுவது தண்டனைக்குரியது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" - என்று வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

(ற-5-21)

## வீடு புகுந்து திருடியவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 17
பண்டத்தரிப்பில் வீடு புகுந்து நகைகளை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி வீடு புகுந்து திருடிய குற்றச்சாட்டில் குருநகர் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது முதலாவது சந்தேக நபர் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டார். இரண்டாவது சந்தேக நபர் தான் சுற்றவாளி எனக் கூறினார்.

மேலதிக விசாரணைகளுக்காக வழக்கு ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள நகை விற்பனை உரிமையாளர் வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் 5இலட்சத்து 22 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றிருந்தனர்.

(ற-4,107)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
இருபாலை முனி கோவில் அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது என்ற ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி ஆயிரத்தெட்டு சங்காபிசேகமும் அன்னதானமும் நடைபெற்று சுவாமி முத்துச் சப்பறத்தில் வீதியுலா வரும் காட்சியும் நடைபெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி)

## மயிலிட்டி கண்ணகை அம்மன் ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
உயர்பாதுகாப்புவலயத்துக்குள் இருக்கும் மயிலிட்டி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முருகன் குளத்தடி அம்மன் ஆலயத்திலும் விசேட பூசைகள் நடைபெறவுள்ளன. பாதுகாப்புப் படையினரின் அனுமதியுடன் ஆலயத்துக்குச் செல்வதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆலயத்துக்குச் செல்லும் அடியவர்கள் அனைவரும் காலை 7 மணியளவில் மாவிட்ட புரம் கந்தசுவாமி கோயிலடிக்கு வர வேண்டும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. பருத்தித்துறையிலிருந்தும் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

புகைப்படக்கருவிகள், அலைபேசிகள் கொண்டுசெல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ரி)

## சட்டவிரோத மீன்பிடி: 11 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
தடை செய்யப்பட்ட தங்கூசி வலையைப் பாவித்து மீன் பிடியில் ஈடுபட்ட 11 பேருக்கு 55 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவர்களது 3 படகுகளிலிருந்து மீட்கப்பட்ட 380 கிலோகிராம் மீன் ஏலத்தில் விடப்பட்டு பணம் நீதிமன்றுக்குச் செலுத்தப்பட்டது.

வேலணைக் கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் மீன்பிடித்த மீனவர்களை கடற்படையினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்தனர் என்று கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் பா.ரமேஸ்கண்ணா தெரிவித்தார்.

கைதானவர்கள் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள். கைதான மீனவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த 11 பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அதனையடுத்து அவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 55 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட 380 கிலோகிராம் மீன் பழுதடையாத நிலையில் காணப்பட்டதால் அவற்றை ஏலத்தில் விற்க மன்று உத்தரவிட்டது. ஏலத்தில் மீன் விற்கப்பட்டு பணம் நீதிமன்றில் செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4,101,107)

# கிட்டுப் பூங்காவைச் சீரமைக்கும் விவசாய அமைச்சின் ஒப்பந்தம் ரத்து

யாழ்ப்பாணம், ஜூன் 17
வடக்கு மாகாண விவசாய அமைச்சால் முன்னெடுக்கப்பட இருந்த கிட்டுப் பூங்கா புனரமைப்புக்கான ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கும், யாழ்.மாநகர சபைக்கும் இடையில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி கிட்டுப்பூங்கா புனரமைப்புத் தொடர்பிலான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தமே இரத்துச் செய்யப் பட்[illegible]என்று 39 ஆவது அமைச்[illegible] கூட்டக் குறிப்பில் தெரி[illegible]உள்ளது.

[illegible] காற்றாலை இயந்[illegible] அமைப்பதற்கு அனு[illegible] போது அந்த நிறு[illegible]ந்தம் 20 மில்லி[illegible] வடக்கு மாகாண சபைக்கு வழங்க வேண்டும் என்று ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த நிறுவனத்தினால் வழங்கப்படும் நிதியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஊடாக கிட்டுப் பூங்கா புனரமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாண சபையின் கடந்த ஆண்டு பாதீட்டில் அதற்கான அனுமதியும் பெறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கிட்டுப் பூங்கா, யாழ்.நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உலக வங்கியால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

அதையடுத்து வடக்கு மாகாண விவசாய அமைச்சால் மேற்கொள்ளப்படவிருந்த புனரமைப்பு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவைக் கூட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கிட்டுப்பூங்கா அபிவிருத்தி தொடர்பாக மாநகர சபை ஆணையாளருக்கும் விவசாய அமைச்சின் செயலாளருக்கும் இடையில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் கைச்சாத்திடப்பட்ட இணக்கப்பாட்டு உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கும், 2016 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் கிட்டுப் பூங்கா அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விவசாய அமைச்சின் மூலதன நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கும் மாகாண அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த நிதியைப் பயன்படுத்தி மேற்கொள் [illegible] [illegible] ரங்களுடன் அடுத்த அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.- என் றுள்ளது.

இதேவேளை, இந்த நடவடிக்கை தவறானது என்று மாகாண சபையின் கடந்த அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அதனூடாக அனுமதி வழங்கப்பட்ட நடவடிக்கையை அமைச்சரவை தனித்து மாற்ற முடியாது. இந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு வேறு தேவைக்கு நிதி பயன்படுத்துவதாக இருந்தால், அது தொடர்பில் மாகாண சபையில் சமர்ப்பித்தே செயற்பட முடியும். அமைச்சரவையினூடாக அதனை மாற்றம் செய்ய முடியாது. இது நடைமுறைத் தவறு .- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது நிர்வாக சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
சங்கானை சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொது நிர்வாக சபைக் கூட்டம் சங்கத் தலைவர் க.ஜெகதீஸ்வரன் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் சங்கக் காரியாலயத்துக்கு அண்மையில் நடைபெறவுள்ளது. (ற-ரி)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 17
நா.யோகேந்திரநாதனின் நீந்திக்கடந்த நெருப்பாறு நாவல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு கிளிநொச்சி பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ற-ரி)

## மெய்வன்மைப் போட்டிகள்

சாவகச்சேரி, ஜூன் 17
சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளன.
நிலையத்தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்து கொள்வார். (ற-9)

## அடிக்கல் நடும் நிகழ்வு


சாவகச்சேரி, ஜூன் 17
சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைக்கப்படவுள்ள மூன்று மாடி வகுப்பறைத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை மு.ப. 11 மணிக்கு நடைபெறவுள்ளது.
கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் கலந்துகொள்ளவுள்ளார்.
மத்திய கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (ற-9)

## இடம்மாற்றம்

சாவகச்சேரி, ஜூன் 17
சாவகச்சேரி நகரில் இயங்கிய இலங்கை வங்கிக் கிளை எதிர்வரும் 20ஆம் திகதி முதல் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபக் கட்டடத்தின் கீழ்த் தளத்தில் இயங்கவுள்ளது என்று கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (ற-9)

# மாணவர்களின் கல்வி நிலை வீழ்வது கவலைக்குரியது

### வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 17
போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஏழு வருடங்கள் கடந்துள்ளன. இயல்பு வாழ்க்கை ஓரளவுக்கு சுமுக நிலைக்குத் திரும்பியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்து க.பொ.த. சாதாரண தர கல்விப் பெறுபேறுகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பது மிகவும் மன வருத்தத்திற்குரியது.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
"அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

**கல்வியில் முன்னிலை**

வடபகுதியிலுள்ள மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை எத்தனையோ பெரிய இடையூறுகளுக்கு மத்தியிலும் கைவிட்டுவிடாது, குப்பி விளக்குகள் முன்னிலையிலும் பங்கர்களுக்குள்ளும், இடம்பெயர் முகாம்களிலும் இருந்தவாறு கற்றுத் தேறினர். அது மட்டுமல்லாமல் தேசிய ரீதியில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களும் போட்டி போட்டிக் கொண்டு ஒன்றையொன்று விஞ்சுவதாக கல்வி நடவடிக்கைகளில் முன்னணியில் திகழ்ந்தன.
ஆனால்போர்முடிவுக்குக்கொண்டு வரப்பட்டு ஏழு வருடங்கள் கடந்துள்ளன. இயல்பு வாழ்க்கை ஓரளவுக்கு சுமுக நிலைக்குத்திரும்பியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்து க.பொ.த. சாதாரண தர கல்விப் பெறுபேறுகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பது மிகவும் மன வருத்தத்துக்குரியது. இவ்வாறானபின்னடைவுக்குபலகாரணங்களை எடுத்துக்கொள்ளலாம்.
போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் வட பகுதியில் ஒழுக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. பெண் பிள்ளைகளும் சின்னஞ் சிறிசுகளும் எந்த நேரத்திலும் இரவில் கூட எதுவித பயமுமின்றி வீதிகளில் பயணம் செய்யவும் வீடுகளில் தனித்து இருக்கவும் முடிந்தது. ஆனால் போர் முடிவுக்கு வந்த பின்னர் பகலில்கூட பெண்பிள்ளைகளும்வயதுவந்தவர்களும் வீட்டில் தனித்திருக்க அல்லது வீதியில் தனியே செல்ல இயலாத ஒரு புதிய கலாசாரம் இங்கே உருவாக்கப்பட்டுள்ளது.

**பாதுகாக்காத இராணுவம்**

கள்வர்கள் கைவரிசை ஒருபுறம், காமுகர்களின் அங்க சேட்டைகள் இன்னோர்புறம், போதைக் கும்பல்களின் அட்டகாசம், வாள் வீச்சு என, இந்தப் பகுதியையே உலுக்கி வைக்கக்கூடிய ஒரு இழி நிலை இங்கே உருவாகியுள்ளது. ஒன்றரை லட்சம் இராணுவத்தினரை இங்கு பாதுகாப்புக்கு என்று நிறுத்தி வைத்திருக்கும் போதுதான் இவை யாவும் நடைபெறுகின்றன. ஆகவே இராணுவத்தினரால் மக்கள் பாதுகாக்கப்படுவதாகத் தோன்றவில்லை.
பிள்ளைகள் பாடசாலைக்கு செல்கின்றார்களா? பாடசாலை முடிவடைந்ததும் வீட்டுக்குத் திரும்புகின்றார்களா? மாலை நேரங்களில் கற்றல் மற்றும் வீட்டுக் கடமைகளில் ஈடுபடுகின்றார்களா? என்று ஒவ்வொரு பெற்றோரும் கவனிப்பது கிடையாது. பாடசாலை நேரங்களில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் குறித்து அதிக கவனம் எடுக்க அதிபர்களும் ஆசிரியர்களும் கூடச் சிலசமயங்களில் தவறி விடுகின்றார்கள். இவ்வாறு ஒவ்வொருவரும் பொது நோக்கின்றி தனித்துச் செயற்பட்டதன் விளைவே இன்று பூதாகரமாக எம்முன் தோன்றி அனைவரையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. இந்த நிலை மாற்றப்படல் வேண்டும். பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் கூர்ந்து அவதானிக்கப்பட்டு முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லப்படல்வேண்டும்.

**வர்த்தக நிலையங்களுக்கு ஒப்பான நகர்புற பாடசாலைகள்**

நகரப்புறப் பாடசாலைகளுடன், கிராமப்புறப் பாடசாலைகளும் அண்மையிலுள்ள பாடசாலைகளும் போட்டி போட முடியாத நிலையில் மாணவர்கள் நகரப்புறப் பாடசாலைகளை நோக்கி படையெடுக்கின்றனர். அது மட்டுமல்ல, பாடசாலை அனுமதிக்காக பல இலட்சங்களையும் வெகுமதியாக வழங்குகின்றார்கள். இதன் மூலம் நகரப்புறப் பெரிய பாடசாலைகள் வர்த்தக நிலையங்களுக்கு ஒப்பாக இயங்கத் தொடங்கியிருக்கின்றன. அங்கே கல்வி பயிலக் கூடிய பல மாணவர்கள் வசதி படைத்தவர்களாக இருப்பதன் காரணமாக வசதி குறைந்த ஓரிரு மாணவர்கள் பாடசாலை அனுமதியைப் பெற்றுவிட்டாலும் அவர்களின் ஏழ்மை, பணம் படைத்த மாணவர்களுடன் நடையுடை பாவனையில் போட்டிபோட முடியாத நிலையில் அவர்கள் பாடசாலையை விட்டு நீங்கிவிடுகின்றார்கள் அல்லது ஒதுங்கி பின்வரிசையில் இருந்து கல்வி நடவடிக்கைகளில் கோட்டை விட்டுவிடுகின்றார்கள்.
அருகிலுள்ள பாடசாலைகள் சிறந்த பாடசாலைகளாகத் திகழ வேண்டுமாயின் இந்த நகரப்புற மோகம் குறைக்கப்படல் வேண்டும். கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் சிறப்பாகவும் அர்ப்பணிப்புடனும்செயற்பட்டுப் பாடசாலைகளை முன்னேற்றப் பாடுபடல்வேண்டும். நகரப்புறத்தில் அந்தக் காலத்தில் வர்க்க ரீதியாக மிகவும் பின்னடைவாக அவதானிக்கப்பட்ட பாடசாலைகளில் சில இப்போது முன்னணியில் திகழ்வதுடன் ஒவ்வொரு வகுப்பிலும் 6 பிரிவுகளுக்குக் குறையாத வகையில் வகுப்புக்களைக் கொண்டிருக்கின்றன. இந்தவளர்ச்சிக்குக்காரணம் குறிப்பிட்ட ஒருசில ஆசிரியர்களின் அயராத உழைப்பும் கண்காணிப்புமே.

**வாசிப்பு வேண்டும்**

முயன்றால் ஆகாததொன்றுமில்லை என்ற கூற்றிக்கு அமைவாக ஆசிரியர்கள் முயற்சி செய்வார்களேயாயின் கிராமப்புறப் பாடசாலைகள் ஒரு குறிப்பிட்ட குறுகிய கால இடைவெளியில் தரமான பாடசாலைகளாக முன்னேற்றப்பட்டுவிடும். மாணவர்கள் கல்வி அறிவுடன் சேர்த்து எண்களுடனான அதீத ஈடுபாடு, வாசிப்புப் பழக்கம், தேடிக் கற்கும் கற்றல் முறைமை, ஆகிய பழக்கங்களையும் உருவாக்கிக் கொள்வதன் மூலம் அவர்கள் கல்வி கேள்வி அறிவுகளில் மேம்பட்டவர்களாக உருவாக முடியும்.
தேடிக் கற்றல் என்பது அறிவு விருத்திக்கு மூல காரணமாக அமையும். ஒவ்வொரு விடயத்தையும் நாம் புத்தகங்களில் தேடிக்கற்கின்றபோது அதனுடன் சேர்த்து இன்னும் ஓரிரு விடயங்களையும் கற்று விடுகின்றோம். நாளடைவில் எமக்கு கற்றல் அல்லது விடயங்களை அறிந்து கொள்கின்ற ஆர்வம் எம்மை அறியாமலேயே எம்முள் உட்புகுந்து விடுகின்றது. இன்று நவீன கணினி யுகத்தில் எமக்கு தேவையான விடயப் பரப்புக்கள் அனைத்தும் கணினியில் ஒரு சில நொடிகளில் இணையத் தளங்களின் ஊடாக தருவிக்கப் பட முடியும். அதில் ஒரு குறைபாடும் இருக்கத்தான் செய்கின்றது. மாணவர்கள் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவது போன்று தேவையான விடயத்தை மட்டும் கற்க வேண்டுமே தவிர அதனுடன் இணைந்து வேறு விடயங்களையும் கற்க முற்படுகின்றார்கள். நேரத்தை வீணடிக்கின்றார்கள்.
மாணவர்கள் கல்வி அறிவில் மேம்படுவதற்கு ஆசிரியர்கள் ஓர் இணைப்புப் பாலமாக விளங்க வேண்டும். மாணவர்கள் எவ்வாறு கல்வியில் மேம்பட முடியும் என்ற அறிவை மாணவர்களுக்கு ஊட்டுவதன் மூலம் மாணவர்களைச் சுயமாகவே தேடித் தேடி கற்கக் கூடிய விதத்தில் அவர்களுக்கு ஆர்வத்தை உண்டாக்கலாம். அதனை விடுத்து வினாவிடைப் புத்தகங்களுடன் பரீட்சைக்கு தயார்ப்படுத்துகின்றகற்பித்தல்முறைமை நீர் மேல் எழுத்தாக அமைந்து விடும்.
இவ்வாறான கற்பித்தலால் மாணவன் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி அடையக்கூடும். ஆனால் அவன்கல்வியில்மேம்பட்டவனாக மாற முடியாது - என்றார். (ற-5)

## கைக்குண்டு மீட்பு

சாவகச்சேரி, ஜூன் 17
சாவகச்சேரி கச்சாய் வீதியில் வெடிக்காத நிலையில்நேற்றுக் கைக்குண்டு ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டது.
சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயத்திற்கு அருகில் உள்ள காணியில் வீடமைப்பதற்கு நேற்று முன்தினம் மாலை அத்தி பாரம் வெட்டியபோது உரப்பையின் கீழ் கைக்குண்டு காணப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாருக்கு அது குறித்து அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் இரவு அங்கு வந்து பாதுகாப்பை ஏற்படுத்தினர்.
விசேட அதிரடிப் பொலிஸார் மூலம் கைக் குண்டை அகற்ற அனுமதி கோரி சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை தாக்கல் செய்தனர். (ற-9)

## தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 16
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை முதன்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கல்லூரி மாணவன் செல்வன் அமலநாதன் நிறோசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முதுகல்விமாணி இணைப்பாளரும் மூத்த விரிவுரையாளருமான திருமதி இ.ஜெயலக்சுமி தலைமை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி)

## லயன்ஸ் கழக கூட்டம்

மாங்குளம், ஜூன் 17
வடமராட்சி லயன்ஸ் கழக அங்கத்தவர்களுக்கான மாதாந்தக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு செவிப்புலனற்றோர் செயலகத்தில் நடைபெறவுள்ளது. அதில் விரிவான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (ற-422)

## சட்டவிரோத மின்சாரம்: தலா 10,000 ரூ. தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
சட்டத்துக்குப் புறம்பாக மின்சாரம் பெற்ற 4 பேருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது மல்லாகம் நீதிமன்று.
கொழும்பில் இருந்து வந்த மின்சார சபையின் புலனாய்வு அதிகாரிகளும், சுன்னாகம் பொலிஸாரும் இணைந்து நடத்திய திடீர் சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களை நீதிவான் எச்சரிக்கை செய்ததுடன் தண்டமாக தலா 10 ஆயிரம் ரூபா விதித்தார். (ற-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பு நிர்ணய சபையில் மூத்த பிரஜைகளை நியமிக்குக

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 17

அரசமைப்பு நிர்ணய சபையில் அரசியல்வாதிகளை நியமிக்காமல் அவர்களுக்குப் பதிலாக மூத்த பிரஜைகள் நியமிக்கப்படவேண்டும் - என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

> அதிகாரப் பரவல் தொடர்பில் நியாயமான முறைமை ஒன்று உருவாக்கப்படவேண்டும். மக்களின் பாதுகாப்பு தொடர்பிலான சட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்படவேண்டும் என்ற யோசனைகளும் முன்மொழியப்பட்டுள்ளன

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக தமது யோசனைகள் அடங்கிய அறிக்கையை பிரதமர் மற்றும் சபாநாயகரிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதிகள் கையளித்தனர். குறித்த அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதிகாரப் பரவல் தொடர்பில் நியாயமான முறைமை ஒன்று உருவாக்கப்படவேண்டும். மக்களின் பாதுகாப்பு தொடர்பிலான சட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்படவேண்டும் என்ற யோசனைகளும் அந்த அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டு 56ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமை தொடர்பான சர்வதேச சட்டம் இரத்துச் செய்யப்படவேண்டும். அந்தச் சட்டத்தில் காணப்படுகின்ற உரிமைகள் அனைத்தும் புதிய அரசமைப்பு அடிப்படை உரிமைகள் சரத்தில் உள்வாங்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-5)

# ஆஸி. செல்லவுள்ள படகுக்கு எரிபொருளை வழங்க முடிவு

## இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்தில் கரையொதுங்கிய இலங்கைத் தமிழ் அகதிகளின் படகுக்குத் தேவையான 7 மெட்ரிக் தொன் டீசலை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்கு புகலிடம் தேடிப் பயணித்தபோது, இயந்திரக் கோளாறால் இந்தோனேசியக் கடற்பரப்பில் தத்தளித்த இந்த அகதிகள் படகு கடந்த சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் படகைச் சோதனையிட்ட இந்தோனேசிய அதிகாரிகள், அதில் இருந்த அகதிகளிடம் எந்த ஆவணங்களும் இல்லாத நிலையில், இந்தோனேசியாவுக்குள் அனுமதிக்க ம்றுத்தனர். ஆனினும் அகதிகளுக்கான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆச்சே மாகாண கடற்பகுதிக்கு நேற்றுமுன்தினம் மாலை இந்தோனேசிய கடற்படைக் கப்பல் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது.

அகதிகளுக்குத் தேவையான டீசல் மற்றும் உதவிப் பொருள்களைக் கொடுத்து தமது கடற்பகுதிக்கு அப்பால் அனுப்புவதற்கு இந்தோனேசிய அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

அதேவேளை, இந்த அகதிகளுக்குத் தேவையான உதவிகளை அளித்து, அவர்களைத் தற்காலிகமாகத் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும், அகதிகளுக்கான ஐ.நா. முகவரமைப்பு பிரதிநிதிகளைச் சந்திக்க அனுமதிக்க வேண்டும் என்றும், உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள் கோரியுள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபையும் இந்த அகதிகளுக்கு இந்தோனேசியா புகலிடம் அளிக்க வேண்டும் என்று கோரியுள்ளது. (ற-5)

## அரநாயக்கவில் 3 சடலங்கள் மீட்பு

கொழும்பு, ஜூன் 17

கேகாலை அரநாயக்க பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி உயிரிழந்த மேலும் மூவரது சடலங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளன.

அரநாயக்க மண்சரிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 28 ஆக உயர்வடைந்துள்ளது.

அரநாயக்கவில் கடந்த மே மாதம் ஏற்பட்ட மண்சரிவில் 25 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன. நூற்றுக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்து தற்காலிக முகாமில் தங்கவைக்கப்பட்டனர்.

இராணுவத்தினர் உட்பட மீட்பு அதிகாரிகள் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட அதேவேளை மீட்பு நடவடிக்கை கடந்த மாத இறுதியில் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் பிரதேச மக்களின் தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கையில் மேலும் மூவரது சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று அரநாயக்க பிரதேச செயலாளர் வைசால் தெரிவித்துள்ளார். (ற-5)

# இலங்கையின் அமைவிடம் முக்கியத்துவம் வாய்ந்தது

## துருக்கி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

இலங்கையின் பாதுகாப்பும் உறுதித் தன்மையும் இந்தப் பிராந்தியத்துக்கும், அதற்கு அப்பாலும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இவ்வாறு துருக்கி வெளிவிவகார அமைச்சர் மெவுலட் கௌசோக்லு தெரிவித்தார்.

இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த துருக்கி வெளிவிவகார அமைச்சர் நேற்றுமுன்தினம் புதன் கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீரவையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார்.

வெளிவிவகார அமைச்சருடனான இருதரப்புப் பேச்சின் பின்னர், கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்த துருக்கி வெளிவிவகார அமைச்சர் மெவுலட் கௌசோக்லு தெரிவித்ததாவது:

இலங்கையின் புவியியல் அமைவிடம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதனால், இலங்கையின் பாதுகாப்பும் உறுதித்தன்மையும் இந்தப் பிராந்தியத்துக்கும் அதற்கு அப்பாலும், முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன.

துருக்கியும் இலங்கையும் பொருளாதார ஒத்துழைப்பு, பாதுகாப்பு, கலாசாரம், சுற்றுலா, விவசாயம், சக்தி, கல்வி , சுகாதாரம் ஆகிய துறைகளில் ஒத்துழைத்துச் செயற்படுவதற்கும் இணங்கியுள்ளன.- என்றார். (ற-5)

# வற் அதிகரிப்பை எதிர்த்து காலியில் முழு கதவடைப்பு

கொழும்பு, ஜூன் 17

வற் வரி அதிகரிக்கப்பட்டதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் தென்னிலங்கையின் காலி நகரில் முழு அடைப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

காலி நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் நேற்று வியாழக்கிழமை காலை முதல் மூடப்பட்டுள்ளன.

காலி மாவட்ட வர்த்தக மற்றும் தொழிற்சாலை சபை இந்த முழு அடைப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

காலி ஒறப்புவத்தை பிரதான அலுவலகத்துக்கு அருகிலிருந்து முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான பேரணி பிரதான பேருந்துத் தரிப்பிடம் வரை சென்றது.

இந்த எதிர்ப்புப் பேரணி மற்றும் முழு அடைப்புப் போராட்டம் காரணமாக காலி நகரம், கின்தோட்டை, கலேகான, தெவட்ட, கராப்பிட்டிய ஆகிய நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

வற்வரி அதிகரிப்பால் வர்த்தகர்கள் எதிர்கொண்டுள்ள சிரமங்களை அரசுக்கு உணர்த்துவதற்காகவே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என்று காலி மாவட்ட வர்த்தக மற்றும் தொழிற்சாலைகள் சபையின் தலைவர் சிரில் ஜயந்த தெரிவித்தார். (ற-5)

# கோப் குழுவுக்கு மத்திய வங்கி தகவல் வழங்க மறுக்கவில்லை

## அரச தகவல் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

நாடாளுமன்ற கோப் குழுவுக்கு தகவல்களை வழங்க மத்திய வங்கி மறுப்புத் தெரிவித்தது என்று வெளியாகிய செய்திகளை அரசு நிராகரித்துள்ளது. அது உண்மைக்குப் புறம்பான செய்தி என்று குறிப்பிட்டுள்ள அரச தகவல் திணைக்களம் அது தொடர்பில் அறிவித்தலையும் விடுத்துள்ளது.

அரசமைப்பின் நிதி சட்டத்தின் சரத்துக்கு இணங்க தம்மிடமுள்ள தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்களை கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக கணக்காய்வாளருக்குச் சமர்ப்பிக்க மத்திய வங்கி கட்டுப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெகிழ்ச்சிப் போக்கைக் கொண்டுள்ள மத்திய வங்கி தகவல் மற்றும் ஆவணங்களை வெளியிடுவதைத் தவிர்ப்பது தேவையான சந்தர்ப்பங்களில் மத்திய வங்கியின் இணக்கப்பாட்டுடன் மாத்திரமே மேற்கொள்ளப்பட முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி சட்ட மா அதிபர் அதனை மத்திய வங்கிக்கும் கணக்காய்வாளருக்கும் அறிவித்தார் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபரின் ஆலோசனை மற்றும் மத்திய வங்கியின் இரகசியத் தன்மையைப் பாதுகாக்கும் சம்பிரதாயத்திற்கிணங்க மத்திய வங்கியின் நெகிழ்ச்சித் தன்மைகொண்ட தகவல்கள் மற்றும் ஆவணங்கள் வங்கிக்கு வெளியில் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுவதில்லை எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முக்கியமான சந்தர்ப்பங்களில் திணைக்கள அதிகாரிகளுடன் கணக்காய்வாளர் மத்திய வங்கிக்கு வருகை தந்து அங்குள்ள சகல பிரிவுகளுக்கும் சென்று தகவல்களை பெற்றுக் கொள்ளவும் ஆவணங்களை பரிசீலிக்கவும் உரிமை உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்கு அமையவே மத்திய வங்கி செயற்பட்டுள்ளது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## அனுர சேனாநாயக்க வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூன் 17

பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் மூத்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சிறி ஜயவர்தனபுர வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இரவு அவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிசாந்த தனசிங்க தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவின்படி மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனையின் பின்னர் அவர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற வேண்டும் என்று வைத்தியர்கள் அறிவுறுத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## சோமவன்ஸ காலமானார்



யாழ்ப்பாணம், ஜூன் 17

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க (வயது - 74) நேற்றுமுன்தினம் அதிகாலை உயிரிழந்தார். இவரது இறுதிக் கிரியைகள் நாளை சனிக் கிழமை நடைபெறவுள்ளது.

24 ஆண்டுகளாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவராகப் பதவியில் இருந்து வந்த சோமவன்ச அமரசிங்க கடந்த 2014 ஆம் ஆண்டு அந்தப் பதவியைவிட்டு விலகினார். அத்துடன், மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து பிரிந்து சென்று புதிய கட்சி ஆரம்பித்தார்.

அண்மையில் அவர் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான மேடைகளிலும் தோன்றியிருந்தார்.

1971ஆம் ஆண்டு ஆயுதக் கிளர்ச்சியின் போது, மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் இருந்தவர்களில் உயிர் தப்பிய ஒரே ஒருவர் சோமவன்ச அமரசிங்க மட்டுமேயாவார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி மோசடிப் பிரிவு இருப்பதால் எமக்குப் பிரச்சினை ஏதுமில்லை

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 17
நிதி மோசடிப் பிரிவு இருந்தாலும், இல்லாவிட்டாலும் எமக்குப் பிரச்சினை இல்லை.
இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச கூறினார்.
தற்போது ஜப்பானுக்குச் சென்றுள்ள மகிந்தவிடம் நிதி மோசடிப் பிரிவு கலைக்கப்படவுள்ளது என்று வெளியாகியுள்ள தகவல் குறித்து சிங்கள ஊடகம் ஒன்று தொலைபேசியூடாகக் கருத்துக் கேட்டுள்ளது. அதற்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
நிதி மோசடிப் பிரிவு முடிந்தளவு எம்மைப் பற்றி விசாரணை செய்கின்றது. எம்மைச் சித்திரவதை செய்தார்கள். ராஜித உள்ளிட்டவர்கள் தொடர்பிலும் விசாரணை நடத்த வேண்டும். அவ்வாறு விசாரணை நடத்தப்படாதுள்ளமையே எமக்குள்ள பிரச்சினை.
நான் வெற்றிகரமான ஜப்பான் பயணத்தை மேற்கோண்டுள்ளேன். ஜப்பானில் வாழும் நாட்டை நேசிக்கும் இலங்கையர்கள் பலரை நான் சந்தித்தேன் – என்று மகிந்த மேலும் தெரிவித்தார்.
(ற-5)

# இலங்கைக்குத் தொடர்ந்து பிரான்ஸ் உதவி வழங்கும்

## அந்த நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17
இலங்கையின் நல்லிணக்க முயற்சிக்கு தொடர்ந்து உதவுவோம் என்று பிரான்ஸ் தெரிவித்துள்ளது. அந்த நாட்டின் தூதுவர் ஜீன் மரின் செக்குஹ் இதனைத் தெரிவித்தார்.
இலங்கை அரசு நல்லிணக்கம், மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றது. இலங்கையுடன் உறவுகளை விருத்தி செய்துகொள்ள விரும்புகின்றோம் என்று செக்குஹ் தெரிவித்தார்.
வாக்குறுதிகளை எழுத்தில் மாத்திரமன்றி, இலங்கை அரசு செயலிலும் காட்டுகின்றது. காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் ஒன்று அமைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை இதற்கு உதாரணமாகும் என்றும் தூதுவர் தெரிவித்தார்.
(ற-5)



# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகக்கூடாது

## பிரதமர் ரணில் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 17
ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் தொடர்ந்து அங்கம் வகிக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரினார்.
பிரிட்டன் செய்திச் சேவை ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.
ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதிகளை சுமார் 80 நாடுகள் மேற்கொள்கின்றன. அவற்றில் இலங்கையும் அடக்கம். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுமானால் குறித்த நாடுகளை அது பாதிக்கும். சர்வதேச வர்த்தகத்தையும் பாதிக்கும்.
ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்து ஜி.பி.எஸ். பிளஸ் சலுகையை இலங்கை எதிர்ப்பார்த்துள்ள நிலையில், பிரிட்டன் அதில் இருந்து விலகக்கூடாது என்று பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.
(ற-5)

# வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு தனியார்துறை வேலை வாய்ப்புகளே

## எஸ்.எம்.மரிக்கார் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 17
இலங்கையின் வேலையில்லாப் பிரச்சினைக்குச் சிறந்த தீர்வு தனியார் துறைகளில் வேலை வாய்ப்பை அதிகரிப்பதே.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.
கொலன்னாவையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்களை நேற்றுமுன்தினம் வழங்கினார். அங்கு உரையாற்றிய மரிக்கார் தெரிவித்ததாவது:
கல்வியின் மூலம் தான் சமூகத்தில் முன்னேற முடிகின்றது. அதனால் காலத்துக்கு ஏற்ற வகையில் கல்வி உலகில் நாமும் மாற வேண்டும்.
சமூகத்தில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துள்ளது. அதை நிவர்த்தி செய்வதற்கு அரசு கைத்தொழில்துறையை முன்னேற்றும்போது, தனியார்துறை அதை உபயோகப்படுத்தி விடுகின்றது. இலங்கையில் தற்போது வேகமாக விரிவடைந்து வரும் துறையாகத் தனியார் துறை விளங்குகின்றது. தனியார் துறைக்கு ஏற்றவாறு தொழில் பயிற்சிகளை வழங்க வேண்டியுள்ளது. அதற்காக எமது கல்வி திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.
எம்மில் பலரும் அரச துறையில் தான் வேலைவாய்ப்பு வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கின்றார்கள். காரணம் அரச தொழிலில் சம்பளம் அதிகம் எனக் கூறுகிறார்கள். ஆனால் இன்று அரச தொழிலைவிட, தனியார் நிறுவனங்களே அதிக சம்பளம், பதவி உயர்வு அதிகப்படியான கொடுப்பனவுகள் என்பவற்றை வழங்குகின்றன.
உலகில் அதிகம் முன்னேறிச் செல்லும் துறைகளாக தனியார் துறைகளே விளங்குகின்றன. எனவே எமது வருங்காலச் சந்ததியினரும் தனியார் துறையில் தொழில் செய்யும் வகையில் கல்வி கற்க வேண்டும். அதற்கு ஏற்றவகையில் எமது கல்வி திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தவேண்டும் – என்றார்.
(ற-5)

> எம்மில் பலரும் அரச துறையில்தான் வேலைவாய்ப்பு வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கின்றார்கள். காரணம் அரச தொழிலில் சம்பளம் அதிகம் எனக் கூறுகிறார்கள். ஆனால், இன்று அரச தொழிலைவிட தனியார் நிறுவனங்களே அதிக சம்பளம், பதவி உயர்வு அதிகப்படியான கொடுப்பனவுகள் என்பவற்றை வழங்குகின்றன.

# அரசியல் நாடகம் ஆடுகிறார் தமிழகத்தின் முதலமைச்சர்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சாடல்



ராஜீவ் காந்தி கொலைச் சந்தேக நபர்களை மோடி விடுதலை செய்தால் அது உலக பயங்கரவாதத்தை ஆதரிப்பதாக அமையும். மோடியைச் சந்தித்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முன்வைத்த இலங்கை தொடர்பான கோரிக்கைகள் வெறும் அரசியல் நாடகமே.
இவ்வாறு தெரிவித்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம். அந்த இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்துள்ளதாவது:
தமிழ் நாட்டு முதலமைச்சராக பதவியேற்ற பின்னர், தமிழ் நாட்டிலுள்ள ஈழப்பிரிவினைவாத ஆதரவாளர்களை திருப்பதிப்படுத்தும் தேவை ஜெயலலிதாவுக்கு உள்ளது. அதனால் இந்தியப் பிரதமர் மோடியை சந்தித்து கச்சத்தீவை மீண்டும் பெறவேண்டுமென்றும் அங்குள்ள அந்தோனியார் தேவாலயத்தை புனரமைக்கும் பணியை இந்தியா பொறுப்பேற்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.
ராஜீவ் காந்தி கொலைச்சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறும் மோடியிடம் கேட்டுள்ளார். இது ஜெயலலிதாவின் அரசியல் நாடகமாகும்.
இலங்கையுடன் இந்தியா தற்போது தளம்பலற்ற ராஜதந்திர ரீதியாக உறவுகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த நிலையில் கச்சத்தீவை மீண்டும் பெறவேண்டும் என்று இந்திய மத்திய அரசுக்கு தொந்தரவு கொடுத்து இரு நாடுகளுக்கிடையே மோதலை ஏற்படுத்த முனைகின்றார்.
1974ஆம் ஆண்டு அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி கச்சத்தீவை சட்டரீதியாக இலங்கைக்கு கையளித்தார். அதனை சட்டரீதியாக மீளப்பெற முடியாது. பலாத்கரமாக கச்சத்தீவை மீளப்பெறும் நிலைக்கு இந்தியாவை தள்ளிவிட ஜெயலலிதா முயற்சி எடுக்கிறார்.
ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சந்தேகநபர்கள் ஏழுபேரை விடுதலைசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையை மோடி ஏற்க மாட்டார். அதனை காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ளாது. சர்வதேச ரீதியிலும் எதிர்ப்புக்கள் கிளம்பும் – என்றார்.
(ற-5)

# சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு காலக்கெடு

கொழும்பு, ஜூன் 17
அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே காணப்படுகின்ற சம்பள முரண்பாடு தொடர்பில் இதுவரை தீர்வுகள் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ள அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கத்தினர் உயர்நீதி மன்றில் மனுதாக்கல் செய்யவுள்ளோம் என்றும் தெரிவித்தனர்.
இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சு மற்றும் அரச நிர்வாக பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை பட்டதாரிகள் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஈ.எம்.ஜே.எஸ். சேரம் தெரிவித்தார்.
சம்பந்தப்பட்டவர்களுக்கு இரு வாரங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும்– பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காத பட்சத்தில் உயர் நீதிமன்றில் மனுதாக்கல் செய்வது உறுதியெனவும் – அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
(ற-5)

# தமிழ் மக்களினது துன்பங்களை புரிந்து கொண்டுள்ளது நோர்வே

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17
ஐ.நாவுக்கான அமெரிக்காவின் தூதுவர் சமந்தாபவர் தனது அரசின் பூகோள அரசியல் நலன்களின் மீதே அதிகம் கவனம் செலுத்தினார். ஆனால் நோர்வே, தமிழ் மக்களின் துன்பங்களை நன்கு புரிந்துள்ளது.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
சண்டே ஒப்சேவர் ஊடகத்துக்கு மின்னஞ்சல் மூலம் நேர்காணல் வழங்கியுள்ளார். அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"அண்மையில் வடக்குக்குப் பயணித்த சமந்தாபவர் மற்றும் நோர்வே இராஜாங்கச் செயலர் ரோர் கற்றேம் ஆகியோர் தங்களிடம் என்ன கூறினார்கள்?" இவர்கள் மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றுமாறு வடக்கு மாகாண சபைக்கு ஆலோசனை வழங்கினர் என்று ஊடகங்கள் தெரிவித்தனவே" என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ளார் முதலமைச்சர்.
"நாங்கள் அதாவது தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஒன்றிணைந்தே இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டுவந்தோம். ஆகவே நாங்கள் அரசுடன் பணியாற்றுகிறோம். ஆனால், கடந்த கால அரசியற் செயற்பாடுகள் தற்போதும் பின்பற்றப்படுவது எமக்கு வேதனை அளிக்கிறது. நாங்கள் கூறிய கருத்தை நோர்வே இராஜாங்கச் செயலர் புரிந்து கொண்டார். ஆனால் சமந்தா, தனது அரசின் பூகோள அரசியல் நலன்களுக்காகச் செயற்பட்டார். ஆகவே எமக்கு ஆலோசிப்பதற்கு எந்தவித அவசியமும் இல்லை. ஏனெனில் நாங்கள் ஏற்கனவே அரசுடன் இணைந்து பணியாற்றுகின் றோம்" – என்று கூறியுள்ளார்.
அதில் மற்றொரு கேள்விகளுக்குப் பதிலளித்துள்ள முதலமைச்சர் –
புலம்பெயர் சமூகம் என்பது எம்மிலிருந்து வேறுபட்டுள்ளது. புலம்பெயர் தமிழ் சமூகத்தை இலங்கை அரசு சரிவரப் பயன்படுத்தவேண்டும். புலிகள் அமைப்பு தொடர்பான கருத்துக்கள் தெற்கில் இன்னமும் மறையவில்லை. அதற்காக என் மீதோ அல்லது புலம்பெயர் மக்கள் மீதோ பழி சுமத்த வேண்டாம். நாங்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை. ஆனால், எமது தனித்துவத்தை அரசு அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். எமது மக்கள் சமனாக மதிக்கப்பட வேண்டும் – என்று தெரிவித்துள்ளார்.
(ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.நாவும் திருகுதாளம் செய்கிறதோ? ஈழத் தமிழரின் விரக்தி நிலை இது...!

இந்த முறையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில், எங்கள் நாட்டுக்கு, விதந்துரைக்கப்பட்ட நிர்வாகச் செயற்பாடுகளை உரிய விதத்தில் செய்து முடிக்க மிகப் போதுமான கால அவகாசம் கிடைத்தே தீரும். எந்தப் பிரச்சினையும் தலைதூக்காது.

இலங்கை அரசின் மீதும், எமது ஜனாதிபதி மீதும் அனைத்துலக நாடுகள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளன.

அதனால் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் இப்போதைய கூட்டத் தொடரில் எம்மீது எவ்வகையான அழுத்தமும் இருக்கப் போவதில்லை.

மேற்கண்டவாறு, புழுகித்தள்ளி உள்ளார், அமைச்சரவையின் இணைப் பேச்சாளர்களில் ஒருவரான ராஜித சேனாரத்ன.

மேலும்--

உலகின் அனைத்து நாடுகளும் இலங்கை மீது நம்பிக்கை வைத்துள்ளன. இத்தகைய சூழ்நிலையில், பின்னணியில் எம்மை அனைத்துலக நாடுகள் ஆரம்பத்தில் நோக்கியதுபோன்று இப்போது கருதவில்லை என்றும் தாளித்துள்ளார் அமைச்சர்.

இத்தனைக்கும், ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இந்த மாதம் 29 ஆம் திகதியன்று, இலங்கை குறித்த வாய்மொழி மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது. அதற்கு முன்னராக அமைச்சர் முந்திரிக்கொட்டை போன்று மனம் போன போக்கில் விளாசி உள்ளார் என்பது நோக்கற்பாலது.

மொத்தத்தில், நல்லாட்சி அரசு ஆட்சி பீடத்தில் ஏறுவதற்கு கைகொடுத்து, உறுதுணையாக இருந்தவர்கள் தமிழ் மக்கள் என்பதை எவரும் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் இயலாது.

உள்ளதை-உண்மையைச் சொல்வதாயின், ஜனாதிபதியும், ரணில் அரசும் தேர்தல் வேளைகளில் அள்ளி விசிறிய வாக்குறுதிகள் ஓரளவில் ஏனும் நிறைவேற்றப்படவில்லை. வெறும் கிள்ளித் தெளித்தலே இடம்பெறுகிறது.

அதனால், கடந்த 18 மாதங்களில் படிப்படியாக அரசின் மீதான தமிழ் மக்களது நம்பிக்கையில் 'மண் விழ' ஆரம்பித்தது.

அதனை உய்த்து உணரமுடியாமல், தமக்கு எந்தவித பாதிப்போ பிரச்சினையோ இல்லை என்று அமைச்சரும்-அரசும் சுய கணக்குப் போட்டிருக்கலாம்!

ஆயினும் அதனால் தொடர்ந்தும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பவர்கள், எதிர் கொண்டிருப்பவர்கள் பாதிப்புற்ற தமிழ் மக்களே அன்றி, நல்லாட்சி என்று தனக்குத் தானே மகுடம் சூட்டிய அரசல்லவே.

ஒட்டு மொத்தத்தில்--

பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிக்குச் சீவ மோசம் என்ற நிலையே, பெருத்துத் தடித்து வெடிக்கிறது!

எங்கள் விடயத்தில் ஐ.நா.மனித உரிமைகள் சபையும்கூட, திருகுதாளம் செய்கிறதே என்ற ஏக்கமும், ஈழத்தமிழ் மக்களை உலுப்ப ஆரம்பித்துள்ளது.

# அரசியலில் இவையெல்லாம் சகஜமப்பா!

சிங்களமூலம் மவ்பிம
தமிழில் வீ எஸ் ரீ

மகிந்தவின் ஆட்சிக் காலமான 2012 ஒக்ரோபர் மாதத்தில் அவ்வேளை அமைச்சராக இருந்த மேர்வின் சில்வாவின் மகன் மானக சில்வா, துருக்கிக்கான இலங்கைத் தூதுவர் பாரதி விஜேரத்னவின் மகன் ரெஹான் விஜேரத்ன ஆகிய இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது. அந்த இருவரும் கொழும்பு உணவு விடுதியொன்றில் வைத்து இராணுவ மேஜர்தர அதிகாரியான சந்தன பிரதீப் என்பவரைத் தாக்கிக் காயப்படுத்தியதான குற்றச்சாட்டின் பேரிலேயே பொலிஸாரால் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது முறைப்பாட்டுக்காரரான குறித்த இராணுவ அதிகாரி, தமது முறைப்பாட்டை மீளப் பெற்றுக் கொண்டு சந்தேகநபர்களுடன் இணக்கப்பாடாகச் செல்ல விரும்புகிறார் என நீதிமன்றில் தெரிவித்தார். அதற்கான காரணம் குறித்து நீதிவான் வினவியபோது இடம்பெற்ற சம்பவம் காரணமாக உடனடியாகத் தாம் உடல் உள ரீதியாகப் பாதிப்புற்றதன் காரணமாகவே அவ்விருவர் மீதும் தாம் முறைப்பாட்டை மேற்கொள்ள நேர்ந்ததாகத் தெரிவித்தார்.



முறைப்பாடு மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் சந்தேகநபர்களிருவரையும் பிணையில் விடுவித்த நீதிவான், குறித்த இராணுவ அதிகாரி முதலில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் தீர்ப்பளித்தார்.

### அச்சத்துக்கு உள்ளான மகிந்த

மாலக சில்வாவும், ரெஹான் விஜேரத்னவும் இராணுவ அதிகாரி சந்தன பிரதீப்பைத் தாக்கிக் காயப்படுத்திய செய்தி ஊடகங்களில் வெளியானதை அடுத்து மகிந்த அச்சத்துக்கு உள்ளானார். மாலக சில்வாவை விட ரெஹான் விஜேரத்னவை எவ்வாறாவது குறித்த சிக்கலில் இருந்து விடுவிக்க வேண்டிய தேவை மகிந்தவுக்கு இருந்தது. ஐ.தே.க. ஆட்சியிலிருந்து வெளியேறி அரசுடன் இணைந்து கொண்ட மனோ விஜேரத்னவின் மகனே இந்த ரெஹான் விஜேரத்ன ஆவார். மனோ விஜேரத்னவின் திடீர் சாவை அடுத்து அவரது மனைவியான பாரதி விஜேரத்னவை துருக்கிக்கான இலங்கைத் தூதராக நியமிக்கும் அளவுக்கு விஜேரத்ன குடும்பத்துக்கும் மகிந்த குடும்பத்துக்கும் இடையில் மிகநெருக்கமான உறவு நிலவிவந்தது.




### கோத்தாவுடன் தொடர்பு

இதன் காரணமாக குறித்த சிக்கலில் இருந்து ரெஹான் விஜேரத்னவை விடுவிப்பதற்காக மகிந்த இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரியான சந்தன பிரதீப்பின் கௌரவத்தை மலினப்படுத்தத் தீர்மானித்தார். அது குறித்து தமது சகோதரரும் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாயவைத் தொடர்பு கொண்டதையடுத்து குறித்த தமது முறைப்பாட்டை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு கோத்தபாயவால் குறித்த இராணுவ மேஜர் சந்தன பிரதீப் வற்புறுத்தப்பட்டார். அந்த மேலிடத்து வற்புறுத்தலை மறுக்க இயலாது சந்தன பிரதீப் பொலிஸாரிடம் தாம் மேற்கொண்ட முறைப்பாட்டை மீளப் பெற்றுக் கொள்கிறார் என நீதிமன்றில் தெரிவித்தார்.

அந்த விதத்தில் மானக சில்வா மற்றும் ரெஹான் விஜேரத்னவைப் பிணையில் விடுவித்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல், குறித்த சம்பவத்தைத் திரிபு படுத்தி மேஜர் சந்தன பிரதீப்புக்கு எதிராக இராணுவத் தரப்பு விசாரணையொன்றை மேற்கொள்ள வைப்பித்து அவரைக் குற்றவாளியாக ஆக்குவதற்கும் கோத்தபாய திட்டமிட்டிருந்தார்.


குறித்த உணவு விடுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது மேஜர் சந்தன பிரதீப் இராணுவ சேவையில் இருந்தவாறு உத்தியோகபூர்வமற்ற வகையில் தனிப்பட்ட வர்த்தகரொருவருக்குப் பாதுகாப்பு வழங்கும் விதத்திலேயே குறித்த உணவு விடுதிக்கு வந்திருந்தார் எனச் சோடிக்கப்பட்டதொரு குற்றச்சாட்டின் அடிப்படையில் இராணுவத்தரப்பு நியமித்த விசாரணைக் குழுவொன்று குறித்த மேஜர் சந்தன பிரதீப்பைக் குற்றவாளியாகத் தீர்மானித்தது. அந்தக் குற்றத்துக்காக அவரை இராணுவ சேவையிலிருந்து நீக்கவோ அல்லது சிறைத் தண்டனை விதிக்கவோ இராணுவச் சட்ட திட்டங்கள் அனுமதிப்பதாக அவ்வேளையில் ஊடகங்கள் பரபரப்புச் செய்திகள் வெளியாகி இருந்தன.

அப்படியானால், அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து கிழக்கு மாகாண முதலமைச்சர், கடற்படை அதிகாரியொருவரை ஏசியமை குறித்து வானத்துக்கும் பூமிக்குமாகத் துள்ளிக் குதிக்கும் நாட்டுப்பற்றாளர் தரப்பினர், அந்த வேளையில் வாய்மூடி மௌனம் காத்ததேன்? என நாட்டின் அரசியல் நன்கறிந்தோர் கேள்வி எழுப்புகின்றனர். சம்பூரில் கிழக்குமாகாண முதலமைச்சர் கடற்படை அதிகாரியை ஆத்திரத்தில் திட்டித் தீர்த்தமை மட்டுமே இடம்பெற்றது. ஆனால் குறித்த கொழும்பு உணவு விடுதிச் சம்பவத்தில் மாலகசில்வாவும் ரெஹான் விஜேரத்னவும் குறித்த இராணுவ மேஜரை குருதி சிந்தும் அளவுக்கு அடித்துக் காயப்படுத்தியிருந்தும், கடைசியில் அந்த இராணுவ மேஜர் அரசியல் உயர் மட்ட அதிகாரத் தரப்புக்களால் வஞ்சிக்கப்பட்டு தமது உண்மையான முறைப்பாட்டை மீளப்பெற்றுக் கொள்ளும் அளவுக்கு அழுத்தங்களால் தமது கௌரவத்தை இழக்க நேர்ந்தது. அந்த வகையில் அன்று ராஜபக்ச அரசு அந்த இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரியின் முதுகெலும்பை உடைத்து, அவரது இராணுவச் சீருடையைக் களைந்துவிட்டு சாதாரண அரசியல்வாதிகளது பிள்ளைகள் முன்னால் மண்டியிட வைத்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்





# என்ன நடக்கிறது இலங்கையில்?

நல்லாட்சிக் கோசத்துடன் அரசு பதவிக்கு வந்து 9 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. ஒரு மாற்றம் தேவை என்பதற்காக மகிந்தவைத் தேற்கடித்து, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகி 18 மாதங்களாகின்றன. ஆனால் இன்னமும் மாற்றங்களும் நல்லாட்சியும் ஏற்படுவதற்கான நிலமை தொடக்கப் புள்ளியான வாய்ப் பேச்சுடன் மட்டுமே உள்ளதன்றி செயல் வடிவில் எந்த ஒரு நகர்வும் கிட்டியதாக இல்லை. மீள்குடியமர்வு இன்னமும் தொடர்ந்து, இழுபறியாகவே உள்ளது. அரசியல் கைதிகள் விவகாரம் மறந்து விட்டதாக உள்ளது.

மக்கள் குடியிருப்புக்களில் இராணுவத்தின் ஆதிக்கம் வரையறையின்றிக் காணப்படுகின்றது. அரச உத்தியோகத்தர்களைப் படையினர் அச்சுறுத்தும் சம்பவங்கள் குறித்து அரசு அசட்டையாகவே உள்ளது. மனித உரிமைகள், போர்க்குற்றங்கள் குறித்தும் மௌனம் கடைப்பிடிக்கப்படுகின்றது. மொத்தத்தில் மனித உரிமை ஆர்வலர் யஸ்மின் சூகா குறிப்பிடுவது போல், இராணுவத்தின் திருப்திக்காக மட்டுமன்றி; எதிரணி என்று கூறப்படுபவர்களின் திருப்திக்காகவும் மட்டுமே இன்றைய அரசு முன்னுரிமை வழங்குகின்றது.

தமிழ் மக்களின் விடயத்தில் மகிந்த அரசு நேரடியாகக் கைக்கொண்டிருந்த சமூக விரோத நடவடிக்கைகள் இப்போது இல்லை என்று – தமிழ் மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் காட்டிக்கொண்டு, தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும் குள்ள நரித்தனத்தையே அரசுத் தலைவர்கள் இப்போது கடைப்பிடிக்கின்றனர்.

தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற, அவர்களைப் பாதித்துள்ள சாதாரண விடயங்களுக்கு உடன் தீர்வுகாண தயக்கம் காட்டும் இந்த அரசு, தமிழ் மக்களின் முக்கிய கோரிக்கையான கூட்டாட்சியையோ வடக்கு – கிழக்கு இணைந்த சுயாட்சிக் கோரிக்கையையோ நிறைவேற்றிக் கொடுக்க முன் வருவார்கள் என்பது நிச்சயமற்ற ஒன்றே என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். சுயாட்சியோ கூட்டாட்சியோ இல்லாத 13ஆவது திருத்தத்துக்கு உட்பட்ட தீர்வு ஒன்று மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கான இறுதித் தீர்வாக அமையவுள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுடன் இது பற்றிப் பேசி ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு மட்டுமன்றி மாவை சேனாதிராசா உட்பட கூட்டமைப்பின் அனைத்து நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கும் இது தெரியாத விடயமல்ல.

எனது காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்ற உறுதி மொழியை ஜனாதிபதியே வழங்கியபோது கூட்டாட்சி என்ற சுயாட்சி பேச்சுக்கு இடமில்லை என்ற உண்மையை மறைத்து விட்டே நிரந்தர தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையை வெளியிட்டனர். பிரதமர் மோடியும் எவ்வாறான தீர்வு என்பதை சம்பந்தனுக்குத் தெரிவிக்காமல் இருந்திருக்கமாட்டார்.

13ஆவது திருத்தத்துக்கு உட்பட்டே தீர்வு என்ற நிலைப்பாட்டை பிரதமர் மோடியும் ஜனாதிபதி மைத்திரியும் ஒப்புக் கொண்ட விடயத்தை தெரிந்து கொண்டு அதற்கு இரகசியமாக ஆதரவு வழங்க முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய நினைக்கிறார்போலும், கூட்டாட்சி எனக் கூறி நாட்டைத் துண்டாடி விட்டால் ஒன்றும் செய்ய முடியாது எனக்கூறும் அவர் நாட்டுக்கு நான் முதல்வராக வரவும், சிறைக்குச் செல்லவும் தயார் என்றும் கூறியுள்ளார்.

வடக்கு- கிழக்கை இணைத்து தனி நாட்டை உருவாக்க அரசு முனைவதாக எதிரணியினர் கூறுவதும், தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்துவதாகவே உள்ளது. சொந்த வீட்டில் குடியிருப்பதற்கே தமிழ் மக்கள் பெரும் போராட்டங்களை நடத்த வேண்டிய நிலையில் உள்ளனர் என்றால் ஏனைய விடயங்களில் தீர்வு காண அவர்கள் எவ்வாறெல்லாம் பிரயத் தனப்பட வேண்டி இருக்கும்? போர் நிறை வடைந்து ஏழு வருடங்கள் கடந்தும், தமிழ் மக்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவாகவே இருந்து வந்துள்ளது. எனினும் அது இப்போது நல்லிணக்கச் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்குத் திருப்தியளிக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டு அரசின் மீதான அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது. இலங்கையில் இனிப் போர் ஒன்று ஏற்படாதென யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

புலிகளின் தனிநாட்டுக் கொள்கையை சர்வதேச ரீதியில் அழிப்போம் என ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்துள்ளார். இதற்காக அவர் சர்வதேசங்களுக்கும் அலையத் தேவையில்லை.

சிறுபான்மை மக்கள் கேட்கும் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து மனப்பூர்வமாகச் செயற்பட்டால், அந்த அவசியம் இருக்காது. தனி நாட்டுக் கோரிக்கையை இப்போது தமிழர்கள் ஒதுக்கி விட்டு கூட்டாட்சி ,சுயாட்சி என்பவற்றையே கேட்கிறார்கள். தனி நாடும் புலிகளும், தென்னிலங்கை அரசியல் வாதிகளால் மட்டுமே முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இனவாதிகளை உரிய விதத்தில் கவனித்தால் அது சாத் தியமாகும். இன்றேல் இலங்கையில் என்ன நடக்கிறது என்ற சந்தேகம் மட்டுமே சர்வதேசத்தின் கேள்வியாக இருக்கும்.

## தலைவிதி மாறாத நிலையில் சுன்னாகம்-புத்தூர் வீதி

சுன்னாகத்திலிருந்து புத்தூர்ச் சந்தி வரை செல்லும் வீதி, போக்குவரத்துச் செய்வதற்கு ஏற்ற வகையில் இல்லாததால் அதனைப் பயன்படுத்துபவர்கள் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இறுதியாக இடம்பெற்ற புனரமைப்பு வேலைகளின்போது குழிகளுள் கற்களைப் போட்டுத் தார் ஊற்றியதைத் தவிர வேறொன்றும் இடம்பெறவில்லை. இதன் காரணமாக வீதி மேடு பள்ளம் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. இதனால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த வீதியின் மேற்குத் திசையில் காங்கேசன் துறை வீதியும், கிழக்குத் திசையில் பருத்தித்துறை வீதியும் அமைந்துள்ளன. இந்த இரு வீதிகளும் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன. ஆனால் சுன்னாகம், புத்தூர் வீதி எந்தவித மாற்றமுமின்றிக் காணப்படுகின்றது. மோட்டார் சைக்கிள், ஓட்டோ போன்ற சிறிய ரக வாகனங்களில் இந்த வீதியூடாகப் பயணிப்பவர்களின் நிலைதான் பரிதாபகரமாக மாறியுள்ளது. இந்த வாகனங்கள் மேடு பள்ளங்களில் ஏறிவிழும்போது உடல் ரீதியான வேதனை ஏற்படுகின்றது. அத்துடன் நேரமும் விரயமாகின்றது.

இதைவிட சில ஓட்டோ சாரதிகள் இந்த வீதியில் செல்வதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றனர். சிலர் அதிக கட்டணத்தைக் கேட்பதையும் அவதானிக்க முடிகின்றது.தென்னிலங்கையிலிருந்து இங்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகள் நிலாவரைக் கிணற்றைப் பார்க்காமல் செல்வதில்லை. தினமும் வந்து செல்கின்றனர். இவர்கள் பயன்படுத்துகின்ற வாகனங்களும் வீதியின் மோசமான நிலை காரணமாகச் சிரமங்களை எதிர்கொள்கின்றன.

தற்போது சிறிய சிறிய வீதிகள்கூட காப்பெற் வீதிகளாக மாறிவரும் நிலையில் இந்த வீதியின் தலையெழுத்து இதுவரை மாறாது இருப்பது வேதனைக்குரியது. இந்த வீதியூடாகத் தினமும் பருத்தித்துறைக்குப் பல பஸ் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் சாவகச்சேரிக்கான அரச பஸ் மற்றும் மினிபஸ் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் உரியவர்கள் இவற்றைக் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

ஆகவே இனிமேலும் தாமதிக்காது இந்த வீதியைக் காப்பெற் வீதியாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும் என்பதே தினமும் பாதிக்கப்பட்டுவரும் மக்களின் வேண்டுகோளாகும்.

மா.மகேஸ்வரி, கந்தரோடை.

## இலந்தைக்குளம் வீதியில் விழுந்து எழும்பும் மக்கள்

ஏ–9 வீதியில் உள்ள மாம்பழம் சந்திக்கும், கொழும்புத்துறை வீதிக்கும் இடையிலுள்ள இலந்தைக்குளம் வீதியின் மோசமான நிலையை அதிகாரிகள் கவனத்தில் கொள்ளாதது கவலையை ஏற்படுத்துகின்றது. தினந்தோறும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், சாதாரண பொதுமக்கள் எனப் பலரும் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தப் பகுதியிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தைச் சென்றடைவதற்கும் மேற்படி வீதியையே பயன்படுத்துகின்றனர். ஆனால், இந்த வீதி மோசமாகச் சேதமடைந்து மேடு பள்ளங்களுடன் காணப்படுவதால் இதனைப் பயன்படுத்துபவர்கள் அனுபவிக்கின்ற சிரமங்கள் சொல்லும் தரமன்று. அதிலும் மழை காலங்களில் வீதியில் ஆங்காங்கு வெள்ளநீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்தில் அதிக சிரமங்கள் ஏற்படுகின்றன.

இரவு வேளைகளில் சைக்கிளில் சென்ற சிலர் தடுமாறிக் கீழே வீழ்ந்த சம்பவங்களும் நிறையவே நடந்துள்ளன. கீழே வீழ்ந்து எழும்புபவர்கள் எவரையோ திட்டியவாறு செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

ஆகவே மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மோசமான நிலையிலுள்ள இந்த வீதியைச் சீரமைக்கவேண்டும் என்பதே பாதிக்கப்பட்டு வரும் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

மா.கோகிலன், அரியாலை

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப்பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கேளிக்கை விடுதிச் சூட்டுச் சம்பவம் சுட்டவரின் மனைவிக்கும் தொடர்பு

### பொலிஸார் தீவிர விசாரணை

வொஷிங்டன், ஜூன் 17
அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இரவு விடுதியில் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில், புதிய கோணத்தில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் இரண்டாவது மனைவிக்கும் இந்தத் தாக்குதலில் தொடர்பு இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

துப்பாக்கிச் சூடு நடத்திய ஒமர் மைதீனின் இரண்டாவது மனைவி நுர்சல்மான் தற்போது பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்யப்படுகிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புளோரிடா மாகாணத்தின் ஓர்லாண்டோ நகரில் உள்ள 'பல்ஸ்' ஓரினச்சேர்க்கையாளர் இரவு விடுதியில் திடீரென நுழைந்த மைதீன் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினார். அதில் 49 பேர் உயிரிழந்தனர். மைதீன் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மைதீன் ஆப்கன் வம்சாவளியை சேர்ந்தவராவார். தற்போது புளோரிடா மாகாணத்தின் போர்ட் செயின்ட் லூசி நகரில் மைதீன் வசித்துள்ளதுடன், ஓரின சேர்க்கையாளர் என்றும் கூறப்படுகின்றது. அதனால் அவரது முதல் மனைவி யூசுபி விவாகரத்துப் பெற்றுவிட்டார் என்றும், மைதீன் நுர்சல்மானை இரண்டாவதாகத் திருமணம் செய்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கொலை நடந்த தினத்தன்று நுர்சல்மான் வெடி பொருள்கள் வாங்க மதீனுடன் சென்றார், துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட இரவு விடுதிக்கு ஒமரை காரில் கொண்டுவந்து விட்டும் சென்றார். அதேபோல் தாக்குதல் நடத்தப்படுவதற்கு சிறிது நேரத்துக்கு முன்பு அவர் மைதீனுடன் அலைபேசியில் பேசினார். இவற்றால் குறித்த தாக்குதல் நுர்சல்மானுக்குத் தெரியாது நடந்திருக்க வாய்ப்பில்லை என்று பொலிஸார் நம்புகின்றனர். நுர்சல்மான் இன்னமும் கைது செய்யப்படவில்லை. எனினும் பொலிஸார் அவரை விசாரணை செய்கின்றனர்.

மைதீனின் வீடு, விசித்திரமான முறையில் அலங்கரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தீவிரவாத மனோபாவமான பொருள்கள், காட்டூன் கதாபாத்திரங்களால் குளியலறை, படுக்கையறை என்பன அலங்கரிக்கப்பட்டுள்ளனவாம். அத்துடன் இஸ்லாமிய ஒழுக்கம் தொடர்பான புத்தங்களும் அங்கு காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்

## 2,000 ஆண்டுகள் பழைய வெண்ணெய்க் கட்டி மீட்பு!



டப்ளின், ஜூன் 17
2 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான வெண்ணெய்க் கட்டி ஒன்று அயர்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எரி பொருள் தேவைக்காக மண் அகழ்ந்தபோதே இந்த வெண்ணெய்க் கட்டி கண்டுபிடிக்கப்பட்டது. 12 அடி ஆழத்தில் காணப்பட்ட இந்த வெண்ணெய்க் கட்டி 10 கிலோ எடை கொண்டதாகக் காணப்படுகின்றது.

அயர்லாந்தில் முன்னரும் இவ்வாறான பல வெண்ணெய்க் கட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


2013ஆம் ஆண்டு 45 கிலோ எடையுடைய 5 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான வெண்ணெய்க் கட்டி கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. புராதன காலத்தில் வெண்ணெய் விலை உயர்ந்த பொருளாகக் காணப்பட்டது. தமது வாழ்க்கை செழிப்புறவும், ஆவிகள் மற்றும் கடவுள்களுக்காகப் படைப்பதற்கும் என பல அடி ஆழக் கிடங்குகளில் வெண்ணெய்க் கட்டிகள் காணிக்கையாகப் படைக்கப்பட்டுள்ளன என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காலநிலை, ஒட்சிசன் அளவு என்பன நிலக்கீழ் வெண்ணெய்யின் இருப்பைத் தீர்மானிக்கின்றன. அவை மெழுகு போன்று காணப்படுகின்றன என்றும், தற்கால மணத்தைக் கொண்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-ரி4)

# அலெப்போ நகர் தாக்குதல்கள் நி

### 48 மணி நேரப் போர் நிறுத்தம் நடைமுறை



டமஸ்கஸ், ஜூன் 17
சிரியாவின் அலெப்போ நகரில் 48 மணி நேரப் போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கால நேரத்தின் அளவு அதிகரிக்கப்படலாம் என அமெரிக்கா மற்றும் ரஷ்யா தெரிவித்துள்ளன.

நேற்றில் இருந்து ஐ.எஸ்ஸுக்கு எதிரான கூட்டுப்படை, ரஷ்ய படை என்பவற்றின் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.


ஆயுதப் போரைக் கட்டுப்படுத்தவும், உறுதிப்பாட்டைப் பேணவும் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்தது.

ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகக் கடந்த வாரம் கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் பெரும் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று அங்குள்ள மனித உரிமைகள் அமைப்புக்கள் தெரிவித்தன. தாக்குதலில் மருத்துவ உதவி வழங்கும் மையங்களும் இலக்கு வைக்கப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னர் ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரம் பெற்றிருந்தன. அதனால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். பாடசாலைகள், மருத்துவமனைகள், பொது மக்கள் குடியிருப்புக்கள் என்பனவும் தாக்கப்பட்டன. அதனால் மனிதாபிமான உதவிகள் வழங்குவதில் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அங்குள்ள ஐ.நா. குழு தெரிவிக்கிறது.

தற்போது போர் நிறுத்தம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள நிலை உதவிகள், மனிதாபிம வழங்குவதில் உள்ள சி தளர்ந்துள்ளது என்றும் தது.

## பாலம் இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் சாவு; அறுவர்



பெர்லின், ஜூன் 17
ஜேர்மனியில் பாலம் ஒன்று இடிந்து விழுந்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். 6 பேர் காயமடைந்தனர்.

236 மீற்றர் நீளமான இந்தப் பாலத்தில் 40 மீற்றர் தற்போது கட்டப்பட்டதாகும். புதிதாகக் கட்டப்பட்ட பகுதியே இடிந்து விழுந்துள்ளது.

பாலம் இடிந்து விழுந்தபோது கட்டுமானப் பணியாளர்கள் 20 பேர் சம்பவ இடத்தி னர். விபத்துக்க இதுவரை அறிய ஒருவர் கொல்ல உத்தியோகபூர் விக்கப்பட்டுள்ள சிலர் உயிரி கூடும் என்று அங் கும் தகவல்கள் றன.




ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவதை வலியுறுத்தும் வகையில் லண்ட யில் பரப்புரை தொடர் படகு அணிவகுப்பு நடைபெற்றது. இந்தப் படகு அணிவகுப்பில் அ முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர் மீதான
# நிறுத்தம்

றைப்படுத்தப்பட்டது



ள்ள நிலையில் மருத்துவ
னிதாபிமான உதவிகள்
உள்ள சிக்கல் சிறிதளவு
து என்றும் ஐ.நா. தெரிவித்

இதனை மனச்சாட்சிக்கு மாறான போர் என்று வர்ணித்துள்ள அங்குள்ள ஐ.நா. குழுவினர், ஐ.எஸ். அமைப்பைக் கட்டுப்படுத்துவதற்கு வேறு வழி இல்லாதுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். (ற-ரி4)



## குரங்குகளால் திண்டாடும் கிராமம்

பீஜிங், ஜூன் 17

சீனாவில் கிராமம் ஒன்றை சுற்றுலா மையமாக மாற்ற எடுத்த முயற்சி கிராமத்தவர்களை கிராமத்தை விட்டு ஓட வைத்துள்ளது.

தென் மேற்கு சீனாவில் சிச்சுவன் மாகாணத்தில் உள்ள சியாங்பெங் கிராமம் தன்னை சுற்றுலாப் பகுதியாகப் பிரகடனப்படுத்துவதற்காக 2003ஆம் ஆண்டு 73 குரங்குகளை வளர்க்க ஆரம்பித்தது. 13 வருடங்களில் அவை பல்கிப் பெருகிவிட்டன. தற்போது குரங்குளின் சேட்டைகளால் 600 கிராம வாசிகள் கிராமத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

குரங்குகளுக்கு உணவுத் தட்டுபாடு ஏற்பட்டதும், அவை கிராம மக்களின் உணவுப் பொருள்கள், வயல்களை சூறையாட ஆரம்பித்தன. இத்துடன் சுற்றுலாப் பயணிகளையும் கடிக்க ஆரம்பித்தன.

அதையடுத்து 300 குரங்குகள் கூண்டினுள் அடைக்கப்பட்டு வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. ஆயினும் குரங்குகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் அந்தக் கிராம மக்கள் கிராமத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (ற-ரி4)

## ஐ.எஸ். தாக்குதல் அச்சத்தால் புருசல்ஸில் பாதுகாப்பு தீவிரம்



புருசல்ஸ், ஜூன் 17

புனித ரம்ழான் மாதத்தில் பெல்ஜியம் மீது ஐ.எஸ். அமைப்பு தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று அந்த நாட்டு உளவுத்துறை தெரிவித்துள்ளது. தலைநகர் புருசல்ஸ் நகர் மீதே தாக்குதல் நடத்தப்படும் சாத்தியம் அதிகம் உள்ளது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து மக்கள் அதிகம் கூடும் இடங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஐ.எஸ். அமைப்பினர் ரம்ழான் மாதத்தை முன்னிட்டு காணொலி ஒன்றை வெளியிட்டிருந்தனர். அதில் தாக்குதல் நடத்துங்கள் என்று தமது அமைப்பினருக்கு உற்சாகமூட்டப்பட்டது. முக்கியமான நாடு ஒன்றின் மீது நடத்தப்படும் தாக்குதல் நிலையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிடப்பட்டது. பெல்ஜியம் மீது ஐ.எஸ். அமைப்பு தாக்குதல் நடத்தும் சாத்தியம் அதிகம் உள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் பரிஸ் நகர் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரி பெல்ஜியத்தின் புருசல்ஸ் நகரிலேயே கைது செய்யப்பட்டிருந்தார். அங்குள்ள மொலென்பீக் மாவட்டத்தில் 80 சதவீதத்தினர் இஸ்லாமியர்களாவர். ஐ.எஸ். அமைப்பினர் ஊடுருவுவதற்கு அது இலகுவான வழியை ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் பெல்ஜியத்தில் இருந்து அதிகளவான இஸ்லாமிய இளைஞர்கள் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ற-ரி4)

## வர் காயம்

பவ இடத்தில் இருந்துள்ள
விபத்துக்கான காரணம்
ரை அறியப்பட வில்லை.
கொல்லப்பட்டார் என்று
யோகபூர்வமாக அறி
பட்டுள்ளபோதும் மேலும்
உயிரிழந்திருக்கக்
என்று அங்கிருந்து கிடைக்
கவல்கள் தெரிவிக்கின்

(ற-ரி4)



ல் லண்டன் தேம்ஸ் நதி
குப்பில் அரசியல் கட்சி
(ற-ரி4)

## சிரியப் போரில் நடுநிலையாக செயற்படவில்லை ஐ.நா.

### சர்வதேச வழக்கறிஞர் குழு குற்றச்சாட்டு



டமஸ்கஸ், ஜூன் 17

சிரியாவில் நடைபெற்றுவரும் போரில் ஐ.நா. நடுநிலை வகிக்கவில்லை. அரசு தரப்பினருக்குச் சார்பாக நடந்து கொள்கின்றது. அதனால் பொது மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு சர்வதேச வழக்கறிஞர் குழு குற்றஞ் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிரிய அரசுடன் உறவை பேணுவதற்காக ஐ.நா. ஒரு பக்கம் சார்ந்து நடந்து கொள்கின்றது. மிகப் பெரிய மனித உரிமை மீறலுக்கு ஐ.நா. துணை நிற்கின்றது.

முற்றுகையிடப்பட்ட 18 பகுதிகளில், 5 லட்சம் பொதுமக்கள் வெளியேற முடியாமல் அடைபட்டுள்ளனர். அரச படைகள் அனுமதிக்காத இடங்களில் உதவிகள் வழங்கப்படவில்லை.

ஐ.நா. சிரிய அரசுடன் இணைந்து இருந்து செயற்படுகின்றமை அதன் நடு நிலமைப் பிறழ்வைக் காட்டுகின்றது - என்றுள்ளது. (ற-ரி4)

## முதலை இழுத்துச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு

வொஷிங்டன், ஜூன் 17

அமெரிக்காவின் புளொரிடா மாகாணத்தில் முதலையால் இழுத்துச் செல்லப்பட்ட சிறுவன் சடலமாக மீட்கப்பட்டான்.

குடும்பத்துடன் டிஸ்னி வேள்ட்டுக்கு விடுமுறையைக்கழிக்க வந்த தம்பதியினரின் இரு குழந்தைகளில் ஒன்றான 2 வயதுச் சிறுவன் முதலையால் இழுத்துச் செல்லப்பட்டான். பல மணிநேர தேடுதல் வேட்டையின் பின்னர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டான்.

16 மணி நேரங்களின் பின்னர் சிறுவன் சடலமாக மீட்கப்படும்வரை டிஸ்னி நிறுவனம் தனது 7 நீர்நிலை விடுதிகளை தேடுதலுக்காக மூடியிருந்தது.

(ற-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை
# பிறந்த எண்ணின் பலன்கள் 6

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 6 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

முத்து, பவளம் போன்ற பொருள்களின் மூலம் வியாபாரம் செய்யலாம். எப்போதும் பிறரின் உதவியும், மக்கள் வசியமும், இயற்கையாகவே இவர்களுக்கு உண்டு. மற்றவர்களுக்காக வீடுகள் கட்டி, அதை விற்கும் தொழில்களில் இவர்கள் ஈடுபடலாம். கண்ணாடி, வாசனைப் பொருள்கள், பூக்கள், மாலைகள், வியாபாரமும் சிறந்ததே. சங்கீதம், இசை வாத்தியங்கள் ஆகியவை மூலம் நல்ல வருமானம் ஈட்டலாம்.

**திருமண வாழ்க்கை**

திருமணத்தின் மூலம் ஆதாயமும், இலாபமும்கிடைக்கின்றனவா? என்றே இவர்கள் கணக்குப் பார்ப்பார்கள். இருப்பினும் திருமணத்துக்குப் பின்பு மனைவியைநன்குகவனித்துக்கொள்வார்கள். மனைவியிடம் திருப்திக் குறைவு ஏற்பட்டால் மற்ற வழிகளில் ஈடுபடத்தயங்க மாட்டார்கள். எனவே 6 ஆம் எண்காரர்களை மணக்கும் பெண்கள் தங்களைத் தினமும் நன்கு அலங்கரித்துக் கொண்டு, கணவன்மார்களின் குணம் அறிந்து நல்ல சமையல், நல்ல உபசரிப்பு மூலம் நன்கு வசியம் செய்து கொள்ள வேண்டும். பின்பு இவர்களைப்போன்று, நல்ல கணவர்கள் அமைவது கடினம் என்று அவர்கள் உணர்வார்கள். இவர்களுக்கு 6, 9 எண்களில் பிறந்த பெண்களினால் நல்லதிருமண வாழ்க்கை அமையும். இவர்களின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியும். 1, 4, 5 ஆகிய எண்களில் பிறந்தோர்களைத் தவிர்த்துவிட வேண்டும். 3 ஆம் எண்காரர்களை மட்டும் மணக்கக்கூடாது.

மேலும், திருமண 1, 10, 19, 28, 6, 15, 24, 18, 27 ஆகிய திகதிகளிலும்,கூட்டு எண் 1, 6, 9 வரும் திகதிகளிலும் செய்து கொண்டால் மிக்க நன்மை தரும்.

**இவர்களது நண்பர்கள்**

6, 9 திகதிகளில் பிறந்தவர்கள் இவர்களுக்கு நண்பர்களாகவும், கூட்டாளிகளாகவும் இருப்பார்கள். 1, 5 ஆகிய திகதிகளில் பிறந்தோராலும் ஓரளவு நன்மை உண்டு. 3 ஆம் எண்காரர்களின் தொடர்பும், கூட்டுச் சேர்க்கையும் கூடாது! ஆனால், 3 எண்காரர்களால்தான் இவர்களுக்கு மிகப் பெரிய விதி வசமான உதவிகள் கிடைக்கும். ஆனால், அவை இயல்பாகவே எதிர்பாராமல் அமையும். இவர்களாகத் தேடிச் செல்லக்கூடாது. (3ஆம் எண்காரர்களால்) வேதனைதான் மிஞ்சும்.

**இவர்களது நோய்கள்**

பொதுவாகஇவர்கள் உணவுப்பிரியர்கள். எனவே உடல் பருமன் பிரச்சினைகள் உண்டு. மலச்சிக்கலும் அடிக்கடி ஏற்படும். புகைபிடித்தல், மது போதைப் பொருள்கள் போன்றவற்றையும் அறவே ஒதுக்கி விட வேண்டும். அடிக்கடி மூச்சுத் தொந்தரவுகளும், சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களும் ஏற்படும். திறந்த வெளிகளில் தினமும் உலாவி வரவேண்டும். இதன் மூலம் பல நோய்களைத் தவிர்த்து விடலாம்.

இந்த எண்காரர்கள் பக்தி, பொதுத் தொண்டு செய்தல் போன்ற குணங்களை வளர்த்துக் கொண்டால் இவர்களுக்குப் பெரும் புகழும், அமைதியான வாழ்க்கையும் நிச்சயம் ஏற்படும்.

**சிறப்புப் பலன்கள்**

உலக சுகங்களை அனுபவிக்கப் பிறந்தவர்களான 6ஆம் எண்ணைப் பற்றி விரிவாகப் பார்ப்போம். இவர்களுக்கு இந்த பூவுலகம் சொர்க்கமாகத் தெரியும். இந்த வாழ்க்கை வாழ்வதற்கே என்று இன்ப உணர்வுடன் வாழ்பவர்கள் இவர்களே. அசுர குருவான சுக்கிரனின் ஆற்றலை கொண்டது இந்த எண். எனவே, இயற்கையிலேயே உடல்சுகம், போகங்கள், வாசனைத்திரவியங்கள், ஆபரணங்கள் (ஆண்கள்கூட) ஆகியவற்றை அனுபவிக்கும் ஆசையும், அதிர்ஷ்டமும் உண்டு!

இவர்கள் கற்பனை வளமும், கலைகளின்பால் மிகுந்த ஈடுபாடும் போகப் பொருள்கள் மேல் நாட்டமும் உடையவர்கள். அழகிய பொருள்களையும், அலங்காரப் பொருள்களையும் வாங்கி வைத்துக்கொள்ள விரும்புவார்கள். அதிகம் செலவு செய்து, அழகான வீடு, பங்களா கட்டுவார்கள். பகட்டான வாழ்க்கையை வாழ விரும்புவார்கள்.

ஓவியம், இசை, பாடல்கள், நாட்டியம் போன்றவற்றில் மிக்க ஈடுபாடு உண்டு. மற்ற கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் ஆதரவளிப்பார்கள்.

(தொடரும்)

# கற்றல் செயற்பாட்டில் ஞாபகசக்தியின் முக்கியத்துவம்

திருமதி சித்ரூபினி விஜயநேசன்

ஒரு பிள்ளையினுடைய வளர்ச்சியிலே கற்றல் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானவை. கற்றல் செயற்பாடுகள் பாடசாலைகளில் இருந்து ஆரம்பிக்கின்றன என்றே பொதுவாக நாம் கருதுகின்றோம். ஆனால், ஒரு பிள்ளை கருவில் இருக்கின்றபோதே கற்றல் செயற்பாடுகள் ஆரம்பித்து விடுகின்றன. தொடர்ந்து குடும்பம் சமூகம், பாடசாலை போன்ற சூழல்களில் நடைபெறும் கற்றல் செயற்பாடுகள் பிள்ளையின் வளர்ச்சியில் பங்கு கொள்கின்றன. கற்றலானது பிள்ளைகளின் அறிவுத்திறன், மனப்பாங்கு, நடத்தை போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

கற்றல் செயற்பாடுகளில் கற்றல், எண்ணக்கரு உந்தல், புலக்காட்சி நுண்ணறிவு, கற்றல் இடர்பாடுகள் போன்ற வேறு காரணிகளின் செல்வாக்குகள் உள்ள போதிலும், ஞாபகசக்தி முக்கியத்துவம் பெறுகின்றது. ஞாபகம் என்பது புலக்காட்சியின் மூலம் உள்ளத்தினுள் உருவாகும் அமைப்புக்களை மீட்டறியும் சக்தியே ஆகும். பிள்ளைகளின் ஞாபகத்தை மூன்று அடிப்படைகளாக நோக்கின்; அவை தகவல்களை உள்வாங்குதல், தகவல்களை சேமித்தல், தகவல்களை மீள நினைவுபடுத்தல் என்றவாறு அமையும்.



உள்வாங்கிய பாடவிடயங்களைச் சேமித்து வைத்திருத்தல் மாணவனின் நினைவாற்றலுடன் தொடர்புடையது. உள்வாங்கலை மேம்படுத்த விடயத்திலுள்ள தொடர்புகளை அறிந்து கற்றல் வேண்டும். அத்துடன் கடினமான பகுதிகளைப் பலமுறை மீட்கும்போது, மனனம் செய்து முன்னேறலாம். ஒரு விடயத்தை திரும்பத் திரும்பப் படிக்கும்போது ஒவ்வொரு முறைக்கும் இடையில் இடைவேளை கொடுப்பது சிறந்தது. ஏனெனில் இடைவேளையின்போது கற்ற விடயங்கள் தொடர்பாக மூளையுள் ஏற்படும் கலங்களின் அமைப்புக்கள் உறுதியாகின்றன. சரியான ஒழுங்கில் சேமிக்கப்பட்ட பாடவிடயங்கள் மீள நினைவுபடுத்தலுக்கு இலகுவானவையாக இருக்கும். சேமிப்பின் பொழுது வேறு விடயங்களுடன் தொடர்பு ஏற்பட்டிருந்தால் அந்த விடயங்களை நினைவூட்டுவதன் மூலம் சேமித்த விடயத்தை ஞாபகப்படுத்தலாம். ஆகவே கற்பித்தலும் அவ்வாறு அமையவேண்டும்.

ஞாபகம் இரண்டு வகைப்படும். அவையாவன: குறுங்கால ஞாபகம், நீண்டகால ஞாபகம். குறுகியகால ஞாபகமானது உடனடித் தேவைகளுக்குப் பயன்படுகின்றது. குறுகிய கால ஞாபகத்திலுள்ள தகவல்கள் திரும்பத்திரும்ப பயன்படுகின்றபோது அவை நீண்ட கால ஞாபகத்துக்குச் செல்கின்றது. மாணவனின் குறுங்கால ஞாபகத்தை நீண்ட கால ஞாபகமாக மாற்றிக் கொள்வதற்கு ஆசிரியர் விடயத்தை அர்த்தமுள்ள வகையிலே அவனுக்குப்புரிய வைத்தல் வேண்டும்.

மாணவனிடம் உள்ள முன்கற்ற விடயங்களுடன் தொடர்புபடுத்தி பாடவிடயங்களைக் கொடுக்க வேண்டும். பாடவிடயத்தை மகிழ்ச்சியுடன் கொடுத்தலும் முக்கியப்படுத்தி விளங்கப்படுத்தலும் மாணவர்களுக்கு நீண்டகால ஞாபகம் ஏற்படுவதை இலகுபடுத்தும். மாணவர்களின் ஞாபகத்தை வளர்ப்பதற்கு கற்பனவற்றை நினைவில் நிறுத்துவதற்கு ஆசிரியர் சில வழிகளில் உதவியளிக்கலாம்.

1. கற்றலுக்கு ஏற்றவாறான இடவசதியை ஏற்படுத்துதல் (இடையூறுகள், குறுக்கீடுகள் அற்ற)
2. தேவையானவற்றை மட்டும் நினைவிலிருத்துதல்.
3. கற்றலுக்குப் பொருத்தமான விருப்பம், மனப்பாங்கு, ஊக்கம் உந்தல் போன்ற உளச் சூழலை ஏற்படுத்தல்.
4. ஞாபகத்தை ஏற்படுத்தும் காரணிகளை இனங்கண்டு பயிற்றுவித்தல்.
5. மாணவரின் உரு வெளிப்பாட்டுத்திறனையும் ஆசிரியர் பயன்படுத்தவேண்டும்.
6. கற்கப்படுவன அனுபவத்துடன் தொடர்புபடுத்தப்பட வேண்டும்.
7. எதுகை, மோனை போன்ற சந்த அமைப்பு ஞாபகத்தை நிலைநிறுத்த உதவும்.
8. தொடர்ச்சியான நீண்ட நேர பயிற்சி முறையைக் குறைத்து ஓய்வின் பின் பயிற்சி வழங்குதல்.
9. நீண்ட விடயங்களை நினைவில் நிறுத்துவதற்கு பகுதியான கற்றலை மேற்கொள்ளல்.
10. கற்பிக்கும் விடயங்களை முன்கூட்டியே ஒழுங்கமைப்பில் வகுத்துக்கொள்ளல்.
11. பாடங்களுக்கு இடையே ஓய்வெடுத்தல். ஓய்வெடுக்கும்போது வேறு விடயங்களைக் கற்கக்கூடாது.
12. கற்றலின் நடுவே பொருத்தமான வினாக்களின் மூலம் பாடமீட்டல் செய்தல்.

அத்துடன் மூளையின் தொழிற்பாட்டுக்கு அவசியமான நிறையுணவை மாணவர்கள் உட்கொள்வது தொடர்பான விழிப்பூட்டலை மேற்கொள்ளல்.

கற்றல் செயற்பாடுகளினுள்ளே முக்கியமான இடத்தை வகிக்கும் ஞாபகத்தைப் பேணத்தக்க பல்வேறு உபாயங்களை மேற்கொண்டு மாணவர்களின் வாழ்வை ஒளிமயமாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் கல்வி வாய்ப்புக்களுடன் கூடிய பாடத்தேர்வுகளும் நடைமுறைகளும்

சேனாதிராசா ஜெயானந்தன்



*(நேற்றைய தொடர்ச்சி)*

**உயிரியல் விஞ்ஞானப் பிரிவு**
(Biological Science Stream)

உயிரியல் விஞ்ஞானத்துறையைத் தெரிவு செய்யும் ஒருவர், ஊடக மொழி,கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதோடு விஞ்ஞானம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பின்வருவனவற்றுள் இரண்டு அல்லது மூன்று

01. இரசாயனவியல்
02. உயிரியல்
03. பௌதிகவியல்

இரசாயனவியலுடன் இவற்றில் ஒன்று அல்லது இரண்டு .

04. விவசாய விஞ்ஞானம்
05. கணிதம்

குறிப்பு : உயிரியல்,இரசாயனவியல், பௌதிகவியல் பாடச்சேர்மானங்களை இணைப்பதன் மூலம் மருத்துவம், பல்அறுவைச்சிகிச்சை,விலங்கு மருத்துவ விஞ்ஞானம் ஆகிய துறைகளைப் பல்கலைக்கழகத்தில் தேர்வு செய்ய முடியும்.

இரசாயனவியல், உயிரியலுடன் பின்வருவனவற்றுள் ஒன்று.

01. உணவுத்தொழில்நுட்பம்
02. உயிர் வள தொழில்நுட்பம்
03. விவசாயத் தொழில்நுட்பம்

குறிப்பு : இப்பாடத் தெரிவின் மூலம் பல்கலைக் கழகத்தில் பசுமைத்தொழில்நுட்பம்,விவசாய வியாபார முகாமைத்துவம் போன்ற கற்கை நெறிகளைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

**பௌதிக விஞ்ஞானப் பிரிவு**
(Physical Science Stream)

பௌதிக விஞ்ஞானத் துறையை தெரிவு செய்யும் ஒருவர் ஊடகமொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு, கணிதம் உட்பட மூன்று பாடங்கள் திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல்வேண்டும்.

பின்வருவனவற்றில் இரண்டு அல்லது மூன்று

01. இரசாயனவியல்.
02. இணைந்தகணிதம்
03. பௌதிகவியல்

இரசாயனவியலுக்குப் பதிலாக பின்வருவனவற்றில் ஒன்று-

04. உயர்கணிதம்.
05. தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்.

குறிப்பு: பல்கலைக்கழகத்தில் பொறியியல் கற்கையைத் தேர்வு செய்ய விரும்பும் ஒருவர் இரசாயனவியல், பௌதிகவியல், இணைந்த கணிதம் போன்ற பாடச் சேர்மானங்களை தேர்வு செய்தல் வேண்டும்.

பின்வருவனவற்றுள் மூன்றுபாடங்கள்.

01. இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றோடு பின்வருவனவற்றுள் ஒன்று.
02. உயர்கணிதம்/இரசாயனவியல்/ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமும்.

குறிப்பு: இந்தப் பாடச் சேர்மானம் மூலம் மென்பொருள் பொறியியல் கற்கைநெறியை பல்கலைக்கழகத்தில் தேர்வு செய்ய முடியும்.

இரசாயனவியல், பௌதிகவியல், இணைந்த கணிதம் இவற்றில் இரண்டு பாடங்களையும் பின்வருவனவற்றில் ஒன்றையும் தேர்வு செய்ய முடியும்.

04. மின் இலத்திரனியல் தகவல் தொழில்நுட்பம் / குடிசார் தொழில்நுட்பம் / பொறிமுறைத் தொழில்நுட்பம்.

குறிப்பு: மின் இலத்திரனியல் தகவல் தொழில்நுட்பம் / குடிசார் தொழில்நுட்பம் / பொறிமுறைத் தொழில்நுட்பம் இவற்றில் ஒன்றை எடுப்பதன் மூலம் பல்கலைக்கழகத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கைநெறியைத் தேர்வு செய்ய முடியும்.

**பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு**
(Engineering Technology stream)

பொறியியல் தொழில்நுட்பத்துறையை தெரிவு செய்யும் ஒருவர் ஊடகமொழி, கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதோடு மூன்று பாடங்களில் திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் ஊடகமொழி, கணிதம் சித்தி பெறாவிட்டாலும் ஓராண்டுக்குள் முழுமை செய்து தரப்படும் என்ற நிபந்தனையுடன் கற்கலாம்.

கட்டாயமாக எடுக்க வேண்டிய பாடங்கள்.

01. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
02. பொறியியல் தொழில்நுட்பம்.

மூன்றாவது பாடமாக பின்வருவனவற்றுள் ஒரு பாடம்.

01. பொருளியல்
02. புவியியல்
03. மனைப்பொருளியல்
04. ஆங்கிலம்
05. தொடர்பாடல் ஊடகக்கற்கை
06. சித்திரம்
07. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
08. வணிகவியல்
09. விவசாயம்.
10. கணக்கியல்
11. கணிதம்

குறிப்பு: பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் கற்கின்ற மாணவர்கள் பொறியியல் தொழில்நுட்ப (BET) இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொள்வர். மேலும், மூன்றாவது பாடமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை தேர்வு செய்வதனூடாக பல்கலைக்கழக அனுமதிக்கு இரண்டு வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. இதனூடாகத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் (BICT) இள மாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொள்வர்.

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவு**
(Biosystems Technology Stream)

உயிர் முறைமைகள் தொழில்நுட்பத்துறையை தெரிவு செய்யும் ஒருவர், ஊடகமொழி, கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதோடு மூன்று பாடங்களில் திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் ஊடகமொழி, கணிதம் சித்தி பெறாவிட்டாலும், ஓராண்டுக்குள் முழுமை செய்து தரப்படும் என்ற நிபந்தனையுடன் கற்கலாம்.

கட்டாயமாக எடுக்க வேண்டிய பாடங்கள்

01. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
02. உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்

மூன்றாவது பாடமாக பின்வருவனவற்றுள் ஒரு பாடம்.

01. பொருளியல்
02. புவியியல்
03. மனைப்பொருளியல்
04. ஆங்கிலம்
05. தொடர்பாடல் ஊடகக்கற்கை
06. சித்திரம்
07. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
08. வணிகவியல்
09. விவசாயம்
10. கணக்கியல்
11. கணிதம்.

குறிப்பு:
உயிர் முறைமைகள் தொழில்நுட்பத்தை தெரிவு செய்யும் ஒருவர் பல்கலைக்கழகத்தில் உயிர் முறைமைகள் தொழில்நுட்ப இளமாணிப் பட்டத்தைப் (BBST) பெற்றுக் கொள்ள முடியும். மேலும், மூன்றாவது பாடமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை தேர்வு செய்வதனூடாக பல்கலைக்கழக அனுமதிக்கு இரண்டு வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. இதனூடாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் (BICT) இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொள்வர்.

**விசேட துறை/ பொதுத் துறை (வேறு)**

ஒருவர் சுயவிருப்பின் அடிப்படையில் ஒன்றுக்கு மேற்பட்ட துறையின் கீழ் பாடச்சேர்மானங்களை செய்து கொள்ளுதல் இந்தப் பிரிவினுள் உள்ளடங்கும். இவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வேறு (Other) எனும் துறைக்குள் உள்ளடக்கப்படும்.

01. கலைத்துறை
02. வர்த்தகத்துறை
03. உயிரியல் விஞ்ஞானத்துறை
04. பௌதிக விஞ்ஞானத்துறை
05. பொறியியல் தொழில்நுட்பத்துறை
06. உயிர் முறைமைகள் தொழில்நுட்பத்துறை.


குறிப்பு:
மேற்காட்டப்பட்டுள்ள துறைகளிலிருந்து சுயவிருப்பின் அடிப்படையில் ஒருவர் விரும்பிய பாடச்சேர்மானங்களை தேர்வு செய்ய முடியும். ஆனால் இவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதி மிகவும் அரிதாக இருப்பதோடு, பல்கலைக்கழக அனுமதியை இழக்கும் வாய்ப்புக்களே அதிகம்.

(தொடரும்)

கட்டுரையாளர் : ஆசிரியர்,
வழிகாட்டல் ஆலோசனை,
முல்லைத்தீவு மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் கச்சித மான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமை களில் இந்தப் பகுதியில் வெளியிடப்படும்.



அ.அபர்ணிக,
தரம் 1 பி,
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

# வரலாற்றில் இன்றைய தினம்

1244 - பாரிஸ் விவகாரத்தையடுத்து பாரிஸில் 24 வண்டில் சுமையளவிலான யூத மத நூல்கள் எரிக்கப்பட்டன.

1631 - பிரவசத்தின் போது ராணி மும்தாஸ் சாவடைந்தார். அவரது நினை வாக முகலாயப் பேரரசர் ஷாஜஹான் அடுத்த 17 ஆண்டுகளில் தாஜ்ம ஹாலைக் கட்டி முடித்தார்.

1843 - நியூசிலாந்தில் மயோரி பழங்குடி மக்களுக்கும் பிரித்தானிய குடியேற்ற வாசிகளுக்குமிடையே முதலாவதும் பயங்கரமானதுமான ஆயுதச் சண்டை நடைபெற்றது.

1885 - சுதந்திரச் சிலை நியூயோர்க் துறைமுகத்தை வந்தடைந்தது.

1900 - மேற்கத்தைய கூட்டுப்படையும் ஜப்பானும் சீனாவின் ரியான்ஜின்டகு கோட்டையைக் கைப்பற்றின.

1940 - போல்ரிக் நாடுகளான எஸ்டோனியா, லத்வியா மற்றும் லுதுவேனியா ஆகிய 3 நாடுகளும் சோவியத் ஒன்றிய ஆட்சிக்குள் வந்தன.

1944 - டென்மார்க்கிடமிருந்து சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்தியதையடுத்து ஐஸ்லாந்து குடியரசு ஆனது.

1972 - வோட்டர் கேட் ஊழல் தொடர்பாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

1990 - கட்டுப்பாடுகளை மீறி விமானப்படை தன் இஷ்டப்படி செயற்படுவதாக ஜெனரல் சிறி ரணுதுங்கா கூறியதாக மாத்தயா தெரிவிப்பு.

1992 - "ஆயுதக் குறைப்பு" கூட்டுப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் ஜெல்ற்சின் ஆகியோர் ஒப்பமிட்டனர்.

1992 - பிலிப்பைன்ஸ் தேர்தலில் ராமோஸ் வெற்றி.

1992 - எகிப்தில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் 42 படையினர் சாவு.

2004 - உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களை மீளக் குடியமர அனுமதிக்குமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மனு.

2004 - ஈராக்கில் குண்டு வெடிப்பு 25 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயம். அமெரிக்கப் படை அதிர்ச்சியில்.

# நடக்கும் பொம்மை



சின்னச் சின்ன பொம்மையாம்!
சிரிக்கும் நல்ல பொம்மையாம்!
வண்ணம் போட்ட சட்டையில்
வந்து நிற்கும் பொம்மையாம்!

கையைத் தட்டிக் காட்டுமாம்!
கண்ணைச் சிமிட்டிப் பார்க்குமாம்!
அய்யா போன்ற தொந்தியாம்!
அழகு மிக்க பொம்மையாம்

எம்பி எம்பிக் குதிக்குமாம்!
இமைகள் மூடிச் சிரிக்குமாம்!
தம்பி கையில் இருக்குமாம்!
தரையில் விட்டால் நடக்குமாம்!

# அண்ணனுக்கு உண்டான மதிப்பு



ஓர் ஊரில் ஐந்து சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தகப்பன் இல்லை. தாய் மட்டுமே இருந்தாள்.

மூத்தவன் வீட்டில் இருந்து குடும்பத்தைக் கவனித்தான். ஊர் விவகாரங்களையும் தீர்த்து வைத்துக் கொண்டிருந்தான்.

மற்ற நால்வரும் சேர்ந்து நிலத்தை உழுது பயிர் செய்து வந்தனர். எல்லோரும் ஒற்றுமையாக இருந்தார்கள்.

மூத்தவனிடம் ஊர்க்காரர்கள் வந்து மரியாதையாக யோசனை கேட்டுப் போவதால், தாய்க்கு அவனிடம் பிரியம் அதிகம். அவனுக்கு அரிசிச் சோறும், மற்றவர்களுக்கு கம்மஞ் சோறும் போடுவாள்.

ஒருநாள், சகோதரர்களுக்கு இடையில் ஏதோ வாக்குவாதம் ஏற்பட்டது.

மூத்தவனிடம், "நாங்கள் உழவு வேலை பார்ப்பதும் நீ வீட்டில் இருப்பதும் என்ன நியாயம்? நீயும் எங்களுடன் வந்து உழவு வேலையைக் கவனி" என்று சொன்னார்கள்..

மறுநாள், அவர்களோடு மூத்தவனும் வயலுக்குப் புறப்பட்டான்.

தாய்க்கு மூத்தவனைப் பற்றிக் கவலை. உழவு வேலைக்கே போகாதவன் வெயிலில், கலப்பை பூட்டி எப்படி உழுவானோ? என்று வருத்தப்பட்டாள்.

மூவருக்கும் கம்மஞ் சோறு கட்டிய துடன், மூத்தவனுக்கு மட்டும் அரிசிச் சோறும், பதார்த்தமும் வைத்துக் கட்டி, எல்லாற்றையும் ஒரே பொட்டலமாகக் கொடுத்து அனுப்பினாள் தாய்.

எல்லோரும் கலப்பைகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த ஊரிலிருந்து மூத்தவனைத் தேடி, ஒரு விவகாரம் வீட்டுக்கு வந்தது. விசாரித்து விடயம் தெரிந்து கொண்டு நிலத்துக்குச் சென்றனர்.

விவகாரம் சொல்ல வந்தவர்களில் ஒருவன் மூத்தவனிடம், ஐயா, "இந்த விவகாரத்தைத் தீர்த்து வையுங்கள். உங்களுக்குப் பதிலாக நான் உழுகிறேன்" என்று சொல்லி கலப்பையைக் கட்டி உழத் தொடங்கினான்.

வேப்பமரத்து நிழலில் பஞ்சாயத்து நடந்து கொண்டு இருந்தது.

கலப்பையைக் கட்டி உழத் தெரியாமல் அண்ணன் முழிப்பான். அதன்பின், ஏர் பூட்டி வெயிலில் உழும்போது இப்பொழுது தெரிகிறது உழுவதில் உள்ள கஷ்டம்? என்று அவனிடம் கேட்கலாம் என்று எண்ணிக் கொண்டு இருந்த தம்பிகளுக்கு ஏமாற்றம் ஆகிவிட்டது. விவகாரத்துக்கு வந்தவன் அவனுக்காக உழ, அண்ணன் மரத்து நிழலிலே கால் மேல் கால் போட்டு, விவகாரம் தீர்த்துக் கொண் டிருப்பான் என்று அவர்கள் எதிர்பார்க்க வில்லை. விவகாரம் தீர்ந்தது. வந்தவர் கள் போய் விட்டார்கள்.

பகல் உணவுக்காக, சகோதரர்கள் உழவை நிறுத்தி விட்டு, மரத்து அடியில் வந்து உட்கார்ந்தார்கள். ஆளுக்கு ஒரு பொட்டலத்தைப் பெரிதாகப் பார்த்து எடுத்துக் கொண்டனர். சிறிதாக இருந்ததைத் தொடவில்லை.

அண்ணன் வந்து, மீதி இருந்த ஒரு பொட்டலத்தை எடுத்துப் பிரித்தான். சகோதரர்கள் அதைப் பார்த்ததும் வியப்படைந்தனர். "நிலத்துக்கு வந்தும்கூட, அண்ணனுக்கு அரிசிச் சோறு கிடைத்திருக்கிறதே. அது எம் கண்ணில் படவில்லையே" என்று பேசிக் கொண்டனர்.

பொட்டலத்திலிருந்த பதார்த்தத்தை எடுத்து சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் பிரியத்தோடு வற்புறுத்தி, கொஞ்சம் கொஞ்சம் கொடுத்துத் தானும் உண்டான் மூத்தவன்.

சகோதரர்கள் மூத்தவனிடம் "நாளை முதல் நீ உழுவதற்கு வரவேண்டாம். முன்போலவே, வீட்டிலேயே இருந்து, வழக்கம்போல் காரியங்களைப் பார்த்துக் கொள். எங்களுக்குப் பொறாமை இல்லை. அவரவர்களுக்கு உள்ளதுதான் கிடைக்கும்" என்று கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமனை அஞ்சோம்

மயிலணியூர் சாமஸ்ரீ தேசமான்ய
கலைஞர் பா.பாலச்சந்திரன்

இந்தப் பூமியில் பிறந்தவர்கள் ஒருநாளைக்கு இறப்பார்கள் என்பது இயற்கையின் நியதி. பிறப்பதும் இறப்பதும் எமக்கு அப்பாற்பட்டது. அதைக் கடவுளின் செயலென விடுகின்றோம். அதில் எங்கள் பங்கு எமது பாவ, புண்ணியமே. எமது திறமைக்கேற்ப உத்தியோகம் கிடைப்பதைப் போன்றதே அதுவும். இதை சோதிட சாஸ்திரம் பின்வரும் சுலோகத்தால் மிக அழகாகக் கூறும்,
"ஜனனீ ஜன்ம ஸௌக்யானாம் வர்த்தனீ குல ஸம்பத்தாம் பதவி பூர்வ புண்யானாம்" எமது பூர்வ புண்ணியம்தான் இந்தப் பிறப்பு, சுகம், துக்கம், குலம், செல்வம், பதவி எல்லாவற்றுக்கும் காரணம். எமது அடுத்த பிறப்பு நல்லதாக வேண்டுமெனில் நாம் நல்லவற்றை நினைக்க வேண்டும், செய்யவேண் டும். பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்கு பல்லாண்டு கூறுதுமே என்று சேந்தனார் கூறியதை நினைத்து சிவனுக்கு ஆள்ப்பட்டு வாழ்ந்தால் அவர் எம்மை உடனிருந்து காப்பார்.

நாம் சமயத்தின் உயர் விழுமியங்களை கைக்கொண்டு வாழ்ந்தால், நன்மைகளைச் செய்தால் சிவனாரின் அருள் எமக்குக் கிடைப்பது நிச்சயம். எமது நாலு ஆச்சிரமங்களில் முதலாவதான பிரமச்சரிய வாழ்க்கையில் நாம் நல்லொழுக்கத்தைப் பின்பற்றவேண்டும். சமய ஒழுக்கத்தை கடைப் பிடித்து வாழக் கற்க வேண்டும். இதை வள்ளுவர் கூற்றில் பார்போம்.
"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்"
சான்றோரின் அறிவுரைகளை எமக்கு ஆதாரமாக கைக்கொள்ளவேண்டும். ஏனெனில் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. முதலாவது ஆச்சிரமத்தை நிறைவு செய்து இரண்டாவதான கிருகஸ்தமெனும் இல்லறத்தில் புகவேண்டும். அதில் வள்ளுவனார் கூறியபடி வாழவேண்டும். தெய்வத்தை முன் நிறுத்தி வாழ்தல் மிகவும் நன்று. தலைக்கு வருவது தலைப்பாகையுடன் போய்விடும். இந்த ஆச்சிரமத்தில்தான் நாம் புதைந்து செய்வது அறியாது திகைக்கின்றோம். ஆசைகளைக் கூட்டி அதனால் சுமைகள்கூட வருந்துகிறோம். நாம் அவற்றோடு போராடக் காலம் கடந்து விடுகிறது. இப்போது வானப் பிரஸ்தம் கிடையாது இறுதி வரை இல்லறம்தான். சாவிக்கொத்தை இடுப்பில் இறுதிவரை சொருகுவதை விடுத்து, இறுதி யாத்திரைக்கான ஏற்பாடுகளில் இறங்க வேண்டும். அப்படி இறங்கிச் செயற்பட்டால் யமனுக்கோ அவனுடைய தூதுவர்க்கோ அஞ்ச வேண்டியதில்லை.
நாம் புதியதொரு இடத்துக்கு செல்ல வேண்டுமானால், எத்தனை விதமான ஆயத்தங்கள் செய்கின்றோம்? நாம் இறுதியாகச் செல்ல எவ்வளவு ஆயத்தங்கள் செய்ய வேண்டும்? அங்கு. எமக்கு புண்ணியம்தான் உதவமுடியும். எனவே அதுதான் எமக்கு கட்டுச் சோறாகும். நாம் நிறையச் செய்திருந்தால் அங்கு வரவேற்பும் மகிழ்ச்சியும் உண்டு. இல்லையேல் எம்பாடு கஷ்டம்தான். அது மட்டுமல்ல அடுத்த பிறவியும் கஷ்டமே. எமது சூக்கும, காரண சரீரங்கள்தான் வரும். எமது தூல சரீரமான இந்த உடம்பு இங்கேயே விடப்படும். அதை பிணம் என்று கூறுவர். பிள்ளை செய்யும் நீர்க்கடனே எமது செல்வம். எனவே நிறைவுடன் வானுலகம் செல்ல வழியேதுவெனப் பார்ப்போம்.
எமது நிலையை விளக்குகிறார் நாவுக்கரசர், அவர் சரியாகக் கூறியுள்ளார்.
பாலனாய் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்தநாளும் குறிக்கோளி லாது கெட்டேன்
அவரோடு சேர்ந்து நாம் கவலைப்படாமல் அவரே எமக்குவழி காட்டுகின்றார்.

தந்தையார் தாயார் உடன்பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாத்தாமாரே வந்தவர்
றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க் கிருவிசும்பிலிருக்கலமே.
யமபயம் நீங்க ஞானசம்பந்தர் சொல்வதைக் கேட்போம்.
இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாமம் நமச்சி வாயவே
நல்லவர் தீயவர் எனாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்ந மன்றமர் கொண்டு போமிடத்து
அல்லல் கொடுப்பன அஞ்செழுத்துமே
இப்போ எவ்வளவு நிம்மதி. எம்சிவனுக்கு எத்தகைய இளகிய உள்ளம்.
நம்மைப் போல்தான் சுந்தரரும் சிந்தை செய்ததாக பாடியுள்ளார். அவர் மார்க்கண்டேயருக்கு எம்பெருமான் செய்த அன்புத்திறத் தால் கவரப்பட்டதைக் காணுங்கள்.
ஆந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
ஆவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மை கண் டடியேன்
ஏந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே
இப்போ நாம் செய்ய வேண்டியது எமக்கு இஷ்ட தெய்வத்திடம் சரணடைந்து அந்தத் தெய்வத்தின் நாமத்தை ஓதவேண்டியதுதான். இதற்கு உதாரணம் இதோ அருணகிரியர் முருகப்பெருமானை பல இடங்களில் இப்படி வேண்டுகிறார்.
"உகந்த பாசக் கயிறெடு தூதர்கள் நலியாதே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே"
கீதையில் பகவான் நாசமடைவதில்லை எனக் கூறியுள்ளார். உயிர் துறக்கும் தறுவாயில் என்னை நினைப்பவன் என்னை அடைகிறான் என்கிறார் அபிராமிப்பட்டர். அம்பிகையிடம் வேண்டுகிறார்.
குரம்பைக் கடுத்துக் குடிபுக்க ஆவி வெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுக்கும் அப்போது வளைக்கை அமைத்து
ஆரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே
இவ்வாறு வழிபட வேண்டுமென்பதுதான் வள்ளுவரது கொள்கையும் என்பதை கீழ்வரும் குறள்மூலம் அறியலாம். உலகப்பற்றைகுறைத்து கடவுளை பிடித்துக் கொள்ள வேண்டும்.
பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு
பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.
இறைவனிடம் சரணடைய வேண்டும். உலகியல் வாழ்க்கையில் புளியம் பழமும் ஓடுமாதிரியும் இருக்கவேண்டும். எத்தனை வயதில்தான் இறைவாழ்க்கை தொடங்க வேண்டுமென்பதில்லை. எவ்வளவு புண்ணியம் சேர்க்கிறோமோ அந்தளவுக்கு எமது மறுமைக்கும் இறுதிக்கும் நல்லது. "ஒல்லும் வகையான் அறவை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல்" என்று வள்ளுவரும் "நம்மை தேடிவருந் தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங் கண்டீர், இலையாயினும்வெந்த தேதாயினும்பகிர்ந் தேற்றவர்க்கே" என அருணகிரியாரும் கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது புண்ணியவான்கள் வசதியான குடும்பத்தில் பிறப்பார்கள்.
வயதேற ஏற இல்லறத்தில் தாமரை இலையில் நீர் போல இருந்து கொண்டு சுமைகளையும் பற்றுகளையும் குறைக்க முயற்சிப்பது எமக்கு யமபயம் ஏற்படாது இருக்கத் துணை செய்யும். சில ஆசை அதிகமாக உள்ளவர்களின் உயிர் பிரிவதற்காக காசை உரைத்துப் பருக்குவார்கள். பலாப்பால் ஒட்டுவது போல் ஆசையும் எம்மைப் பிறவிப்பிணியில் சிக்கவைக்கும். ஆத்மஞானம் ஏற்பட்டால் பற்றுகள் மறையும். ஒரு விததெளிவு ஏற்படும். "நாமும் நமனை அஞ்சோம்" எனக்கூறி இறைவனின் அடியாருடன் கூடி வாழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்களின் சுமுகமான இருப்புக்கு அச்சுறுத்தலா?

அமெரிக்காவின் சமீபத்திய வரலாற்றில் மிக மோசமான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமாகப் பார்க்கப்படும் ஓர்லண்டோ துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பல்வேறு எதிர்வினைகளுக்கு வித்திடப் போகின்றது என்ற அச்ச உணர்வு நேர்வழியில் சிந்திக்கின்ற பலரையும் ஆட்கொண்டிருக்கின்றது.
அமெரிக்க நேரப்படி கடந்த சனிக்கிழமை இரவு கேளிக்கை விடுதியொன்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது 50 பேர் கொல்லப்பட்டதுடன், 50இற்கும் மேற்பட்டோர் காயமுற்றிருந்தனர்.
அமெரிக்காவில் இஸ்லாமிய கடும்போக்கு வாதம் தொடர்பில் வெறுப்புணர்வு அதிகரித்துவரும் நிலையிலும் முஸ்லிம் மக்கள் மீதான சகிப்புத்தன்மை நாளுக்குநாள் வீழ்ச்சியுற்றுவருகின்ற நிலையிலும் இந்தத் தாக்குதலை நடத்தியவர் ஆப்கானிஸ்தானைப் பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்க முஸ்லிம் என இனங்காணப்பட்டிருப்பது அமைதியை நாடுகின்ற-அன்புவழியைப் பேணுகின்ற பெரும்பாலான முஸ்லிம்களின் சுமுகமான இருப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றது என்றால் மிகையல்ல.
அமெரிக்காவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் என்பது கடந்த சில வருட காலப் பகுதியில் அடிக்கடி நிகழும் விடயங்களாக மாறியிருப்பதுடன், இதில் சம்பந்தப்படுகின்றவர்கள் வெள்ளையர்களாக இருக்குமிடத்து அவர்கள் மனநிலை சரியில்லாதவர்களாகவோ அல்லது தனிப்பட்ட கோபத்தின் விளைவாக தாக்குதலை மேற்கொண்டவர்களாகவோ அடையாளப்படுத்தப்பட்டு அந்தச் சம்பவங்கள் பதிவாகி விடுகின்றன.
தாக்குதலை மேற்கொண்டவர் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த முஸ்லிமாக இருந்துவிட்டால் அவரைச் சார்ந்த ஒட்டுமொத்த சமூகத்தையும் ஒரே அடைமொழிக்குள் கடும்போக்கு இஸ்லாமிய பயங்கரவாதம் என்று அழைத்து அனைவர் மீதும் சந்தேகக் கண் பார்வையைச் செலுத்தி மனங்களை வேதனைப்படுத்துவது வாடிக்கையாகி விட்டது.
உதாரணமாக எடுத்துக்கொண்டால், ஓர்லண்டோ சம்பவம் இடம்பெற்ற தினத்தில் அமெரிக்காவில் ஒட்டு மொத்தமாக 43 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன. ஓர்லண்டோ சம்பவத்தைத் தவிர்த்து ஏனைய 42 சம்பவங்களிலும் 5 சிறுவர்கள் உட்பட மொத்தமாக 18 பேர் கொல்லப்பட்டதுடன், 41 பேர் காயமுற்றிருந்தனர். ஆனால், ஏனைய சம்பவங்கள் குறித்து பெரிதாகப் பேசப்படவில்லை. ஓர்லண்டோ துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர் ஒரு முஸ்லிம் என்பதனால் அமெரிக்காவில் மட்டுமன்றி, சர்வதேச அளவிலும் செய்திகள் பெரிதாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
அமெரிக்கர்களின் வரலாற்றுடனும் கலாசாரத்துடனும் துப்பாக்கிகள் பின்னிப் பிணைந்துள்ளன. அரசமைப்பில் கூடத் துப்பாக்கிகளை வைத்திருப்பதற்கும் அதைத் தம்மோடு எடுத்துச்செல்வதற்கான உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலும், உரிய சட்டக் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படாமல் இதுபோன்ற நாசகார செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியுமா? என்பது சந்தேகமே.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவந்து கொண்டிருக்கும் நிலையில், தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களில் குடியரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் டொனால்ட் ட்ரம்ப் முஸ்லிம்களுக்கு எதிராக மோசமான பரப்புரைகளை முடுக்கிவிட்டுள்ள நிலையிலும், ஓர்லண்டோ போன்ற தாக்குதல்கள் அவரது விசமப் பரப்புரைகளுக்கு மேலும் வலுச்சேர்க்க வாய்ப்புக்கள் அதிகம். தமது தேசிய பாதுகாப்பைத் தேசப்பற்றுடன் இணைத்துப் பார்ப்பதில் முன்னணியில் திகழ்கின்ற நாட்டவர்களில் உண்மையாகவே முன்னணியில் திகழும் அமெரிக்கர்கள் இத்தகைய தாக்குதல்களால் அச்சத்தினால் ஆட்கொள்ளப்பட்டு ஜனாதிபதித் தேர்தலின்போது ட்ரம் போன்ற கடும்போக்காளரை அதிகாரத்துக்கு கொண்டு வந்து விடுவார்களோ என்ற பதற்றம் நேர்வழியில் சிந்திக்கும் பலரையும் பற்றிக்கொள்ளாமல் இருக்கவாய்ப்பில்லை.




தற்போதைய நெருக்கடி நிலமையால் அமெரிக்க மக்கள் எதிர்வரும் தேர்தலில் தமது சுயசிந்தனையை இழந்துவிடக்கூடாது. முஸ்லிம்களில் ஒரு சிலர் செய்கின்ற தவறுகளுக்காக ஒட்டுமொத்த சமூகத்தையும் பலிக்கடா வாக்கி வரலாற்றில் மோசமான விளைவுகளுக்கு வித்திடக்கூடாது.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | | | | 3 | | | |
| | | | | | | | | |
| | 6 | | | | 2 | | | 9 |
| | | | | | | | 1 | |
| | | | | 1 | | 4 | | 6 |
| 8 | 1 | 3 | 7 | | | 5 | | |
| 4 | 9 | | | 3 | | 6 | | 5 |
| | | 8 | | | 5 | | | |
| | | | | | 6 | 7 | | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 5 | 6 | 2 | 7 | 9 | 8 | 1 |
| 6 | 2 | 8 | 1 | 5 | 9 | 3 | 7 | 4 |
| 7 | 9 | 1 | 4 | 3 | 8 | 5 | 2 | 6 |
| 1 | 6 | 2 | 5 | 8 | 3 | 4 | 9 | 7 |
| 5 | 4 | 3 | 7 | 9 | 1 | 8 | 6 | 2 |
| 8 | 7 | 9 | 2 | 6 | 4 | 1 | 3 | 5 |
| 2 | 8 | 6 | 9 | 4 | 5 | 7 | 1 | 3 |
| 9 | 1 | 4 | 3 | 7 | 2 | 6 | 5 | 8 |
| 3 | 5 | 7 | 8 | 1 | 6 | 2 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரை யிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர் வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதேவேலை. சுடோக்குஎன்பதுஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** பொது விடயங்களில் ஆர்வம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில், வருமானம் பன்மடங்கு உயரும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். புத்திரர் விருப்பம் அறிந்து செயற்படுவீர்கள்.

**இடபம்:** திறமை மிக்கவராகச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு அளவில் வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபவிடயம் குறித்த பேச்சு நடந்தேறும்.

**மிதுனம்:** பணிகளில் கூடுதல் கவனம் தேவை. தொழிலில் விற்பனை இலக்கை அடைய, கால அவகாசம் தேவைப்படும். மிதமான வருமானம் கிடைக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

**கடகம்:** அடுத்தவர் ஆலோசனையால் பிரச்சினை ஏற்படலாம். கூடுதல் உழைப்பால், தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும். லாபம் மிதமாக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவில், சிக்கனமாக இருப்பது நல்லது.

**சிங்கம்:** உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். உறவினர்களுடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** உறவினரிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில் குளறுபடியை, புதிய அணுகுமுறையால் சரி செய்வீர்கள். பண விடயத்தில் அதிக விழிப்புணர்வு தேவை. உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**துலாம்:** நண்பருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், தாராள பண வரவு கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். தொழிலில், உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். லாபம் மிதமாக இருக்கும். உடல் நலனில் கவனம் செலுத்த தொடங்குவீர்கள்.

**தனுசு:** நிம்மதியான முறையில் வாழ்க்கை முறை அமையும். தொழில் அபிவிருத்தியால், பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**மகரம்:** சுயலாபத்திற்காக, சிலர் உங்களை புகழ்ந்து பேசுவர். தொழில், வியாபாரத்தில், விரிவாக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள். லாபம் படிப்படியாக உயரும். குடும்பத்தினரின் உதவி கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**கும்பம்:** நண்பரின் வழிகாட்டுதலால், நன்மை காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் பன்மடங்கு உயரும். சுய கௌரவத்திற்காக பணம் செலவழிக்க நேரிடலாம். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மீனம்:** பிறரது ஆலோசனையை ஏற்க தயங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில், பொறுப்பு அதிகரிக்கும். பெண்கள் விலை மதிப்பு மிக்க பொருள்களை கவனமாக கையாளவும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை.



## சோனாவின் முடிவு

கவர்ச்சியில் கிறங்கடித்த சோனா, தனது ரசிகர்களின் நெஞ்சு வெடித்து விடக்கூடிய அளவுக்கு ஒரு விபரீத முடிவு எடுத்திருக்கிறார்.

தமிழ், மலையாளம் இரண்டு மொழிகளில் நடிக்கிறேன். மலையாளத்தில் எனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தும் நிறைய பாத்திரங்கள் கிடைத்திருக்கிறது. அதே மாதிரி பாத்திரங்களைத்தான் தமிழிலும் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறேன். இனிமேல் குணச்சித்திர வேடங்கள் தான். அத்துடன் நானே கதை எழுதி, இயக்கவும் திட்டமிட்டிருக்கிறேன். விரைவில் அறிவிப்பு வரும். சொந்த வாழ்க்கையில் ஏகப்பட்ட பிரச்சினைகள். புது சோனாவை இனிமே நீங்க பார்க்கலாம் என்கிறார் அவர்.

WhatsApp




♥கடல் கன்னி♥ @Lachu_Twitz

வாழ்வில் எமக்கு வரும் துன்பங்கள் ஏதோ ஒரு வாழ்வியல் பாடத்தை எமக்கு கற்பித்து எம வாழ்க்கையை செம்மைபடுத்திச் செல்கிறது.



**கொப்பர் வயர்ல கனெக்‌ஷன் கொடுத்தா அது "மின்சாரம்"**



**மஞ்சள் கயிறுல கனெக்‌ஷன் கொடுத்தா அது "சம்சாரம்"**

**எந்நேரமும் முகப்புத்தகத்தில சினிமா நடிகருக்காக சண்ட போட்டுட்டு இருக்கிறியே**



**உனக்கு சோறு அவங்களாடா போடுறாங்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை ஆனி-04

சனிக்கிழமை - 18.06.2016
திதி: திரயோதசி பி.ப.02.47
நட்சத்திரம்: அனுசம் பி.இ.05.10 வரை
ராகுகாலம்: 08.53-10.23 வரை
சுபநேரம்: 02.53-04.23 வரை

# தயிர் போண்டா



### தேவையான பொருள்கள்

தயிர் - முக்கால் கோப்பை
கோதுமை மா - 1 கோப்பை
பெருங்காயத் தூள் - ஒரு சிட்டிகை
உப்பு - தேவைக்கேற்ப
சீரகம் - 1 கரண்டி
இஞ்சி - 1 சிறிய துண்டு (நறுக்கியது)
பச்சை மிளகாய் (நறுக்கியது) - 2
உடைத்த முந்திரி துண்டுகள் - 10
எண்ணெய் - பொரிப்பதற்குத் தேவையான அளவு.

### செய்முறை

தயிரை நன்றாகக் கலக்கி அதில் எண்ணெய் தவிர அனைத்துப் பொருள்களையும் சேர்த்து பஜ்ஜி மாவை விட சற்று கெட்டியாகக் கலக்கவும். எண்ணெய் காய்ந்ததும் மாவை போண்டாக்களாகப் பொரித்து எடுக்கவும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்




| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 900 | 800 |
| நண்டு | 250 | 200 | 300 | 400 | 400 | 400 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 500 | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | 700 | 500 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 400 | 500 | – |
| விளை | 650 | 500 | 400 | 800 | 600 | 50 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 500 | 600 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 450 | 400 | 350 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 300 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 300 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | – | 350 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 300 | 370 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | 100 |
| ஒட்டி | 300 | 250 | 150 | 400 | 300 | 150 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 300 | – | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 80 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 400 | 100 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | – | – |

### பாத் கியூப்

பாத் கியூப் அறிமுகமாகியுள்ளது. மேலை நாடுகளில் பயன்படுத்தப்படும் இவை, எமது நாட்டிலும் அறிமுகமாகியுள்ளன. இதனுள் நின்று குளிக்கும் போது தண்ணீர் தெறிப்பது தடுக்கப்படும். குளியலறையில் குளிப்பதற்கான தனித்த பகுதியாக இது காணப்படும். 30,000 ரூபாவில் இருந்து 35,000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 150 | – | 100 | 160 | 100 | 120 | – | 60 |
| கத்தரி | 160 | 140 | 160 | 200 | 200–220 | 200 | – | 120 |
| கரட் | 200 | 160 | 250 | 240 | 240 | 300 | – | 160 |
| மரவள்ளி | 80 | 70 | 80 | 60 | 60 | 80 | – | 50 |
| பயிற்றை | 180 | 150 | 160 | 180 | 160–180 | 120 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 250 | 240 | 200 | 200 | – | 160 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 120 | 160 | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 70 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 120 | 180 | 180 | 200 | – | 160 |
| பூசணி | 70 | 70 | 80 | 80 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 180 | 180 | 200 | 140 | 200 | 200 | – | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 | 60 | 80 | – | 40 |
| கீரை | 30 | 40 | 50 | 20 | 40 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 35 | 40 | 30 | 45 | 30 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 800 | 550 | 600 | 600 | 600 | 800 | – | 450 |
| புடோல் | 100 | 100 | 100 | 140 | 140 | 120 | – | 80 |
| கோவா | 180 | 160 | 180 | 180 | 180 | 220 | – | 120 |
| வெண்டி | 160 | 120 | 160 | 160 | 140 | 200 | – | 60 |
| போஞ்சி | 240 | 180 | 180–240 | 200 | 200 | 240 | – | 160 |
| லீக்ஸ் | 240 | 180 | 160–240 | 240 | 220 | 250 | – | 120 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30–35 | 30 | 35 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 110 | 110 | 100 | – | 100 |
| தேசிக்காய் | 250 | 250 | 250 | 250 | 200 | 150 | – | 180 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 15 | 20 | 20 | – | 12 |
| கறிமிளகாய் | 240 | 240 | 240 | 140 | 300 | 200 | – | 150 |
| இராசவள்ளி | 200 | – | 200 | 180 | – | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 550 | 240 | 350 | 300 | – | 160 |

- பொதுவாக சின்ன மீன் தொட்டிகளை விட பெரிய மீன் தொட்டிகளை பராமரிப்பது சுலபமாகும். மீனின் ஆயுள் காலமும் நீடிக்கும்.
- தங்க மீன்களைக் கோள வடிவிலான தொட்டியில் போடவே கூடாது. அதில் போட்டால் மீன்கள் சுற்றி வர போதுமான இடம் கிடைக்காமல், வேகமாக இறக்கக்கூடும். மீன்தொட்டியில் உள்ள தண்ணீரை எப்போதும் முழுமையாக மாற்றக்கூடாது.
- ஒவ்வொரு வாரமும் 10-12 சதவீத அளவு தண்ணீரைத்தான் மாற்ற வேண்டும். தொட்டியில் வடிகட்டுதல் அமைப்பு நிறுவப்பட்டிருந்தால், 30-50 சதவீத தண்ணீரை ஒரு மாதத்துக்குப் பிறகுகூட மாற்றலாம். மீன்களுக்கு எனத் தனியாக உணவுகள் உள்ளன.
- காலை ஒரு முறை மாலை ஒரு முறை என்று உணவளித்தால்போதும். பொதுவாக தூய்மையான நீரில் வளரும் மீன்களை வளர்த்தால் பராமரிப்பதும் சுலபம், செலவும் குறையும். தூய்மையான நீரில் வாழும் மீன்கள் புதுச் சூழ்நிலைக்கு ஏற்ப சுலபமாக தன்னை மாற்றிக்கொள்ளும். இதற்கான செலவு என்று பார்த்தால், மீன்களுக்குத் தேவையான உணவு, வடிக்கட்டுதல் போன்ற அடிப்படை வசதிகள் எல்லாம் இருந்தால் பராமரிப்பதும் சுலபம்.
- மீன்கள் சுவாசிப்பதற்கு அதிக அளவில் ஒட்சிசன் தேவைப்படும். இல்லையென்றால், அவைகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்படும். மேலும், அவைகளின் கழிவுகள் அவைகளுக்கு நஞ்சாக மாறும் முன், கழிவுகள் அகற்றப்படவேண்டும். இவை இரண்டையும் குறிப்பிட்ட அளவிலான நீரே செய்துவிடும். அதனால் தண்ணீரை போதுமான காலகட்டத்தில் மாற்றவேண்டும்.



## மீன்களை எப்படி வளர்ப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனையற்ற நாட்டை உருவாக்குவதற்கு இணையும் மொபிடெல்

இலங்கையின் தேசிய கையடக்கத் தொலைபேசி வலையமைப்பான எஸ்.எல்.ரி மொபிடெல், போதைப் பொருள் அபாயத்தை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிப்பதற்காக முழு நாட்டையும் ஒரே மேடைக்குக் கொண்டுவர, ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய நிலையம் முன்னெடுத்த விசேட வேலைத்திட்டத்துடன் இணைந்துள்ளது. தேசிய மட்டத்தில் இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்கமைய, போதைப் பொருள்கள் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைத்து, இலங்கையில் முதன் முறையாக போதைப்பொருள் ஒழிப்புத் தகவல்களை எஸ்.எம்.எஸ் ஊடாகப் பரிமாறிக் கொள்ளவும், தொலைபேசி ஊடான ஆலோசனைச் சேவைகளைச் செயற்படுத்தவும் தற் போது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.



ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய நிலையத்தின் தலைவர் பேராசிரியர் ரவீந்திர பெர்னாந்து மற்றும் எஸ்.எல்.ரி மொபிடெல் நிறுவனத்தின் தலைவர் பி.ஜீ. குமாரசிங்க சிறிசேன ஆகியோரின் வழிகாட்டல்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட இந்த வேலைத் திட்டம், இலங்கையில் போதைப் பொருளில் இருந்து நிவாரணம் பெறு தல் மற்றும் ஆலோசனை ஊக்குவிப்பு என்பனவற்றுக்காக வைக்கப்பட்ட மற்றுமொரு காலடியாகும்.

போதைப்பொருள் என்பது நாட்டில் காணப்படும் ஒரு பிரதான சமூகப் பிரச்சினையாகும். போதைப்பொருளினால் நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்தல், இளம் சந்ததியினர் வழிதவறுதல், தொழில் புரியும் மக்கள் நோயாளிகளாதல், சமூக ஸ்திரத்தன்மையில் பிரச்சினை ஏற்படுதல் மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி குன்றுதல் போன்ற பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதை அனைவரும் அறிவர்.

இந்த வேலைத்திட்டத்திற்கமைய, சிறிலங்கா ரெலிகொம் மொபிடெலினால் ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய நிலையத்தின் அழைப்பு மத்திய நிலையம் மேலும் பல புதிய தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டதாக மாற்றி அமைக்கப்படுகின்றது. அத்துடன், மொபிடெல் தொலைபேசி ஊடாக ஐ.வி.ஆர். முறை மூலம் சிறிய அழைப்புகள் மற்றும் குறுந்தகவல்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி போதைப்பொருள் சார்ந்த முறைப்பாடுகளை முன்வைக்கவும், போதைப்பொருள் நிவாரண ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும் புதிய தொகுதியொன்று ஸ்தாபிக்கப் பட்டுள்ளது. மக்களுக்கு மிகவும் இலகுவாகப் பயன்படுத்தக் கூடிய கையடக்கத் தொலைபேசி தொழில்நுட்பத்தின் மூலம் இந்தத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருப்பது முக்கிய அம்சமாகும்.

இதன்போது மொபிடெல் தொலைபேசிகள் ஊடாக 1984 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவல்கள் மூலம் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும். 1984 என்ற இலக்கத்துடன் தொலைபேசி மூலம் இணைந்து கொள்பவர்கள், அதற்காக அமைக்கப்பட்டுள்ள அழைப்பு மத்திய நிலையத்தின் ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய நிலைய அதிகாரிகள் மற்றும் அந்த நிறுவனத்தின் தூரப் பிரதேசங்களிலுள்ள ஆலோசகர்களுடன் இணைக்கப்படுவார்கள். இந்த முறைப்பாடு தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு மேலதிகச் செயற்பாடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அழைப்புகள் மற்றும் குறுந்தகவல்கள் என இரு வழிகளிலும் இந்த முறைப்பாடுகளை முன்வைக்க முடியும்.

மொபிடெல் தொலைபேசிகள் மூலம் போதைப்பொருள் எதிர்ப்பு ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள 1984 என்ற இலக்கத்தை அழைக்கவேண்டும். அதில் பிரதான மூன்று மொழிகளில் ஒன்றைத் தெரிவுசெய்து ஆலோசகரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த நபர், ஆரம்ப நேர்காணலின் பின்னர், தான் இணைந்து கொண்ட ஆலோசகருடன் நேரடியாக உரையாடும் வசதியைப் பெறுவார். அந்த ஆலோசகருக்கென விசேட தொலைபேசி இலக்கம் பெற்றுக்கொடுக்கப்பட்டு, அதன் மூலம் உரிய ஆலோசகர்களின் சேவையைப் பரிமாறக் கூடியதாக இருப்பது மற்றுமொரு விசேட அம்சமாகும்.

இதற்கு மேலதிகமாக, போதைப்பொருள் ஒழிப்பு பற்றிய ஆலோசனைகளையும், ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய நிலையம் தொடர்பான தகவல்களையும் தன்னியக்கத் தகவல் சேவை ஊடாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது மூன்று மொழிகளிலும் 24 மணி நேரமும் செயற்படும். இதனால் போதைப் பொருள் எதிர்ப்புத் தொடர்பாக முக்கிய தகவல்களை மிக இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த வேலைத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டுள்ள மற்றுமொரு திட்டமான நாளாந்த குறுந்தகவல் சேவையாகும். இது, ஆபத்தான ஔடதக் கட்டுப்பாட்டு தேசிய மத்திய நிலையத்திற்கு போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக மக்களை அறிவுறுத்தக் கிடைக்கும் ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும். (த)

# தேயிலை, இறப்பர், தென்னை செய்கைகளுக்கு உரமானியம்

தேயிலை, இறப்பர் மற்றும் தென்னைச் செய்கைகளுக்கான உரமானியம் வழங்கும் நடவடிக்கை கடந்த 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வு காலியில் முன்னெடுக்கப்பட்டதாகப் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க குறிப்பிட்டார்.

ஒருஹெக்டேயருக்குக் குறைந்த காணியில் தேயிலை மற்றும் தென்னைச் செய்கை மேற்கொள்ளும் செய்கையாளர்களுக்கான ஒரு வருட உரமானிய பணம், அவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் பெருந்தோட்டக்கைத்தொழில் அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

அதற்கமைய தேயிலைச் செய்கையாளர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாவுக்கான உரமானியக் காசோலையும், தென்னைச் செய்கையாளர்களுக்கு 9 ஆயிரம் ரூபா உரமானியக் காசோலையும், இறப்பர் செய்கையாளர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவுக்கான உரமானியக் காசோலையும் வங்கியில் வைப்பிலிடப் பட்டுள்ளது.

உரமானியத்திற்குப் பதிவு செய்துள்ள 80 வீதமான விவசாயிகளுக்கான காசோலைகள் அவர்களுடைய வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் உபாலி மாரசிங்க குறிப்பிட்டார்.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளுக்காக 2,194.4 மில்லியன் ரூபா நிதி திறைச்சேரியூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## வணிகம்

# அரிசிக்கு எதிர்காலத்தில் தட்டுப்பாடு ஏற்படாது

சீரற்ற வானிலையால் பல ஏக்கர் விவசாயச் செய்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தபோதிலும், எதிர்காலத்தில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

தேவையான நெல், ஏற்கனவே களஞ்சியங்களில் உள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் திசாநாயக்க குறிப்பிட்டார்.

2015-2016 பெரும்போகத்தில் 135,000 மெற்றிக் தொன் அரிசி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த போகங்களின்போது கொள்வனவு செய்யப்பட்டு, எஞ்சியுள்ள பழைய நெல் தொகையை விலைமனு கோரல் மூலம் விற்பனை செய்வதற்கு அரசின் அனுமதி கிடைத்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கூறினார்.

புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ள நெல், உடனடியாக விநியோகிக்கப்படமாட்டாது என்றும், தேசிய ரீதியாக அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் அது குறித்து ஆராய்ந்து போதுமானளவு நெல்லை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் சபையின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நாட்டின் பல மாவட்டங்களில் சுமார் 30,000 ஏக்கர் வயல்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கமநல சேவைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியிருந்தது. (த)

# நுட்பம்

## மழையை அறிய ரோபோக்கள்



மழை வருவதை முன்கூட்டியே கணித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கக் கடலுக்கு அடியில் ரோபோக்களை அமைக்கும் பணிகளை இந்திய, இங்கிலாந்து விஞ்ஞானிகள் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர். தற்போது அளவுக்கு அதிகமான பருவ மழை பெய்து வருவதால் பெரிய அளவில் சேதம் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கடலில் ஏற்படும் புயல், காற்றழுத்த தாழ்வு நிலையை கணித்து மழை பெய்யும் தன்மையைக் கண்டறிய வங்கக் கடலுக்கு அடியில் ரோபோக்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இந்தப் பணியை வங்காள விரிகுடா படுக்கை ஆய்வக விஞ்ஞானிகள் மேற்கொள்கின்றனர். இவர்களுடன் இங்கிலாந்தைச் சேர்ந்த கிழக்கு ஆங்கிலியா பல்கலைக்கழகம் மற்றும் சவுத் ஆம்டனில் உள்ள தேசிய கடல் ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகளும் இணைந்துள்ளனர்.

## வரவேற்கும் ரோபோக்கள்

பெல்ஜியத்தின் ஓஸ்டெண்ட் மற்றும் லீஜ் நகரில் உள்ள 2 வைத்தியசாலைகளில் வரவேற்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ரோபோக்கள் அறிமுகம் செய்யப் பட்டுள்ளன.

14 சென்றி மீற்றர் உயரமுள்ள, சக்கர உதவியுடன் நகரும் தன்மையிலானது இந்த ரோபோக்கள் சுமார் 20 மொழிகளைப் புரிந்துகொண்டு பதிலளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. அவை மிகவும் அழகாகவும், அனைவரையும் கவரும் வகையிலும் உள்ளன. தற்பொழுது தமது பணிகளை இலகுபடுத்தவதற்கும், தமது வாடிக்கையாளர்களைக் கவரும் விதத்திலும் அதிகமான நிறுவனங்கள் ரோபோக்களை பயன்படுத்தி வருகின்றன. வைத்தியசாலை, உணவகம் உட்பட பல வணிக நிறுவனங்கள் தற்பொழுது ரோபோக்களின் பாவனைக்கு அதிகம் ஈர்க்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், தற்பொழுது சர்வதேச அளவில் சுமார் 300 வைத்தியசாலைகளில் உதவிக்காக ரோபோக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



CSE
COLOMBO STOCK EXCHANGE
16/06/2016
www.cse.lk

| | | | |
|---|---|---|---|
| ASPI | -64 | 6,435.77 | 6,500.64 |
| S&P SL20 | -41 | 3,385.06 | 3,426.68 |
| வியாபாரப்புரள்வு | | 325,595,413 | 422,823,382 |
| உள்நாட்டு கொள்வனவு | | 245,287,040 | 206,733,439 |
| விற்பனை | | 239,442,913 | 384,758,509 |
| வெளிநாட்டு கொள்வனவு | | 80,308,373 | 216,089,943 |
| விற்பனை | | 86,152,500 | 38,064,873 |



பங்குச் சந்தை தகவல்கள்

| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | | | | |
|---|---|---|---|---|
| சம்பத் வங்கி | SAMP.N | 233.5 | 227,559.00 | 53,405,605.40 |
| கொமர்ஷல் வங்கி | COMB.N | 126 | 291,442.00 | 37,029,262.50 |
| லைவ்றோன் லூப்ரிக்கன் | LLUB.N | 170 | 128,757.00 | 21,954,615.30 |
| எல் பி பினான்ஸ் | LFIN.N | 130 | 128,338.00 | 16,690,723.60 |
| டோக்கியோ சீமெண்ட் | TKYO.N | 41.9 | 395,402.00 | 16,623,451.20 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 157 | 96,967.00 | 15,190,531.90 |
| றோயல் செராமிக்ஸ் | RCL.N | 118.5 | 111,600.00 | 13,245,472.80 |
| அக்சஸ் இஞ்சினியறிங் | AEL.N | 22.1 | 497,455.00 | 11,121,838.20 |
| ஓடல் | ODEL.N | 20.3 | 501,277.00 | 10,525,039.10 |
| சிட்டிசன்ஸ் டிவலப்மென்ட் பினான்ஸ் | CDB.N | 84 | 101,959.00 | 8,564,557.00 |

அறிவித்தல்கள் - பங்குலாபம்
ஓடல் (ODEL)- பங்கு ஒன்றிற்கு Rs [illegible]
சிகிரியா விலேஜ் ஹோட்டல் (SIGV)- பங்கு ஒன்றிற்கு Rs. 4.00
கருத்தரங்கு - தற்போதைய பங்குச்சந்தை நிலவரம்
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை – யாழ் கிளையில். ஆனி 18
சனிக்கிழமை காலை 9.30 - 12.00

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| [illegible] | 294 |
| [illegible] | 218 |
| விலை உழைப்பு | 13.45 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 2.8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களவின்

யின் அதிகாரபூர்வ பேச்சாளராக இருந்த ஹரீம் பீரிஸ், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் பதவி வகித்தார். வடக்கு-கிழக்கில் புனர்வாழ்வு மீள்கட்டுமானத் திட்டங்களைக் கண்காணிக்கும், உதவி புனர்வாழ்வு, நல்லிணக்கப் பணிப்பாளர் நாயகமாகவும் இவர் பதவி வகித்திருந்தார். (த-வ-5)

## வடமராட்சி

வைத்துப் படகில் துரத்தித் துரத்திப் பிடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் ஏற்பட்டு, 6 படகுகள் சேதமாக்கப்பட்டதோடு 3 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தால் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குறித்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. அதனால் பொலிஸார் குவிக்கப்பட்டதோடு, பதற்றநிலையைக் கட்டுப்படுத்த கிளிநொச்சியிலிருந்து கலகம் அடக்கும் பொலிஸார் இரவு அங்கு வரவழைக்கப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமான இந்தப் பிரச்சினை இரவு 8 மணி வரை நீடித்ததாகச் சம்பவ இடத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கட்டைக்காடு கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பதற்காக தென் பகுதியிலிருந்து 65 படகுகளில் சுமார் 165 மீனவர்கள் வருகை தந்துள்ளனர்.

முன்னரும் குறித்த மீனவர்கள் அங்கு கரையோரத்துக்குச் சென்றதால், கட்டைக்காடு மீனவர்களின் வலைகள் அனைத்தும் நாசமாக்கப்பட்டிருந்தன. இதனால் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டதாகத் தெரிவித்த கட்டைக்காடு மீனவர்கள், குறித்த மீனவர்களுடன் முரண்பட்ட நிலையில் பின்னர் அவர்களை மன்னித்து விடுவித்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றையதினமும் பிற மாகாண மீனவர்கள் கட்டைக்காடு கடற்கரையோரமாகத் தமது படகுகளைக் கொண்டு சென்றதோடு, கட்டைக்காடு மீனவர்களின் வலைகளை அறுத்து நாசம் செய்துள்ளனர். அதனால் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகளை இழக்க வேண்டியேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் தமது வலைகள் நாசமாக்கப்பட்டதனால் வெகுண்டெழுந்த மீனவர்கள் தமது படகுகளை எடுத்துச் சென்று அதிரடியாகப் பிற மாகாண மீனவர்களின் 65 படகுகளையும் மடக்கி, அதில் வந்திருந்த சுமார் 165 பேரையும் கரைக்குக் கொண்டு வந்தனர். கடலட்டை பிடிக்க வந்த மீனவர்கள் வேறுவழியின்றி கரைக்குப் படகுகளைக் கொண்டு வந்து கரையேறினர்.

அதன் பின்னர் அவர்கள் இரு தரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அறுத்த வலைகளுக்கு நட்டஈடு தருமாறு கேட்டதிலிருந்து கடும் முரண்பாடு ஏற்பட்டதோடு, கைகலப்பு ஏற்படுமளவுக்கு நிலைமை மோசமாகி விட்டது.

இதனால் ஏற்பட்ட கைகலப்பால் சிலருக்குக் காயம் ஏற்பட்டுவிட்டது. இதன்போது தலையில் படுகாயமடைந்த கட்டைக் காட்டைச் சேர்ந்த கபிரியேல்பிள்ளை அன்ரன் லோரன்ஸ் (வயது -48) என்ற மீனவர் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் பறந்ததால், அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டனர். இரவு வரை பிரச்சினை நீடித்ததனால், அங்கு மேலதிகமாகக் கிளிநொச்சியிலிருந்து கலகம் அடக்கம் பொலிஸார் கட்டைக்காட்டுக்கு அனுப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இரவு 8 மணியளவில் அங்கு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தும் நடவடிக்கையில் பிரதேச செயலர், பொலிஸார், கிராம அலுவலர் உள்ளிட்டவர்கள் ஈடபட்டிருந்தனர். பின்னர் கடலட்டை பிடிக்க வந்த மீனவர்கள் தாம் வந்திருந்த படகுகளில் அனுப்பி வைக்கப்பட்டனர். சேதமடைந்த அவர்களது 6 படகுகள் கட்டைக்காட்டில் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே கடற்படையினர் மட்டுமன்றி இராணுவத்தினரும் அங்கு குவிந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த மீனவர்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதும், கட்டைக்காடு மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கும் மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் இடையே விரைவில் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(த-வ-4,101)

## வெளிநாட்டு

செயலணிக்கு மக்களின் ஒத்துழைப் பும், ஆதரவும்தேவைப்படுகின்றது. செயலணி உங்களை நோக்கி வருகின்றபோது, உங்களின் ஆதரவையும், முக்கியமான கருத்துக்களையும் மிக உறுதியுடன் பதிவு செய்யுங்கள்.

இவ்வாறு மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இ.செபமாலை அடிகளார் கேட்டுள்ளார்.

மன்னார்-தலைமன்னார் முதன்மை வீதியில் அமைந்துள்ள மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழுவின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை ஊடகவியலாளர்களை அவர் சந்தித்துப் பேசினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் சபையில், இலங்கை அரசு சில உறுதிமொழிகளை வழங்கியது. காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்யும் அலுவலகம், உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள நிகழாமை தொடர்பான ஆணைக்குழு, விசேட வழக்குத் தொடுப்போருக்கான நீதிப்பொறிமுறை, இழப்பீடுகளுக்கான அலுவலகம் போன்றவற்றை அமைப்பதாக அரசு ஜெனிவாவில் உறுதிமொழி வழங்கியது. எனவே அந்தப் பொறிமுறைகளை நியமிப்பதற்கு அரசு கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணி ஒன்றை நியமித்தது.

குறித்த பொறிமுறைகள் எவ்வாறு அமையவேண்டும் என்று மக்களின் கருத்துக்களைக் கேட்டு அதனை அரசுக்கு வழங்குவதே செயலணியின் செயற்பாடு. ஆகவே பிரதமரால் நியமிக்கப்பட்ட 11 அங்கத்துவர்களைக்கொண்ட நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியானது, கடந்த 11,12,13 ஆம் திகதிகளில் 'வலயச் செயலணி' ஒன்றை உருவாக்கியது. மாவட்ட மட்டத்தில் மக்களிடம் சென்று கலந்துரையாடல்களை மேற்கொண்டு, அதனூடாகக் கிடைக்கப்பெற்ற விடயங்களை ஆவணப்படுத்துவதும், அதனை அரசுக்கு வழங்குவதுமே இந்த வலயச் செயலணியின் செயற்பாடாகும்.

நாங்கள் தற்போது ஒரு முக்கியமான காலகட்டத்தில் இருக்கின்றோம். கடந்த 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர், அரசு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவியது. அதன் பின்னர் பரணகம ஆணைக்குழுவை நியமித்தது. இந்த இரண்டு ஆணைக்குழுக்களும் அரசினால் நியமிக்கப்பட்டவை என்பதால், மக்களின் கருத்துக்களைக் கேட்கவில்லை.

இவை மக்களின் கருத்துக்குப் புறம்பான ஆணைக்குழுக்களாகவே இருந்தன என வடக்கு-கிழக்கில் உள்ள மனித உரிமைகள் ஆர்வலர்கள் பல அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர். ஆகவே மீண்டும், மீண்டும் அரசு இவ்வாறான செயற்பாடுகளைச்செய்யக்கூடாது. பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை கேட்டுப் பொறிமுறைகளை அமைக்கவேண்டும். அதனூடகவே பாதிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் உள்வாங்கப்பட முடியும் என்று பல்வேறு வலியுறுத்தல்களை மேற்கொண்டதன் அடிப்படையிலும், உலக நாடுகளின் அழுத்தத்தின் அடிப்படையிலும் குறித்த வலயச் செயலணியானது உருவாக்கப் பட்டுள்ளது.

இந்தச் செயலணி மக்களிடம் சென்று கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் மக் [illegible] கருத்துக்களைக் கூற [illegible] உள்ளது.

அந்தக் கருத்துக்கள் எந்தவித ஒழிவு மறைவும் இன்றி, அவை எங்களுடைய மாவட்டத்திலே ஆவணப்படுத்தப்பட்டு அரசுக்கு வழங்கி வைக்கப்படும். எனவே அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் கருத்துக்களை அரசு முன்னுரிமைப்படுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் – என்றார்.

(த-வ-56)

## பொருத்து

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோரினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக்கு விரைவில் வீட்டுத் திட்டம் எவ்வாறு அமையப் பெறவேண்டும் என்ற யோசனையை முன்வைப்பதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார். வடக்கு - கிழக்கில் தலா 21 லட்சம் ரூபா செலவில் 65 ஆயிரம் பொருத்து வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்குத் தமிழ் அரசியல் தரப்பினர் மற்றும் வடக்கு மாகாண சபையினர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். மேற்படி திட்டம் ஜனாதிபதியினால் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்தில், பொருத்து வீட்டுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோர், பொருத்து வீட்டுத் திட்டம் பொருத்தமில்லாதது என்று குறிப்பிட்டுள்ளனர். 11 லட்சத்துக்கே அந்த மக்கள் விரும்பும் வீடு அமைக்கக் கூடியதாக இருக்கும் போது, ஏன் அதிக பணத்தை அந்த மக்கள் விரும்பாத வீடு அமைக்க செலவிட வேண்டும் என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன், கல் வீடு அமைக்கப்படுமாயின் அதற்கான மூலப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமம் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தத் திட்டம் நீண்ட காலமாக இழுபறி நிலையில் இருக்கின்றது. ஒரு வருடம் முடிகின்றது. இன்னமும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படவில்லை என்று சர்வதேச அழுத்தம் அதிகரிக்கும். எனவே இந்தப் பிரச்சினையை விரைந்து தீர்க்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால கலந்துரையாடலின் இறுதியில், இந்த வீட்டுத் திட்டம் எப்படி அமைய வேண்டும் என்ற யோசனையை விரைவில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்துள்ளார். பெரும்பாலும் கல் வீடு அமைவதற்கான சாத்தியம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-வ-5-101)

## நம்பிக்கையுடன்

"நீங்கள் வழங்கிய உறுதிமொழியை நம்பி இருந்தோம். தற்போதும் நம்பிக்கையுடன் இருக்கின்றோம். அந்த நம்பிக்கைக்கு ஏமாற்றம் தந்துவிடாதீர்கள்" என வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து 26 வருடங்களுக்கு மேலாக ஏதிலிகாகவுள்ள மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கூறியுள்ளனர். ஜனாதிபதி, பிரதமர் மற்றும்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் 87 பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

போர் நிறைவடைந்து 7 வருடங்கள் கடந்த நிலையிலும் எம்மை மீள்குடியமர்த்த அரசு தவறியுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் உங்களுக்கு (ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு) வாக்களித்தோம். தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வைத் [illegible] நம்பினோம். நீங்கள் [illegible] வந்து ஒன்றரை வருடங்களாகியும் பெரியளவில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

கடந்த டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி எமது நலன்புரி முகாமுக்கு வந்த நீங்கள், 6 மாதங்களில் சகல மக்களையும் மீள் குடியேற்றுவேன்என்று கூறியிருந்தீர்கள். அதனை நம்பி இருந்தோம். தற்போதும் நம்பிக்கையுடன் இருக்கின்றோம். நீங்கள் அவ்வாறு கூறியிருந்த காலம் நிறைவடைவதற்கு இன்னும் 4 நாள்களே (கடிதம் அனுப்பிய திகதியில் 13 நாள்கள்) உள்ளன.

நீங்கள் குறிப்பிட்ட 6 மாதங்கள் நிறைவடைந்ததும், மீள்குடியேற்றம் செய்யத் தவறின் தொடர் உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவேண்டிய நிலையைத் தவிர, எமக்கு வேறு வழியில்லை. தயவுசெய்து எம்மை அந்த நிலைக்குத் தள்ளிவிடாதீர்கள்.

2013 ஆம் ஆண்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் முன்பாக நடத்தப்பட்ட உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த மக்களிடம், அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்ககூட தான் ஆட்சிக்கு வந்தால் அனைவரையும் மீள்குடியேற்றுவேன் என்று கூறியிருந்தார். அவர்கூட இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை.

முகாம்களிலுள்ள எமது மக்களின் நிலை பரிதாபகரமானது. 15 அடி நீளம், 16 அடி அகலம் கொண்ட ஒரு கொட்டகைக்குள் 3 அல்லது 4 குடும்பங்கள் வசிக்க வேண்டியுள்ளது. மிருகங்கள் போல் வாழ வேண்டிய நிலையே உள்ளது. உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் இருந்து 4 வருடங்களுக்கு ஒருமுறை நாய் குட்டி காவுவதைப் போல ஒவ்வொரு இடமாகவும் ஒவ்வொரு பாடசாலைகளுமாக மாறி எமது நிலை காட்டு வாசிகளின் நிலைக்கு மாறியுள்ளது.

சொந்த இடத்தில் வாழ விடுங்கள் என்றே நாங்கள் உங்களிடம் கேட்கிறோம். எமது நிலையைக் கருத்திற்கொண்டு முற்று முழுதாக மீள்குடியேற்றத்தைச் செய்வீர்கள் என்று நம்புகிறோம்- என்றுள்ளது.

(த வ 4)

## ஒன்றுபட்ட

உறவுகள் முன்னேற்றமடைந்துள்ளன. இரு நாடுகளுக்கும் இடையிலான உயர் மட்ட சந்திப்புகள் மூலம், இருதரப்பு உறவுகள் வலுவடைந்து, புதிய கட்டத்தை எட்டியிருக்கின்றன.

1999 ஆம் ஆண்டு சுதந்திர வர்த்தக உடன்பாடு இரண்டு நாடுகளுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டது. அதன் பின்னர் இலங்கையின் ஏற்றுமதி 13 மடங்கால் அதிகரித்தது. இந்த உடன்பாட்டினால் யார் அதிகம் பயனடைந்தது என்பதை இது வெளிப்படுத்துகின்றது.

இலங்கையும் இந்தியாவும் வலுவான ஒத்துழைப்பைக் கொண்டுள்ளன. பாதுகாப்புப் பயிற்சிகளில் புதுடில்லியின் மிகப்பெரிய பங்காளராகக் கொழும்பு இருக்கின்றது. இலங்கையின் பாதுகாப்பு இந்தியாவின் நலனுடன் தொடர்புடையது – என்றார். (த வ 5)

## 1,200 கிலோ

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் களுவாராச்சி மற்றும் வடக்கு மாகாணப் பிரதம செய லாளர் பத்திநாதன் ஆகியோருக் கிடையில் ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபை யின் தலைமை அலுவலகத்தில் இந்த நிகழ்வு நடந்தது.

எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்குள் இந்த வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை சீரமைக்கும். வடக்கு மாகாணத்தினால் நீண்டகாலமாகச் சீரமைக்கப்படாத வீதிகள் மற்றும் மாகாண சபையால் பரிந்துரைக்கப்படும் வீதிகளே சீரமைக்கப்படவுள்ளன. இதற்கான மதிப்பீட்டுப் பணிகள் மற்றும் ஆய்வுகள் அடுத்த வாரமே ஆரம்பிக்கப்படவுள்ளன. புனரமைப்புப் பணிகளும் விரைவில் ஆரம்பமாகுமெனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட பல வீதிகள் சீரமைக் கப்பட்டபோதிலும் வீதி அபிவிருத்தித் திணைக்களம் , மற்றும் உள்ளூராட்சித் திணைக்களங்களின் கீழ் உள்ள பல்லாயிரக்கணக்கான கிலோ மீற்றர் வீதிகள் திருத்தப்படாமலேயே உள்ளன. (த வ 101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

**வெற்றுப்பரல் விற்பனை**

சங்கத்தில் வெற்றுப் பரல், வெற்றுக் கான் (20L) என்பன விற்பனைக்குண்டு. தேவையானோர் இதற்கான கூறுவிலையினை 30.06.2016 இற்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு:
**021 222 2143**
பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப.நோ.கூ.சங்கம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

# இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்கச் சிறந்த தளமாக விளங்குகின்றது சீனா

## சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கருணாசேன தெரிவிப்பு

குமிங், ஜூன் 17

இலங்கையிலுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சீனாவைச் சிறந்த தளமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்தார்.



தெற்காசியாவின் 4ஆவது வர்த்தகக் கண்காட்சி சீனா, கும்மிங் நகரிலுள்ள கும்மிங் டியான்சி சர்வதேச கண்காட்சி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கை வணிகர்களின் உற்பத்திப் பொருள்களைப் பார்வையிட்ட பின்னர் கருத்துவெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்ததாவது:-

கடல்மார்க்கத் தொடர்பையும், பொருளாதாரத்தையும் பலப்படுத்துவதில் சீனா கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. இந்து சமுத்திரத்தில் இலங்கை கேந்திர நிலையமாகத் திகழ்வதால், மேற்படி திட்டமானது எமது நாட்டுக்குப் பெரும் வாய்ப்பாக அமையும்.

அத்துடன், இலங்கை உள்ளிட்ட இந்து சமுத்திர வலயத்திலுள்ள நாடுகளுடனான வர்த்தகத் தொடர்பாடலை விருத்திசெய்வதற்காக சீனாவிலுள்ள அரச நிறுவனங்களுக்கு சீன அரசு ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது.

குறிப்பாக, ஆபிரிக்க வலய நாடுகள் பக்கம் இன்று சீனாவின் அவதானம் திரும்பியுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 4 வருடங்களுக்குள் ஆபிரிக்காவில் 100 பில்லியன் அமெரிக்க டொலர்வரை சீனாவின் முதலீடு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் ஊடாக வர்த்தகமும் 400 பில்லியன் டொலர்வரை உயரக்கூடும்.

இவ்வாறு ஆபிரிக்க வலய நாடுகளுக்கும், சீனாவுக்குமிடையில் வர்த்தகத் தொடர்பாடல் இடம்பெறுவதற்கு விமான வழிப் போக்குவரத்து, கடல் மார்க்கப் போக்குவரத்து ஆகிய இரண்டுக்கும் இலங்கை மத்திய நிலையமாக விளங்குகின்றது.

இவ்வாறான வழிகளில் உச்சப் பயனைப்பெறுவதற்கு இலங்கை அரசு எதிர்பார்க்கின்றது.

எனவே, கண்காட்சிக்குவரும் சீன வணிகர்கள், சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை வர்த்தகர்கள், நிறுவனங்கள் சிறந்த முன்னுதாரணத்தை வழங்கினால், அது எமது நாட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சிறந்த வழியாகவும் அமையும்.

குறிப்பாக, தொழிலின்மை, வருமானமின்மை ஆகிய பிரச்சினைகளுக்கு சீனாவை உரிய வகையில் பயன்படுத்தினாலேயே தீர்வு கிடைத்துவிடும். சீனாவிலுள்ள யுனான் மாகாணமானது இலங்கையை விட ஆறு மடங்கு பெரியது. சனத்தொகை அளவு எமது நாட்டைவிட இரட்டிப்பாக இருக்கின்றது. எனவே, இந்தப் பிராந்தியத்துடன் சிறந்த உறவைப் பேணுவது இலங்கைக்குப் பலமாக அமையும்.

மேற்படி கண்காட்சியின் ஊடாக இலங்கைக்கு எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறு கிடைக்கும் என நம்புகின்றோம் - என்றார்.

(வ-சி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்
01 . 08 . 1996



இறைவன் அடியில்
19 . 05 . 2016

## இராசநாயகம் அஜந் (தங்கம்)

கடந்த 19.05.2016 அன்று இறைபதமடைந்த எங்கள் குலவிளக்கு இராசநாயகம் அஜந் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (18.06.2016) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் காந்தியூர் வேம்படி வீரபத்திரர் ஆலயத்தில் நடைபெற்று.அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். மறுநாள் (19.06.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளுருவை,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.
077 154 2176

குடும்பத்தினர்.

(C 22029)(10)

# சிகரட், மதுபானம் வற் வரி அதிகரிப்பு; மருத்துவச் சோதனைகளுக்கு குறைப்பு

## அடுத்த வாரம் அமைச்சரவைப் பத்திரம்

கொழும்பு, ஜூன் 17

சிகரட், மதுபானம் மற்றும் பாம் ஒயில் போன்றவற்றுக்கான வற் வரியை அதிகரிப்பதற்கும், தனியார் சுகாதாரசேவை மீதான வற் வரி வீதத்தைக் குறைப்பதற்கும் அரசு தீர்மானித்துள்ளதாக விசேட பணிகளுக்கான அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் அடுத்தவாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் சரத் அமுனுகம கூறினார்.

இதன்போது மேலும் குறிப்பிட்ட அவர்,

நாட்டின் பொருளாதாரம் குறித்து பொருளாதாரக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படுகிறது. இதற்கமைய சிகரட், பீடி, மதுபானம் ஆகியவற்றுக்கான வற் வரியை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளோம். மேலும் பாம் ஒயிலுக்கான வற் வரியையும் அதிகரிக்கவுள்ளோம்.

இதேவேளை, இரத்தப் பரிசோதனை மற்றும் மருத்துவப் பரிசோதனைகளுக்கான கட்டணங்களுக்கான வற் வரி வீதத்தைக் குறைப்பதற்கும் தீர்மானித்துள்ளோம்.

மேலும், வெளிநாட்டுப் பயண டிக்கட்டுகளுக்கான வற் வரி அதிகரிக்கப்படாது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும் - என்றார்.

(வ-சி)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 . 04 . 1947



மறைவு
17 . 06 . 2014

திதி:
25.06.2016

## அமரர் சிற்றம்பலம் சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)

முற்றத்து மல்லிகை நறுமணம் வீசவில்லை!
இதம் தந்த தென்றல் சுகம் தர மறுக்கிறதே!
அதிகாலை குயிலோசை இனிமை இழந்ததுவோ!
நிலம் வியக்க இங்கு நிறைவாழ்வு வாழ்ந்தவரே
ஆண்டுகள் நீண்டாலும் ஆறாது எம் துயரம்
இந்த நிலம் இருக்கும்வரை உங்கள் நினைவிருக்கும்...

வராணி.

குடும்பத்தினர்.

**சாரதிகள் தேவை**

நன்கு அனுபவமுள்ள சாரதிகள் தேவை. பேக்கரி வான் ஒடுவதற்கு

**புதிய துர்க்கா வெதுப்பகம்**
பொற்பதி றோட், கொக்குவில்.
(J 2191)(10)

**தேவை**

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.
**Siva Brothers**
(Coca-Cola Distributors)
No:15, 4th Lane, Brown Road, Jaffna.
077 77 222 15

**வெளிவந்துவிட்டது**

புதிய பாடத்திட்டத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்ட A/L மாணவர்களுக்கான பௌதீகவியல் கடந்த கால பல்தேர் வினாக்களும் விளக்கங்களுடன் விடைகளும்

ஆசிரியர் அ. கருணாகரர் (B.Sc, Dip. in Edu.)
2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை [illegible]
விலை 575/=
**பாரதி பதிப்பகம்**
இல.430, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3081
(J 2192)(10)

**2017 A/L வெப்பவியல்**

By: **M.K.Nithy** B.Sc(Spl)
**077 618 3064**
Mon, Wed, 4.00 pm
ஆரம்பம் 20.06.2016 (Mon)
**NEW SCIENCE CORNER**
Jaffna.
(J 2194)(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகள் யாராயினும் தண்டிக்கப்படவேண்டும்

## அமைச்சர் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 17
எவராக இருந்தாலும், அவர் குற்றம் செய்திருந்தால் தண்டிக்கப்படவேண்டும். போர் வெற்றி கொள்ளப்பட்ட காரணத்துக்காக, போர்க்குற்றம் செய்தவர்கள் சட்டத்தை மீற அனுமதிக்க முடியாது. இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

பாதுகாப்பு என்றால் என்னவென்றே தெரியாத பொது எதிரணியினர், அரசியல் இலாபத்துக்காகத் தேசிய பாதுகாப்பு குறித்து பொய்யாகக் கூச்சலிடுகின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சலாவ இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியசாலை வெடிப்புச் சம்பவத்துடன் வெளிநாட்டுத் தொடர்பிருப்பதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மை கிடையாது என்றும் அமைச்சர் சரத் பொன் சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் பெருமளவிலான தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்து வெளிமாவட்டங்களில் வாழ்கின்றார்கள். தேசிய நீதியில் சமாதானத்தையும், சமத்துவத்தையும் கட்டியெழுப்ப வேண்டுமானால், அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணையவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (வ-சி)

# மகேந்திரனுக்கு நீடிப்பு வழங்கப்படக் கூடாது

## மைத்திரியிடம் சு.க வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 17
மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு பதவி நீடிப்பு வழங்கக்கூடாது என்பதே தமது உறுதியான நிலைப்பாடு எனத் தெரிவித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இந்த விடயத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள கட்சித்தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே விசேட பணிகளுக்கான அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை பதவி விலகுமாறு நாம் கூறவில்லை. மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நீக்கப்பட்ட பின்னர், அந்தக் காலப்பகுதிக்குத்தான் இவர் நியமிக்கப்பட்டார். இந்தநிலையில், அவரதுபதவிக்காலம்முடிவடைகின்றது. அர்ஜுன மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநராக மீண்டும் நியமிக்க முடியாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. இவரின் நியமனம் அரசுக்கும், நாட்டுக்கும் உகந்ததல்ல. எனவே, இந்த விடயம் குறித்து ஜனாதிபதியும், பிரதமரும் பேசி பிரச்சினைக்குச் சுமுகமாக தீர்வு காண்பர் - என்றார். (வ-சி)

### நல்லாட்சியை

தெரிவித்துள்ளார் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் சுதந்திரம் தொடர்பிலான ஐ.நாவின் விசேட நிபுணர் மோனிகா பின்டோ.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 32ஆவது அமர்வில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பிலான விரிவான அறிக்கையை அடுத்த வருட அமர்வில் சமர்ப்பிக்க உள்ளேன். என்னுடைய இலங்கைப் பயணம் சிறப்பாக அமைந்தது. அந்தப் பயணத்தில் சித்திரவதை மற்றும் கொடூரமான அல்லது மனிதாபிமான மற்ற அல்லது இழிவுபடுத்தும் தண்டனைத் தொடர்பிலான ஐ.நா. சபையின் விசேட பிரதிநிதி ஜுவான் மெண்டஸ் இணைந்து கொண்டார்.

எம்மை இலங்கைக்கு அழைத்தமைக்காகவும், ஒத்துழைப்பு வழங்கியமைக்காகவும் இலங்கை அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

அடிப்படைச் சீர்திருத்தங்களைச் செய்வது குறித்த மாற்றங்களின் மீது ஆர்வம் குறைந்துவிடக்கூடாது. இலங்கை கடினமான, எனினும் அவசியமான இடைநிலை நீதிப்பொறிமுறை தொடர்பிலான பயணத்தை ஆரம்பித்துள்ளது. நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் சுயாதீனத் தன்மை பாதுகாக்கப்படவேண்டும் - என்றார். (த-வ-5)

### யோசிதவுக்கு

பட்டுள்ளதாக மன்றில் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் தொடர்பான விசாரணைகள் மேலும் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் மன்றில் அறிவித்தனர்.

இந்த நிலையில் பொலிஸாரின் கருத்துக்களை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபரான யோசிதவைப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டதுடன், குறித்த வழக்கை ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (த-வ-5)

### தமிழ்

அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு மந்தகதியில் செயற்படுகின்றது. வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்ற இலங்கைக்கு ஐ.நா. தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் இந்தச் சந்திப்பின்போது சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கை தொடர்பான வாய்மொழி மூல அறிக்கையை ஆணையாளர் சையிட் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக, அவரைக் கூட்டமைப்புச் சந்திக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமையவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்தச் சந்திப்புக்கு முன்னதாக, அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிசா பிஸ்வாலையும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சந்தித்துப் பேசியுள்ளார். (த-வ-5)

## கண்ணீர் அஞ்சலி



தேசிய சேமிப்பு வங்கி
திருநெல்வேலி கிளை முகாமையாளர் **திருமதி சித்திரா தயானந்தன்** அவர்களின் தந்தை

**இராமலிங்கம் குமாரு**

அவர்கள் காலமானதையிட்டு
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி கழகம்**
**தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலி.**

## மரண அறிவித்தல்

திருமதி **மேரிதிரேசா அல்போன்சஸ்**



இளவாலையைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிதிரேசா அல்போன்சஸ் 14.06.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - பிலுப்பாச்சி தம்பதியரின் மருமகளும் காலஞ் சென்ற சூசைப்பிள்ளை அல்போன்சஸ் (புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தேவசகாயம், ஜோண்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை மற்றும் பிரான்சிஸ்சேவியர் (செட்டிகுளம்), வின்சன்ட் இராசதுரை(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்ற சுலோஜனா மற்றும் றோகினி(லண்டன்), அருமை (லண்டன்), குணம்(பிரான்ஸ்), சாந்தினி(லண்டன்), றோகான்(பண்டத்தரிப்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆனந்தா யோசவ், றஜனி (லண்டன்), சாந்தா (பிரான்ஸ்), ராஜன்(லண்டன்), அன்ரனீற்வேணி (ஆசிரியை - புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் டிலக்ஸன், டயானி, பிரசாந், கிருஷாந், மீரா, ஏவன், யூலியன், அன்ரியா, வினோதினி, ஜெசிக்கா, சுபோதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அனிஷா, ஹணா, சாமுவேல் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 18.06.2016 சனிக்கிழமை காலை 9.00 மணி அளவில் பண்டத்தரிப்பு புனித அந்தோனியர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பண்டத்தரிப்பு புனித அந்தோனியர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொந்திஷேன், பண்டத்தரிப்பு.** (J 2186), (14,17)
**தகவல்: றோகான்(மகன்)**
**021 225 0508 / 076 678 9158**

## மரண அறிவித்தல்

**இராமலிங்கம் குமாரு**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்; உள்ளூராட்சித் திணைக்களம், வீடமைப்புத் திணைக்களம்)

**தோற்றம் : 17.06.1936** **மறைவு : 16.06.2016**



சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் குமாரு நேற்று (16.06.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-அன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இராசபிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ரோகிணியம்மாவின் (வவாக்கா - ஆசிரியை) அன்புக் கணவரும், சுமித்திரா (சிரேஷ்ட உதவிப் பதிவாளர் -யாழ். பல்கலைக்கழகம்) சித்திரா (முகாமையாளர் NSB திருநெல்வேலி, துஷ்யந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தமூர்த்தி (கச்சேரி), தயானந்தன் (தொழிநுட்ப உத்தியோகத்தர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்) கலையழகன் (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனும், குலமணிதேவி (லண்டன்), சீதாலட்சுமி, காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் சத்தியலிங்கம், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கயூரி, கேதகி, சாருகேஷ், கேசிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2016) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**59, [illegible] வீதி, கந்தர்மடம்.**
**021 222 8681**

**தகவல்:**
**குடும்பத்தினர்,**
(J 2196) (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானமுருகன், குறிஞ்சிக் குமரன் அணிகள் போராடி வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், ஜூன் 17

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஞானமுருகன், குறிஞ்சிக் குமரன் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

எவரெஸ்ட் வி.கழக மைதானத்தில் பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பட்டியுத் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை ஆட்டம் இழுபறிப்பட்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி மோதியது. இதில் குறிஞ்சிக் குமரன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)

## பாடும்மீன், பல்கலை வென்றன


யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் பாடும்மீன், பல்கலைக் கழக அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பொற்பதி அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. இதில் குருநகர் பாடும்மீன் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதியது. இதில் யாழ். பல்கலைக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)

## இத்தாலியிடம் வீழ்ந்தது பெல்ஜியம்



ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் பெல்ஜியத்தை வீழ்த்தியது இத்தாலி.

ஆட்டத்தின் 32ஆவது நிமிடத்தில் இத்தாலியின் இம்மானுவேல் ஜியாசெரினி முதல் கோலை அடித்தார். பதில் கோல் அடித்து சமன் செய்ய பெல்ஜியம் கடுமையாகப் போராடியது. முதல் பாதியின் முடிவில் இத்தாலி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியிலும் இதே நிலையே நீடித்தது. ஆட்டம் முடியும் தறுவாயில் இத்தாலியின் கிராசியானோ பெல்லே இரண்டாவது கோலை அடித்தார். முடிவில் இத்தாலி 2:0 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்தை வீழ்த்தியது.

(ம)

# தென்னாபிரிக்காவின் ஆட்டத்தில் திணறியது மேற்கிந்தியத் தீவுகள்



முத்தரப்புத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளை 139 ஓட்டங்களால் வீழ்த்தியது தென்னாபிரிக்கா.

ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்காவும், மேற்கிந்தியத் தீவுகளும் பலப்பரீட்சை நடத்தின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் அசாத்தியமான ஆரம்பத்தை வெளிப்படுத்தியது அம்லா, குயின்டன் டி ஹொக் இணை. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் பதிவு செய்ய இலக்குச் சரிவில்லாமல் நூறு ஓட்டங்களைத் தொட்டது தென்னாபிரிக்கா. பந்துப்பரிமாற்றத்துக்கு ஐந்து ஓட்டங்களுக்கும் மேலான சராசரியும் பேணப்பட்டது. 89 பந்துகளில் சதம் கடந்தார் அம்லா. இணைப்பாட்டமாக 182 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் 110 ஓட்டங்களுடன் அம்லாவை பவிலியனுக்கு அனுப்பினார் பொலார்ட். அடுத்த சில பந்துப்பரிமாற்றங்களில் குயின்டனும் போல்ட் செய்யப்பட்டார். மொறிஸ், பிளாசிஸ் இருவரும் அடித்தாட தென்னாபிரிக்காவின் சராசரி சடுதியான முன்னேற்றம் கண்டது. மொறிஸ் 26 பந்துகளில் 40 ஓட்டங்களையும், பிளாசிஸ் 50 பந்துகளில் 73 ஓட்டங்களையும் குவிக்க முடிவில் தென்னாபிரிக்கா 343-4.

பந்துவீச்சில் தீவுகளின் சார்பாக பொலார்ட் இரு இலக்குகளையும், பிரீத்வைட், ரெய்லர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய தீவுகளுக்கு ஆரம்ப வீரர்களான பிளெச்சர், சாள்ஸ் இணை ஓரளவு நம்பிக்கை வழங்கியது. இணைப்பாட்டமாக 69 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் பிளெச்சரை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் தகிர். ஓர் ஓட்டத்தால் அரைச் சதத்தை தவறவிட்டார் சாள்ஸ். மத்திய வரிசையில் தகிரின் சுழல் நன்கு எடுபட்டது. அவர் சாமுவேல்ஸ், பொலார்ட், கோல்டர், பிரீத்வைட் போன்ற வீரர்களை அடுத்து பவிலியன் திருப்ப திவுகளின் தோல்வி உறுதியானது. பின்வரிசை வீரர்களாலும் போராட இயலவில்லை. முடிவில் 204 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் பறிகொடுத்தது மேற்கிந்தியத் தீவுகள்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாகதகிர் 7 இலக்குகளையும், சம்சி இரு இலக்குகளையும், பார்நெல் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக தகிர் தெரிவானார்.

(ம)

## 350 ஆட்டமிழப்புக்களுக்கு காரணமாயிருந்த டோனி

இந்திய அணித்தலைவரான டோனி ஒருநாள் ஆட்டங்களில் 350 ஆட்டமிழப்புக்களுக்கு காரணமாக இருந்தவர் என்ற மைல் கல்லை எட்டியுள்ளார்.

சிம்பாப்வேக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பும்ரா வீசிய பந்தில் சிக்கும்புராவைப் பிடியெடுத்தன் மூலமே அவர் இந்த மைல் கல்லை எட்டியுள்ளார். இந்த மைல்கல்லை எட்டிய முதல் இந்திய இலக்குக் காப்பாளரும் டோனிதான். சர்வதேச அளவில் அவர் நான்காவது இடத்திலுள்ளார். சங்கக்காரா 482 இலக்குகளுடன் முதலிடத்திலும், 472 இலக்குகளுடன் கில்கிறிஸ்ட் இரண்டாவது இடத்திலும், 424 இலக்குகளுடன் பவுச்சர் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

(ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 17

**எவரெஸ்ட் வி.க. தொடர்**

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாடத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வீனஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

**கழுகுகளின் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் கால்பந்தாட்டத் தொடரில் இன்று பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் காத்தான்குடி சென். ஜோசெப் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்மதி அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவற்குழி அன்னை அணியை எதிர்த்து பாரதி அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணி மோதவுள்ளது.

(ம-108 23)

## இந்தியா – சிம்பாப்வே ரி-20 தொடர் நாளை

இந்தியா - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் முதலாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்று முடிவடைந்த ஒருநாள் தொடரில், இளம் வீரர்களைக் கொண்ட இந்திய அணி 3:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றிருந்தது. இதனால் ரி-20 தொடரிலும் அந்த அணியின் மீது எதிர்பார்ப்பு மிகையாக உள்ளது. ரி-20 ஆட்டம் குறுகிய நேர ஆட்டம். எனவே எந்த அணி வெற்றிபெறும் என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. சிம்பாப்வேயின் கைகள் ஓங்கவும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. சிம்பாப்வே அணியில் ஓரிரு மாற்றங்கள் செய்யப்படலாம். ஆனால் இந்தியா, ஒருநாள் தொடரில் களமிறக்கிய அணியையே களமிறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ம)


# நெருக்கடிகளைக் கையாள்வதில் சச்சினைவிட கோக்லி சிறந்தவர்

### இம்ரான் கான் தெரிவிப்பு

நெருக்கடி நிலைமைகளை கையாள்வதில் சச்சினை விடக் கோக்லி சிறந்தவர் என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தானின் முன்னாள் வீரரான இம்ரான் கான்.

சமீப காலமாக சச்சின், கோக்லி ஒப்பீடு சமூக வலைத்தளங்களிலும் முன்னாள் வீரர்களிடத்திலும், ஊடகங்களிலும் அதிகரித்துள்ளது. கோக்லி ஆஸ்திரேலியாவில் வைத்து அந்த அணிக்கு எதிராக நான்கு டெஸ்ட் சதங்களை எடுத்ததில் இருந்தே இந்த ஒப்பீடு வலுப்பெற்று வருகிறது.

இந்த நிலையில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இம்ரானும், சச்சினையும் கோக்லியையும் ஒப்பிட்டுள்ளார். கிரிக்கெட் ஆட்டம் பல காலக்கட்டங்களைக் கொண்டது. எண்பதுகளில் ரிச்சர்ட்ஸ், அதன் பிறகு சச்சின், லாரா. இவர்கள் இருவரும் அனைவரையுமே பின்னுக்குத் தள்ளி தனித்துவமாக விளங்கினர். ஆனால் நான் பார்த்ததிலேயே விராட் கோக்லிதான் ஒரு முழுமையடைந்த வீரராக இருக்கிறார். அவர் பலதிறன் வாய்ந்தவர். அவரின் இரு கால்களும் விரைவு கதியில் களத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இயங்குகின்றன. விராட் கோக்லியின் திறமை மற்றும் உத்தி தவிர, அவரிடம் ஓர் இயற்கையான மனப்போக்கு உள்ளது. கடினமான சூழ்நிலைகளிலும் விராட் கோக்லி தன்னை நிரூபிக்கிறார், ஆனால் சில வேளைகளில் சச்சினால் இது முடியாமல் போயுள்ளது. சச்சினின் சாதனைகளை எட்ட விராட் இன்னும் உழைக்க வேண்டும். ஆனால் கடினமான சூழ்நிலைகளில் சிறப்பாகச் செயற்படும் திறன் கோக்லியிடமே அதிகம் உள்ளது என இம்ரான் மேலும் தெரிவித்தார்.



(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சென். ஜோன்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 17
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில் 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸின் சார்பாக அபினாஸும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் சார்பில் றொசானும் மோதினர். இதில் அபினாஸ் 27:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார். இண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸின் சார்பில் எல். காந் டெனுசன், சென். பற்றிக்ஸ் கல்லூரியின் சார்பில் சஜீவன் மோதினர். இதில் டெனுசன் 22:01என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற இரட்டையர் ஆட்டத்துக்கு வேலை வைக்காமல் சம்பியனானது சென். ஜோன்ஸ்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யோகபுரம் மகா வித்தியாலய அணியை வீழ்த்தி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி அந்த இடத்தைத் தனதாக்கியது. (ம-23)

# மாகாண ரெண்னிஸ் கிண்ணம் யாழ்ப்பாணக் கல்லூரியிடம்



யாழ்ப்பாணம், ஜூன் 17
மாகாணமட்ட ரென்னிஸ் தொடரில் ஆண்கள் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை வீழ்த்தி சம்பியனானது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது. இரண்டு ஒற்றையர் ஆட்டங்களையும் ஓர் இரட்டையர் ஆட்டத்தையும் கொண்டதாக இந்த இறுதியாட்டம் அமைந்திருந்தது. முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியின் சார்பில் யாதவக்குமார், யாழ்ப்பாணக் கல்லூரியின் சார்பில் டிலான் பலப்பரீட்சை நடத்தினர். 6:0 6:1 என்ற நேர் செற்கணக்கில் டிலான் வெற்றிபெற, யாழ்ப்பாணக் கல்லூரி முன்னிலை வகித்தது. இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியின் சார்பில் சுஜீவன், யாழ்ப்பாணக் கல்லூரியின் சார்பில் சரண் பலப்பரீட்சை நடத்தினர். 6:3 6:0 நேர் செற் கணக்கில் சரண் வெற்றிபெற இரட்டையர் ஆட்டத்துக்கு வேலை வைக்காமல் சம்பியனானது யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் இணுவில் இந்துக் கல்லூரி அணியை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தியது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. (ம-23)

## காலிறுதியில் சிலி

கோபா அமெரிக்கா கால்பந்துத் தொடரில் காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது நடப்புச் சம்பியனான சிலி.

நடப்பு வருடத்துக்கான கோபா அமெரிக்கத் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் நடப்புச் சம்பியனான சிலி, பனாமாவை எதிர்த்து மோதியது. ஆட்டத்தின் 28 ஆவது, 43ஆவது நிமிடங்களின் சிலியின் வர்காஸ் இரு கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் சிலி 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாவது பாதியின் 56ஆவது, 78ஆவது நிமிடங்களில் சந்தேஸ் இரு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் சிலி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம)



## கலையொளியின் இறுதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 17
கலையொளி விளையாட்டுக் கழகம் இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடர்களின் இறுதியாட்டங்கள் நாளை சனிக்கிழமை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஏ பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி. அணியும் பி பிரிவில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணியும் மோதவுள்ளன. கலையொளி கழகத்தின் தலைவர் இ.தயானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-422)

# கொக்குவில் இந்து. வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில் 15 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது. மொத்தமாக மூன்று செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில், முதலாவது செற்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் சார்பில் நிவேதிகன், ஹாட்லிக் கல்லூரி அணியின் சார்பில் சுகந் மோதினர். இதில் நிவேதிகன் 25:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார்.

இண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் சார்பில் மதுசன், ஹாட்லிக் கல்லூரி அணியின் சார்பில் சுகிர்தன் பலப்பரீட்சை நடத்தினர். இந்த செற்றில் மதுசன் 25:01என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார். இதனால் இரட்டையர் ஆட்டத்துக்கு வேலை வைக்காமல் சம்பியனானது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி. குறித்த பிரிவில் மூன்றாமிடத்தை சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தனதாக்கியது. (ம-23)



# மாவட்டச் செயலகங்களின் சைக்கிளோட்டம்: யாழ்., வவுனியா செயலகங்கள் சம்பியன்



மாவட்டச் செயலகங்களுக்கு இடையிலான சைக்கிள் ஓட்டத்தில் ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்டச் செய லகமும் பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்டச் செயலகம் என்பன சம்பியனாகின.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.எம்.ஆர்.றிம்தான், இரண்டாமிடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வி.அனுசன், மூன்றாமிடத்தை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.வை.சபீக், நான்காமிடத்தை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வி.பிரணவதாஸ், ஐந்தாமிடத்தை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.அலிஸ்ரன், ஆறாமிடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வி.நந்தரூபன், ஏழாமிடத்தை முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த என்.அமுதன், எட்டு முதல் பத்து வரையிலான இடங்களை யாழ். மாவட்டத்தை சேர்ந்த என். கஜேந்திரன், பி.பாலரஜீவ், என். ஜீவரட்ணம் ஆகியோர் தமதாக்கினர். மன்னார் மாவட்டம் முதலிடத்தைப் பெற்ற போதிலும், முதல் பத்து இடங்களுக்குள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு வீரர்கள் பிரதிநிதித்துவம் பெற்றதால் அந்த அணி சம்பியனானது.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பி.டர்சிகா, இரண்டாமிடத்தை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த என்.ராதிகா, மூன்றாமிடத்தை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கே.பிரசாந்தினி ஆகியோர் தமதாக்கினர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் போட்டிகள்

உடுவில் மேற்கு பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் குறித்த பாடசாலையின் மைதானத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

உடுவில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் தி.தியாகச் சந்திரனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவர் திருமதி. ரதினி காந்தநேசன் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

**வேலை வாய்ப்பு**

எமது நிறுவனமானது யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசத்தில் புதிய கிளைகள் ஆரம்பிக்கவுள்ளதால் அக் கிளைகளுக்கான

- ★ அலுவலக கணக்காளர்
- ★ களஞ்சிய பாதுகாவலர்
- ★ மேற்பார்வையாளர்
- ★ உதவி முகாமையாளர்
- ★ முகாமையாளர்

ஆகிய பதவி வெற்றிடங்களுக்கு O/L, A/L மேல் படித்தவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**குறிப்பு:-**
E.P.F. E.T.F மருத்துவ வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகளும் உண்டு

**தொடர்பு:-** (J-2193)(10)
0711873807 / 077 6953242 / 0767948311




# அல்பேனியாவை வீழ்த்தி சுப்பர் 16 சுற்றில் பிரான்ஸ்




ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான யூரோ கிண்ணத் தொடரில் அல்பேனியாவை 2:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சுப்பர் 16 சுற்றுக்கு முன்னேறியது பிரான்ஸ்.

தொடர் பிரான்ஸில் நடைபெற்று வருவதால் ரசிகர்களின் ஆதரவு அந்த அணிக்கு மிகையாகவே இருந்தது. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான். கிட்டத்தட்ட ஆட்டம் முடிவுக்கட்டத்தை எட்டியாயிற்று கோலெதுவும் பதிவாகவில்லை.

90 ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் சார்பாக முதல் கோலைப் பதிவுசெய்தார் கிரிசிமான். அடுத்த நிமிடத்தில் பாயட் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது பிரான்ஸ். (ம)

**போட்டிப பரீட்சை வகுப்புக்கள்**

**SLAS Ltd**
சனி, ஞாயிறு
காலை 9.00-4.00

**SLEAS Ltd**
சனி 12.30-4.00
ஞாயிறு 10.00-4.00
மணிவரை

**Auditor**
கணக்காய்வாளர்
பிரதி ஞாயிறு
9.00-4.00 மணிவரை

**Gs**
சமுர்த்தி
பிரதி சனி
பி.ப1.00-4.00மணிவரை

சட்டமாணி சங்கம்
பிரதி ஞாயிறு
2.00-5.00 மணிவரை

வடமாகாண வரி, நன்நடத்தை விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் தெரிவுகளுக்கு
சனி 1.30-5.00
மணிவரை

T.P 076 688 3394
021 222 3382

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமஷல் வங்கி அருகில்)

SLAS பரீட்சைக்கான இறுதி வகுப்புக்கள் வெள்ளவத்தை தமிழ் சங்க வளாகத்தில் நடைபெறும்

## ரி-20 தொடரில் சிறப்பாகச் செயற்படுவோம் சிம்பாப்வேயின் தலைவர் கிரீமர் தெரிவிப்பு

இந்தியா- சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடரில் சிறப்பாகச் செயற்படக்கூடிய நம்பிக்கை உள்ளதாக சிம்பாப்வேயின் தலைவர் கிரீமர் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் தொடரை 3:0 என்று இழந்ததைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஏனெனில் நான் தற்போது ரி-20 தொடரைப் பற்றித்தான் நினைக்கிறேன். ஒருநாள் ஆட்டங்களில் அடைந்த தோல்வியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தால் முன்னேறமுடியாது. அடுத்து என்னவோ அதைத்தான் சிந்திக்க வேண்டும். ரி-20 தொடரில் சிம்பாப்வே மீண்டு எழும். சிறப்பான போராட்டத்தை வெளிப்படுத்தும். ஏனெனில் இது குறுகிய நேரத்துக்கான ஆட்டம். ஆட்டத்தின் ஒருசில விடயங்களை எமக்குச் சாதகமாக மாற்றிவிட்டால் முடிவையும் எமது பக்கம் திருப்பிவிடலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

**விசேட இறுதிக்க கருத்தரங்கு**
25,26ம் திகதிகளில் நடைபெறவுள்ள
**SLAS (Limited)**
Sat, 9.00-4.00pm

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
சமுர்த்தி, கிராம சேவகர், சட்டமாணி
Sat, 2.00-5.00pm
விரிவுரையாளர்கள்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்

**நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 077 469 6695
(C 22027)(10)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.